295

விவேக போதினி

தொகுதி 24 } பிரஜோத்பத்தி௵ மாசி௴ :: 1932-ம் ௵ பிப்ரவரி௴ } பகுதி 2

முருகன் வழிபாடு

WORSHIP OF LORD MURUGA

ஏறுமயி லேறிவிளை யாடுமுக மொன்றே
ஈசருடன் ஞானமொழி பேசுமுக மொன்றே
கூறுமடி யார்கள்வினை தீர்க்குமுக மொன்றே
குன்றுருவ வேல்வாங்கி நின்றமுக மொன்றே
மாறுபடு சூரரை வதைத்தமுக மொன்றே
வள்ளியை மணம்புணர வந்தமுக மொன்றே
ஆறுமுக மானபொருள் நீயருளல் வேண்டும்
ஆதி யருணாசல மமர்ந்த பெருமாளே.

சங்கரிதன் மருமகளைச் சங்கரிதன் மகளைச்
சங்கரிக்குஞ் சங்கரனை மாமனெனுந் தையலை
வெங்கரிதந் திடுபிடியை விண்ணவர்கோன் சுதையை
விண்ணவர்கள் பணிந்தேத்தும் விண்ணுலகத் தணங்
பைங்கழுநீர் விழியாளைப் பைங்கழுநீர் நிறமே [கைப்
படைத்தாளைப் பைங்கழுநீர் செங்கரங் கொண்டாளைச்
செங்கமலை தருமமுதைக் கந்தரிடத் தமருந் [வாம்.
தெய்வயானை யைத்தொழுது திருவருள் பெற்றிடு

மாதவனோர் மாதவனும் மாதவஞ்செய் திடலும்
வனமானும் வந்தெதிர்ந்த மலர்மானைப் புணரப்
பூதலமங் கையருருவாய வதரித்து வள்ளிப்[வளர்ந்து
பொருப்புறையும் பொருப்பர்மனை விருப்பமுடன்
தீதகலுந் தினைகாத்து வேங்கையுரு வெடுத்த
செவ்வேளை யவ்வேளைச் சேர்ந்திருகைக் கோளுங்
காதலுடன் புரிந்திறைவன் வலப்பாகத் தமருங்
கன்னியெனும் வள்ளிகழ லுன்னி வழுத்திடுவோம்.

அதல விதலமுத லந்தத்த லங்களென
அவனி யெனஅமரர் அண்டத்த கண்டமென
அகில சலதியென எண்டிக்குள் விண்டுவென
அங்கிபானு-
அமுத கதிர்களென அந்தித்த மந்த்ரமென
அறையு மறையெனஅ ருந்தத்து வங்களென
அணுவி லணுவெனநி றைந்திட்டு நின்றதொரு
சம்ப்ரதாயம்;
உதய மெழஇருள்வி டிந்தக்க ணந்தனிலி
ருதய கமலமுகி ழங்கட்ட விழ்ந்துணர்வி
லுணருமநுபவம னம்பெற்றிடும்படியை
வந்துநீமுன்-
உதவ இயலினியல் செஞ்சொற்ப்ர பந்தமென
மதுர கவிகளில்ம னம்பற்றி ருந்துபுகழ்
உரிய அடிமையுனை யன்றிப்பர பஞ்சமதை
நம்புவேனோ.

---

*　　　*　　　*

ஏகாந்த வீரம் போற்றி நீலாங்கயானம் போற்றி
யேடார்ந்த நீலம் போற்றி　　　முகில்தாவி
ஏரேங்க லேழுசாய்த்தான்மூன்று தோளும்போற்றி
யார் வேண்டினாலும் கேட்ட　　　பொருளீயும்
த்யாகாங்க சிலம்போற்றி வாயோய்ந்திடாதன்றூர்த்து
தேசாங்க சூரன் தோற்க　　　மயிலேறிச்
சேவேந்தி தேசம் பார்க்க வேலேந்தி மீனம் பூத்த
தேவோத்ர லோகங் காத்த　　　பெருமாளே.

மூவிரு முகங்கள் போற்றி
முகம்பொழி கருணைபோற்றி
ஏவருந் துதிக்க நின்ற வீராறு
தோள் போற்றி காஞ்சி
மாவடி வைகும் செவ்வேள்
மலரடி போற்றி யன்னான்
சேவலு மயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி.

லீலா சுகர்

LEELA SUKHAR

முன்னொரு காலத்தில் வில்வமங்களன் என்ற ஒரு பணக்காரச் சிறுவன் இருந்தான். அவன் சைவ மார்க்கத்தைச் சேர்ந்து அதற்குரிய சிவ தீக்ஷை முதலியவைகளைப் பெற்றிருந்தனன்; நல்ல குலத்தில் பிறந்தவன். இப்படி இருந்தும் இளமை முதல் ஏராளமான செல்வத்திலும் செல்வாக்கிலும் வளர்ந்து வந்ததினாலும், எப்பொழுதும் முகஸ்துதி பண்ணுபவரால் சூழப்பட்டிருந்ததினாலும், இவன் குணம் வரவர மழுங்கிக்கொண்டே வர, இவனுக்கு யௌவன வயதில் வேசையர் நேசமும் வந்து சேர்ந்துவிட்டது. கேட்கவேண்டுமா! நல்ல பணக்காரனுக்கு துஸ்ஸங்கமும், பெண்ணாசையும் வந்துவிட்டால், காற்றும் தீயும் கலந்துவிட்டாற்போல்தானாகும். ஆதலால் வில்வமங்களன் யௌவன காலமெல்லாம் பரஸ்திரீ கமனம், மதுபானம் முதலிய தீய வழிகளில் கழியத் தொடங்கியது.

இப்படி இருக்கையில் இவன் சிந்தாமணி என்ற ஒரு தாஸியைக் காணும்படி நேர்ந்தது. அவள் மிகுந்த அழகு பொருந்தியவளாகவும் யௌவன வயதுடையவளாகவும், பாட்டு முதலிய ரஸவிஷயங்களில் மிகத் தேர்ச்சி அடைந்தவளாகவும், கூரிய புத்தி முதலிய சிறப்புவாய்ந்தவளாகவும் இருந்தாள். இவளைக் கண்டதும் வில்வமங்களனுக்கு அடங்காக்காதல் உண்டாகிவிட்டது. வெறும் வாயை மென்றவன், அவல் கிடைத்தால் விடுவானா? வில்வமங்களன் சிந்தாமணி பாதங்களில் சரணமாக விழுந்து, அவள் வீட்டிலேயே பழியாகக் கிடந்துவிட்டான். இவன் திரவ்யம் எல்லாம் தடையின்றிச் சிந்தாமணிக்கு அர்ப்பிதம் செய்யப்பட்டன. வாவர தன் வீட்டிற்குப் போவதைக்கூட முற்றிலும் இவன் நிறுத்திவிட்டான். இவனுக்கு வயது முதிர்ந்த தாய்தந்தையர் இருவர் இருந்தனர். தாய் ஓயாது அழுது கண் வீங்கி பிள்ளையின் நிலையால் ஏற்பட்ட துக்கம் ஆறாமல் கண்களை இழந்தாள். தகப்பனாரோ தம் பிள்ளையை மீட்க எவ்வளவோ உபாயங்கள் செய்தார். ஒன்றும் பயன்படாமற்போக மனம் சிதைந்து, முடிவில் மரணம் அடைந்தார்.

தகப்பனார் ஈமக்கடன்களைச் செய்து முடிக்க வில்வமங்களனை அழைக்க அநேகர் முயன்றனர். அவனுக்கோ சிந்தாமணியைத் தவிர வேறு உலகமே இருப்பதாகத் தோற்றாததால், இவர்கள் முயற்சிகள் வீணாயின. அப்பொழுது வேறு ஒரு வழியும் இல்லாததுகண்டு, இவர்கள் நேரே சிந்தாமணியிடமே சென்று விண்ணப்பம் செய்துகொண்டு முறையிட்டனர். என்ன? தாஸியானால்தான் என்ன? இவ்வளவு பெயர்கள் சேர்ந்து சொல்லும்பொழுது மனம் இளகாமலிருக்குமா! மேலும் அவள் நுட்பபுத்தி யுடையவள் அல்லவா? உடனே அவள் தன் காதலனைத் தகப்பன் வீடு அனுப்புவதாக வாக்களித்தாள். வில்வமங்களனிடம் வந்து சங்கதிகளைச் சொல்லித் தகப்பன் வீடு போகும்படி ஏவினாள். அவன் கேட்கவில்லை. 'இந்தப் பத்தாம் நாள் கடனை முடித்துவிட்டு நாளை இங்கே வந்துவிடலாம். இந்தக் கர்மத்தை விட்டு விடக்கூடாது; போய் வா!' என்று அவள் எவ்வளவோ மன்றாடினாள். காதற் கடலில் மூழ்கிக் கிடந்த அவன் செவியில், தன் காதலியின் அப்ரிய மொழி ஏறவேயில்லை. உடனே அவளுக்குக் கோபம் வர, அவள் அவனை அடித்துத் தன் வீட்டை விட்டுத் துரத்திவிட்டாள்.

பார்த்தான் வில்வமங்களன்! என்ன செய்வான்! வேறு கதியில்லை! தகப்பன் வீடு சென்று அன்று ஈமக்கடன்களை முடித்துவிட்டு வந்தால்தான், தன் காதலி தன்னைச் சேர்த்துக் கொள்ளுவாள் என்று நன்கு அறிந்தான். உடனே ஓடோடியும் தன் வீடு வந்து ஈமக்கடன்களைச் செய்யத்தொடங்கினான். வாய்மந்திரம் சொன்னபோதிலும், மனம் சிந்தாமணியினிடமே, ஸதா பாய்ந்து கொண்டிருந்தது. 'எத்தொழிலைச் செய்தாலும் ஏதவத்தைப் பட்டாலும் முத்தர் மனமிருக்கும் மோனத்தே' என்பதுபோல, வில்வமங்களன் மனோ நிலையும் இரண்டுபட்டிருந்தது. இந்தக் கர்மம் எப்பொழுது தொலையும் என்று கர்மத்தில் மனம் செல்ல, அதை வேகமாகவும் நடத்தினான்; ஒழிந்தால் சிந்தாமணியிடம் போய் ஆநந்திக்கலாமே என்ற எண்

தெளிவி லதனைத் தொடங்கா ரிளிவென்னு மேதப்பா டஞ்சு பவர்.

ணம் விடாது அவன் மனத்தில் உள்ளூற ஊறிக்கொண்டும் இருந்தது. என்ன வேகமாகக் காரியங்களை நடத்தியும் மாலைப்பொழுது வரையில் காரியங்கள் முடியவில்லை. முடிந்ததும், 'சட்டி சுட்டது கைவிட்டது' என்ற கதையாக, சனி தொலைந்தது என்று வில்வமங்களன் அடங்காக் காதலால் தூண்டப்பட்டு சிந்தாமணி வீட்டை நோக்கிப் புறப்பட்டான்.

அன்று மாலைப்பொழுதிலேயே இருள் வந்து மூடிக்கொண்டது. ஆகாயத்தில் கரிய நீருண்ட மேகங்கள் பந்தி பந்தியாய் ஸஞ்சரித்து, கரிய மலைப்பாம்புகள் ஒன்றை ஒன்று விழுங்குவது போல, ஒன்றனுள் ஒன்றாகப் பாய்ந்தோடிப் பறந்தன. மின்னல்கள் ஆகாயம் எங்கும் கொஞ்சநாழிகைக்கு ஒருதரம் பளீர் பளீர் என்று வெட்டி மறைந்தன. அன்று இடித்த இடிக்கோ கணக்கே இல்லை. கூடக் காற்றும் மழையும் சேர்ந்துவிட்டது. அப்பு தேஜஸ் வாயு ஆகிய மூன்று பூதங்களும் ஒன்றாகச் சேர்ந்து பேசிக்கொண்டு, பூமியை அழிக்க யத்தனித்து விட்டனவோ என்று தோற்றியது. இந்த அல்லோல கல்லோலத்தின் இடையில், வில்வமங்களன் பயித்தியம் பிடித்தவன்போலச் சிந்தாமணியை நினைத்துக்கொண்டு புறப்பட்டு விட்டான். அவனுள்ளே இருந்த காதலும், பிரிவாற்றாமையால் ஏற்பட்ட கொடிய துக்கமும், அவன் உணர்ச்சியை மழுங்கும்படிச் செய்துவிட்டன. ஒரு விஷயத்தில் ஒருவன் மனம் ஊன்றிப்

பாய்ந்துவிட்டால், வேறு எதுவும் அவனுக்குத் தோற்றவே மாட்டாது. ஆதலால், வில்வமங்களனுக்குக் காற்றும்மழையும் கலந்து அடிப்பது தெரியவே இல்லை. வெறிபிடித்தவன்போல ஓடி வந்து ஓர் ஆற்றின் கரை சேர்ந்தான்.

இதற்குள் நன்றாக இருட்டிவிட்டது. அக்கரையில்தான் சிந்தாமணி வீடு. ஆற்றில் பெருவெள்ளம் கரை புரண்டு ஓடியது. இதை எப்படிக் கடந்துபோவது என்ற ஏக்கம் வில்வமங்களனுக்கு வந்துவிட்டது. எப்படியாவது போய்த்தான் தீரவேண்டுமென்ற திருட சித்தம் அவனை விட்டு அகலவில்லை. அவன் அதிருஷ்டம், எதிரில்

ஏதோ தண்ணீரில் மிதந்து போவதைக் கண்டான். நல்லகாலம் என்று தண்ணீரில் குதித்தான். அதை மிகுந்த ஆவலுடன் பிடித்துக்கொண்டு நீந்தி வெகு சீக்கிரத்தில் ஆற்றைக் கடந்தான். அக்கரை சேர்ந்தான். உடனே, சிந்தாமணி வீட்டண்டையும் வந்துவிட்டான். இந்தக் கால் வீசிப் பொழியும் கனமழையில் யார்தான் வீட்டைத் திறந்து வைத்துக்கொண்டிருப்பார்கள்? சிந்தாமணி வீடு சாத்தியிருந்

தது. சுற்றுமுள்ள சுவர்களோ வெகு உயரமாக இருந்தன! மறுபடியும் வில்வமங்களனுக்கு ஏக்கம் உண்டாகிவிட்டது. ஆயினும் அவன் மன உறுதியோ மாறவில்லை. 'எப்படியாவது உள்ளே போய் விடவேண்டும்' என்று ஜபம் பண்ணிக்கொண்டு, சிந்தாமணி வீட்டைச் சுற்றிச் சுற்றிப் பிரதக்ஷணம் செய்தான். இவ்வாறு வரும் பொழுது, சுவரிலிருந்து கயிறு ஒன்று தொங்கிக்கொண்டிருக்கக் கண்டான். கண்டதும் ஆநந்தக் கூத்தாடி அதைப் பிடித்துக்கொண்டு சுவரில் ஏறி முற்றத்தில் குதித்துச் சிந்தாமணி படுக்கை அறையுள் புகுந்தான். அங்கு அவள் உண்டு வெற்றிலை போட்டுக்கொண்டிருப்பதைக் கண்டு, 'வந்துவிட்டேன்! நீ சொன்னபடி எல்லாம் செய்துவிட்டு' என்று கூவிக்கொண்டே அவளை அணுகினான்.

இவன் கிட்டே வருங்காலத்தில் இவன் மேலிருந்து, ஒரு துர்நாற்றம் வீசியதைக் கண்டு,

"இந்தக் காற்றுமழையில் எப்படி வந்தாய்? என் உன்னிடம் இந்தத் துர்நாற்றம் உண்டாயிற்று?" என்று சிந்தாமணி கேட்டாள். அப்பொழுது தான் தன்மேலிருந்த துர்நாற்றம் அவனுக்குத் தெரிய வந்தது. அந்த நாற்றத்தை அவனால்கூட ஸஹிக்க முடியவில்லை. "என்ன காரணமோ அறியேன். உன்மீது இருந்த காதலினால் சடங்கு முடிந்ததும் வீட்டை விட்டுப் புறப்பட்டது தான் தெரியும். ஆற்றங்கரை வந்து அதைக்

கடந்து உன் வீட்டுச் சுவர் ஏறிக் குதித்து இங்குக் கடிதினில் வந்தேன் உன் மேலிருந்த காதலால்'' என்றான் வில்வமங்களன். "எப்படி, இந்த உயர்ந்த சுவர் ஏறிக் குதித்தாய்? ஆற்றைக் கடந்தாய்'' என்று மிகுந்த ஆச்சரியத்துடன் கேட்டாள் சிந்தாமணி. வந்தவழியை ஸாங்கோபாங்கமாய் எடுத்துரைத்தான் வில்வமங்களன். எவ் வீட்டுச் சுவரில் உனக்கு யார் கயிறுகட்டியிருந்தார்கள்? அப்படி ஒரு கயிறு இருந்ததாக ஞாபகம் எனக்கு இல்லையே! பார்ப்போம்'' என்று புறப்பட்டாள். இதற்குள் மழை சற்று ஓய, வேலைக்காரன் விளக்கெடுத்து முன்னே செல்ல, சிந்தாமணியும் வில்வமங்களனும் வெளியே போய் வீட்டைச் சுற்றிப் பார்த்தார்கள். அவன் தான் ஏறிய விடத்தைக் காட்டினான். அங்கு ஒரு கயிறு தொங்கிக்கொண்டிருந்தது. அதை உற்றுப்பார்க்கையில் அஃது ஒரு கொடிய கிருஷ்ண சர்ப்பமாக விருந்தது. பதறிவிட்டாள் சிந்தாமணி! என்னகாரியம் செய்தாய்! கணம் தப்பினால் மரணம் வந்திருக்குமே! ஏன் இப்படி உயிரை வெறுத்தாய்?' என்று நடுநடுங்கிக் கேட்டாள். ஆறு கடந்து வந்த வழியைப் பார்க்க இவர்கள் ஆற்றங்கரை போனார்கள். அங்கு ஒரு பிணம் ஒதுக்கப்பட்டிருந்தது. அது உருச் சிதைந்து அழுகிக் கிடந்தது. அதன் நாற்றம வில்வமங்கனன்மேலிருந்த நாற்றம்போலிருந்தது. 'இந்தப் பிணத்தைப் பிடித்துக்கொண்டா வந்தாய்! இப்பொழுதுதான் உன் காதலின் பெருமை வெளியாகின்றது. என்னிடத்தில் இவ்வளவு காதலா உனக்கு! பிணம், பாம்பு, காற்று, மழை இவைகள் எல்லாம் உன் காதலின்முன் ஒரு பொருட்டாகத் தோற்றவில்லை போலும்! நானோ ஓர் அற்ப வேசை! உன் முழுமனக் காதலை என்னால் எப்படித் தாங்கமுடியும்! அதைப் பெற எனக்கு யோக்கியதை இல்லையே! இம்மாதிரியான மனப்பற்றுக்குத் தக்க கைம்மாறு என்னால் என்ன செய்யமுடியும்? இந்தக் காதலின் லவலேசத்தை பகவானிடம் நீ வைத்திருந்தால், உனக்கு எவ்வளவு மேன்மை உண்டாயிருக்கும்! உன் முழு மனப்பற்றை வஹித்துத் தக்கபடி உன்னை சிறப்படையும்படி செய்ய அந்தப் பரம்பொருளுக்கே திறமையுண்டு!' என்று மிகுந்த பரபரப்புடன் மொழிந்தாள்.

இந்த வாக்கு வில்வமங்களன் மனதில் நன்றாகப் பதிந்தது. கொஞ்ச நாழிகை அசையாது ஸ்தப்தமாக நின்றான். மனம் மாறியது. 'சிந்தாமணி! நீ சொன்னது முற்றிலும் உண்மை?' என்று மிக உருக்கமாகக் கூறினான். உடனே அங்கிருந்து ஓட ஆரம்பித்தான். சிந்தாமணி அவனைத் தடுக்க யத்தனித்தாள்; முடியவில்லை. வில்வமங்களன் போயே போய்விட்டான். போனவன் சும்மா போகாமல் ஸோமகிரி என்ற

ஞான சத்குருவைக் கண்டான். அவர் கிருஷ்ண பக்தியை வில்வமங்களனுக்கு உபதேசித்தார். கிருஷ்ணன் லீலைகளில் அவன் ஈடுபட்டான்; மனம் உருகியது; சிற்றின்ப உணர்ச்சிகள் கழன்றன. இதனால் இவனுக்கு லீலாசுகர் என்ற பெயரும் வந்தது.

தமக்கு ஞானம் உண்டாகக் குருவாக இருந்தவர்களைப்பற்றி லீலாசுகர் பின்வருமாறு எடுத்துப் பாராட்டுகிறார் :—

எண்ணித் துணிககருமக் துணிந்தபி னென்னுவ மென்ப திழுக்கு.

சிந்தாமணிர்ஜயதி ஸோமகிரிர் குருர்மே
சிக்ஷாகுருச்ச பகவான் சிகிபிஞ்சமௌளி: |
யத்பாத கல்பதரு பல்லவசேகரேஷு
லீலாஸ்வயம்வரரஸம் லபதே ஜயச்ரீ: ||

சிந்தாமணி ஜயத்தோடு விளங்குகிருர்; எனது குரு ஸோமகிரியும் ஜயத்தோடு விளங்குகிருர்; ஜயலக்ஷ்மி எவரது பதமாம் கல்பகத் தளிர்களின் நுனியில் விளையாட்டாகத் தானே

போய் அமர ஆசைகொள்வாளோ அப்பேர்ப்பட்டவரும், மயில் தோகையைத் தலையில் அணிந்தவருமான சிக்ஷா குருவாம் ஸ்ரீ கிருஷ்ண பகவானும் ஜயத்தோடு விளங்குகிருர். (இவர்களுக்கு ஜே! என்றவாறு.)

தாம் முன் சிவதீக்ஷை பெற்றவராய் இருந்தும், தம் மனம் கிருஷ்ணனிடமே ஈடுபட்டு நிற்கின்றது என்பதைப் பின்வருமாறு லீலாசுகர் வெளியிடுகிருர்.

சைவா வயம் நகலு தத்ர விசாரணீயம்
பஞ்சாக்ஷரீ ஜபபரா நிதராம் ததாபி |
சேதோ மதீய மதஸீ குஸுமாவபாஸம்
ஸ்மேரானனம் ஸ்மரதி கோபவதுகிசோரம் ||

'நாங்கள் சைவர்கள்; அதைக் கேட்கவேண்டியதே இல்லை; அதிலும் பஞ்சாக்ஷரீயை அதிகமாக ஜபம் செய்கிறவர்கள். ஆகிலும் என் மனம், காசாம்பூ வர்ணத்தை உடையவராயும், கோப ஸ்திரீகள் குழந்தையாயும் உள்ள மந்தஹாஸ முகம் பொருந்திய கிருஷ்ணமூர்த்தியை ஸ்மரிக்கிறது.

கிருஷ்ண லீலைகளில் ஈடுபட்டு இவர் கிருஷ்ண கர்ணாம்ருதம்* என்ற ஒரே நூல்தான் செய்திருக்கிருர். இந்த ஒரு நூலும் ஒப்புயர்வற்றது. இதில் சிலவிடங்களில் சாதாரணமான பழமொழிகளைப் பகவத் லீலைகளில் ஸம்பந்தப்படுத்தி அநேக சுலோகங்கள் எழுதியிருக்கிருர். அவைகளுள் 'பூனை கண் மூடினல் உலகம்

*விவேக போதினி 16, 17, 18-ம் தொகுதிகளில் ஸ்ரீ கிருஷ்ணகர்ணாம்ருதத்தை, மிக அழகாகவும் எளிய நடையிலும், ஸ்ரீமான் எ. வரதாசாரியார், பி.எ., எல்.டி. அவர்கள் எழுதியுள்ளார். அதை நேயர்கள் வாசித்து இன்புறுதல் மிகவும் அவசியம். ஷை 3-தொகுதிகளும், ஒவ்வொன்றிலும் (சில பிரதிகளே கைவசமிருக்கின்றன) சந்தாதார்க்கு ரூ. **13-8-0**-க்குப் பதிலாக ரூ. **10-8-0**-க்கு கொடுக்கப்படும். இத்தொகுதிகளில் ஸ்ரீ கிருஷ்ண கர்ணாம்ருதம் தவிர, பல அருமையான கட்டுரைகளும் பொதிந்து கிடக்கின்றன என்பதை நேயர்களுக்கு அதிகமாய் விவரிக்க வேண்டியதில்லை. [ஸ்ரீ ஜயதேவரியற்றிய அஷ்டபதி என்ற கீதகோவிந்தம், என்னும் அரிய நூலும், பாபநாசம் ஸ்ரீமான் சிவன் அவர்களால் அழகாய் எழுதப்பட்டு, **23**-ம் தொகுதி முதல் வெளிவருகிறது.]

அஸ்தமித்துவிடுமா?' என்னும் பழமொழியைத் தழுவி பகவான் கண் மூடினால் உலகம் அஸ்தமிக்கும் என்னும் கருத்தைக் குறிப்பாகப் பின்வரும் சுலோகத்தில் வெகு அழகாக லீலா சுகர் காட்டுகிறார்.

மாத : கிம் யதுநாத தேஹி சஷகம்
  கிம் தேன பாதும் பய :
தந்நாஸ்த்யத்ய கதாஸ்தி வா
  நிசிநிசா கா வா அந்தகாரோதயே : |
ஆமீல்யாக்ஷியுகம் நிசாப்யுபகதா
  தேஹீதி மாதுர் முஹு :
வக்ஷோஜாம்சுக கர்ஷணோத்யத கர :
  க்ருஷ்ண : ஸ புஷ்ணாது ந:

அம்மா! என்ன யதுநாதா? அந்தப் பாத்திரத்தைக் கொடு. எதற்காக? பால் குடிக்க. இப்பொழுது பால் கிடையாது. பின்னே எப்பொழுது கிடைக்கும்? இரவில். அது எப்பொழுது வரும்? இருள்வந்து மூடிக்கொண்டால். கிருஷ்ணன் உடனே தன் இரு கண்களையும் மூடிக்கொண்டு, இருள் மூடிவிட்டது பால் கொடு, பால் கொடு! என்று மன்றாடினார். இத்தகைய கிருஷ்ணன் நம்மைக் காப்பாற்றட்டும்.

'ஏனடா தென்னைமரத்தில் ஏறுகிறாய்? புல்லுப் பறிக்க ஏறுகிறேன். அங்கே ஏதடா புல்? அதுதான் இறங்குகிறேன்' என்று தோட்டக்காரனைக் கண்டு, தென்னை மரத்திலிருந்து இறங்கும் திருடன் கூறியதாக சாதாரண கதை ஒன்று உண்டு. அதைப் பகவான்மேல் ஏற்றிச் சிறு பிள்ளையாக இருக்கையில் அதிக புத்தி சாதுர்யம் காட்டிய பகவானைப் பின்வருமாறு புகழ்ந்து பேசுகிறார்.

கஸ்த்வம் பால பலானுஜ : கிமிஹதே
  மன்மந்திரா சங்கயா
யுக்தம் தந்நவநீத பாத்ர விவரே
  ஹஸ்தம் கிமர்த்தம் ந்யஸே: |
மாத : கஞ்சன வத்ஸகம் ம்ருகயிதும்
  மா கா விஷாதம் க்ஷணாத்
இத்யேவம் வரவல்லவீ ப்ரதிவச :
  க்ருஷ்ணஸ்ய புஷ்ணாது ந : ||

நீ யார் குழந்தாய்? பலராமர் தம்பி. உனக்கு இங்கே என்ன வேலை? இது என் வீடென்று எண்ணினேன். எதற்காக வெண்ணெய்ப் பாத்திரத்தில் கையிட்டாய்? கோபித்துக் கொள்ளாதே அம்மா! காணாமற்போன கன்றைத் தேடுகிறேன் என்று இம்மாதிரி தயங்காது கோபிகளுக்கு விடை அளித்த கிருஷ்ணன் நம்மைக் காப்பாற்றட்டும்.

விடர்கள் தமது ஸ்திரீகளைப்பற்றி ஏங்கி, 'அவர்கள் ஆபரணமாக இருக்கமாட்டோமா! அவர்கள் கழுத்தைத் தொட்டுக்கொண்டிருக்க' என்று கூறித் தமது விரகதாபத்தைக் காட்டுவது வழக்கம். அம்மாதிரி விசேஷ பக்தியைப் பகவானிடம் செலுத்தி, லீலாசுகர் பகவான் வேணுகான அவஸரத்தைப் பின்வருமாறு எண்ணி ஈடுபடுகிறார்.

அபி ஜனுஷி பரஸ்மின் ஆத்தபுண்யோ பவேயம்
தடபுவி யமுனாயா : தாத்ருசோ வம்சநால: |
அனுபவதியயேஷ : ச்ரீமதாபீரஸூனோ:
அதரமணிஸமீப ந்யாஸ தன்யாமவஸ்தாம் ||

ஆ! யமுனைக் கரையில் ஜன்மாந்திரத்திலாவது அந்த மங்களகரமான புல்லாங்குழலாகக் கிடைக்குமா? என்றைக்கு வருமோ அந்நிலை! அந்தப் புல்லாங்குழலின் நிலை! எவ்வளவு சிறந்ததாயும் எல்லோராலும் விரும்பத்தக்கதாயும்

இருக்கிறது! பகவானது உதடுகளாகிய மணிகளுக்கு எவ்வளவு அருகாமையில் நிலைபெற்றிருக்கிறது ?

பகவான் மண் தின்று விசுவரூபம் காட்டிய லீலையை இவர் பின்வருமாறு எடுத்து விவரிக்கிறார்.

க்ருஷ்ணேனம்ப கதேந ரந்துமதுநா
ம்ருத்பக்ஷிதா ஸ்வேச்சயா
தத்யம் க்ருஷ்ணக ஏவமாஹ முஸலீ
மித்யாம்ப பச்யானனம்
வ்யாதேஹீதி விதாரிதே சவதநே
த்ருஷ்ட்வா ஸமஸ்தம் ஜகத்
மாதா யஸ்ய ஜகாம விஸ்மய
பதம் பாயாத் ஸ ந : கேசவ :

'கிருஷ்ணன் விளையாடிக்கொண்டிருக்கையில் ஏராளமாக மண் தின்றான், அம்மா!' (என்றார் பலராமர்.) 'இது உண்மையா ?' (என்று கேட்டாள் தாய்.) 'இது யார் சொன்னது?' 'முஸலாயுதத்தை உடையவர்' அது முழுப் பொய். என் வாயைப் பார் அம்மா !' என்று கிருஷ்ணன் திறந்த வாயுள் (மண்ணைக் காண யத்தனித்த) தாய் அண்டங்களை யெல்லாம் கண்டு ஆச்சரிய பரவசளாயினாள். இப்படிச் செய்த பகவான் நம்மைக் காக்கட்டும்.

பகவான் வேணுகானச் சிறப்பை இவர் பின்வருமாறு எடுத்து விஸ்தரித்து ஆநந்த பரவசராகிறார்.

லோகானுன்மதயன் ச்ருதீர் முகரயன்
க்ஷோணீருஹான் ஹர்ஷயன்
சைலான் வித்ரவயன் ம்ருகான் விவசயன்
கோவ்ருந்த மாநந்தயன் |
கோபான் ஸம்ப்ரமயன் முனீன் முகுளயன்
ஸப்தஸ்வரான் ஜ்ரும்பயன்
ஓங்காரார்த்த முதீரயன் விஜயதே
வம்சீநிநாத : சிசோ : ||

ஆ! அந்தப் பாலகன் ஊதும் வேணுநாதச் சிறப்பை என்னென்று எடுத்துரைப்பேன் ! அது உலகங்களை உணர்விழக்கும்படி செய்கின்றது. வேதப் பொருள்களை விள்ளுகின்றது ; அதைக் கேட்டு மரங்கள் சந்தோஷிக்கின்றன! மலைகள் உருகுகின்றன, (மான் பசுக்கள் முதலிய) மிருகங்கள் ஆநந்த பரவசமாகின்றன. அது முனிகள் மனதைக் குவிக்கின்றது, ஸப்த ஸ்வரங்களையும் பேசுகின்றது, ஓங்காரப் பொருளையும் விளக்குகின்றது.

பகவான் லீலைகள் இவ்வாறிருப்பதால் கிருஷ்ணனே வேத ரஹஸ்யம் என்பதைப் பின்வருமாறு வற்புறுத்துகிறார்.

வரமிமமுபதேச மாத்ரியத்வம்
நிகமவனேஷு நிதாந்த சாரகின்ன: |
விசிநுத பவனேஷு வல்லவீனும்
உபநிஷதர்த்த முலூக லேனி பத்தம் ||

சாஸ்திரங்களாகிற காட்டில் அலைந்து திரிந்து முயற்சி வீணாகித்தவிக்கும் ஜனங்களே! கோபிகைகள் குடிசையில் உரலில் கட்டுப்பட்டிருக்கும் இடத்தில் உபநிஷத் அர்த்தத்தை (கிருஷ்ணனைத்) தேடுங்கள்.

இவ்வாறு சுலோகங்களாலாகிய கிருஷ்ண கர்ணாமிருதத்தைச் செய்து, பகவத் லீலைகளில் ஈடுபடும் மஹா ஞானிகள் அடையும்படியான ஞான நிஷ்டை நிலையையும் முடிவில் லீலாசுகர் அடைந்தார். அந்த ஸமயத்தில் அவர் மனம் இருந்த நிலையைப் பின்வருமாறு தாமே ஆநந்த பரவசமாக எடுத்துரைக்கிறார்.

ஸந்த்யாவந்தன பத்ரமஸ்து பவதே
போ: ஸ்னான துப்யம் நமோ :

எள்ளாத வெண்ணிச் செயல்வேண்டுந் தம்மொடு கொள்ளாத கொள்ளா துலகு.

போதேவா : பிதர:ச தர்ப்பணவிதௌ
நாஹம் க்ஷம : க்ஷம்யதாம்
யத்ர க்வாபி நிஷீத்ய யாதவ குலோத்
தம்ஸஸ்ய கம்ஸத் விஷ :
ஸ்மாரம் ஸ்மார மகம்ஹராமி
தத்லம் மன்யே கிமன்யேன மே ||

ஏ ! ஸந்த்யாவந்தனமே ! உனக்கு மங்களம் உண்டாகட்டும். ஏ ! ஸ்நாநமே ! உனக்கு வந்தனம். தேவதைகாள் ! பிதிர்க்களே ! தர்ப்பணம் பண்ணும் முறையில் பழகச் சக்தியில்லை. பொறுத்துக் கொள்ளவேண்டும். எங்கேயாவது உட்கார்ந்துகொண்டு யாதவகுல திலகராயும், கம்ஸனைக் கொன்றவராயுமுள்ள ஸ்ரீ கிருஷ்ண பகவானை எண்ணி எண்ணிப் பாபத்தினின்றும் நீங்குவேன். இதுவே போதும். மற்றவையால் ஆகவேண்டியதென்ன ?

முடிவில், இத்தகைய மஹான் ப்ரம்ம ஸாக்ஷாத்காரம் பெற்றார் என்று கூறவும் வேண்டுமோ ?

ஓம் தத்ஸத்.

அசையும் படங்கள்

MOTION PICTURES

[ஸ்ரீமான் ஏ. வரதாச்சாரியார் அவர்கள், பி.ஏ., எல்.டி.]

இங்கிலீஷ் பாஷையில் 'ஸயன்ஸ்' என்று சொல்லப்படும் 'பௌதிக சாஸ்திர ஆராய்ச்சி'யால் ஏற்பட்டுள்ள பலவித நவீன யந்திரங்களுள் சலிக்கும் படங்களின் காட்சி சில வருஷ காலமாய், பிரவித்தி யடைந்து வருகிறது. பயாஸ்கோப் (Bioscope) ஸினிமாடோகிராப் (Cinemotograph) க்ரோனோபோன் (Chronophone) என்னும் சிற்சில பேதங்களுள்ள கருவிகள் மூலமாய் இவ்விதக் காட்சிகள் ஆயிரக்கணக்கான ஜனங்களால் பிரதி தினமும பார்க்கப்படுகின்றன. இந்தச் சித்திரக் காட்சிகள் கற்பிக்கக்கூடிய கல்வியையும், இவைகளாலுண்டாகும் இதர உபயோகங்களையும் முதலில் சற்றுக் கவனித்துப் பார்ப்போம். இக் கருவிகளின் உற்பத்தி, அபிவிருத்தி, அவைகளின் அமைப்பு இவற்றைப் பின்னர் விவரிப்போம்.

மேற்கண்ட விநோதக் காட்சிகளில் ஜனங்களுக்கு விசேஷ விருப்பமிருக்கிறதென்பது எல்லோருக்கும், தெரிந்த விஷயமே. தனிகர்களும், எளியவர்களும், படித்தவர், படியாதார், ஸ்திரீகள், பாலர்கள், விருத்தர்கள் முதலிய எல்லோரும், ஆயிரக்கணக்காய் ஒவ்வொரு நாளும் இவ்வித விநோதங்களைப்பார்க்கப்போவது, சென்னை முதலிய நகரங்களி விருப்பவர்களுக்கு நன்கு விளங்கும். சாமான்ய ஜனங்களுக்கு இக்காலத்திற்கனுகுணமாய் அவரவர்கள் மனோவிகாரத்தை திருப்தி செய்யக்கூடியவும், ஐம்புலன்களுக்குப் பலவிதமாய் இன்பமளிக்கத் தக்கனவாயுமுள்ள நாடகம், சங்கீதக் கச்சேரி, ஸர்க்கஸ் முதலான பொழுதுபோக்கு விநோதங்களைக் காட்டிலும், பயாஸ்கோப் சித்திரப்படங்களைப் பார்ப்பதில் மிக்க ஆசை ஏற்பட்டிருக்கின்றது. இவைகளில் பற்பல மனோபாவங்களுள்ளவர்கள் கண்டுகளிக்கக்கூடிய பலவிதக் காட்சிகள் காண்பிக்கப்படுகின்றன. இதைப் பார்க்க வருபவர்களெல்லோரும் தங்கள் மனதை, பார்ப்பதைவிட்டு, ஒரு க்ஷணங்கூட வேறுவிதம் செலுத்தாமல், ஒரே மனதினராய் இக்காட்சிகளைக் கண்ணுற்றுப் பார்ப்பது இவைகளிடத்திலுள்ள ஆவலுக்கு அறிகுறியே யாகும். சுருட்டு முதலிய லாகிரி வஸ்துக்கள் உபயோகப்படுத்தக் கூடாதென்று நோட்டீஸ் பெரிய எழுத்தில் எழுதியிருந்தும், ஓயாமல் பீடி, ஸிகரெட் என்று பற்பல நாமதேயங்களால் வழங்கும் புகையிலைத் தூமயந்திரங்கள் மூலமாய் இஞ்சினிலிருந்து வருவதுபோல், வாய் மூக்குகளிலிருந்து ஓயாமல் வெளிவிடப்பட்டு மூக்கு, கண், காது இவைகள் நிரம்பக்கூடிய புகையை சகித்துக்கொண்டும், இடம் விட்டு நகர்ந்தால் மறுபடியும் அதே இடம் கிடைக்காதென்று பயந்தோ, காட்சிகளின் ஸ்வாரஸ்யம் போய்விடுமென்று நினைத்தோ, தேகத்தின் ஸ்வாபாவிக உபாதியைத் தீர்த்துக்கொள்ளக்கூடச் சில க்ஷணங்கள் வெளியில் போக மனம் வராமலும், கண்ணை உறுத்துநோக்குவதாலுண்டாகும் கண்ணெரிச்சலைக் கவனியாமலும், அசையாத படங்களிலுள்ள பிரதிமைகள்போல அசை

வற்று, மிக்க சாவதானமாய் ஜனங்கள் நோக்குவதும் அபூர்வ காட்சியே. மேற்சொல்லிய இதரப் பொழுது போக்குக்காக நடைபெற்றுவரும் நாடகம் முதலிய ஏற்பாடுகளில் ஆதிமுதல் அந்தம் வரையில் இவ்வளவு சிரத்தையும், ததேகத் தியானமுள்ள பார்வையும் இல்லையென்பது அநேகருக்கு அநுபவ ஸித்தமா யிருக்கலாம். ஆனால் இவ்வித ஆஸ்தைக்கும் கவனிப்புக்கும் காரணமில்லை யென்று சொல்லக்கூடாது.

இவ்வுலகத்தில் பற்பல நாடுகளிலுள்ள நதி, மலை, சம்பந்தமான காட்சிகளும், அநேக ஜாதியாரின் ஆடை, ஒழுக்கம், வழக்கங்கள் முதலியவற்றை விவரித்துக் காட்டக்கூடிய சரித்திரங்களும் நிலத்திலும், நீரிலும், ஆகாயத்திலும்செல்லும் அற்புத யந்திரங்களின் விவரங்களும், மஹா கோரமான யுத்தக் கருவிகளும், அவைகளா லுண்டாகும் நாசமும், திருடர்கள் வெகு சாமர்த்தியமாய்ப் பிறரை ஏமாற்றித் தங்களுக்கு நேரிடும் ஆபத்திலிருந்து தங்களைத் தப்புவித்துக் கொள்ளச் செய்யும் பிரயத்தனங்களும் இவைகளெல்லாம் தெரிந்துகொண்டு அவர்களைக் கண்டுபிடித்துத் தண்டனைக்கு உள்ளாக்குவதற்காகப் போலீஸ் முதலிய அதிகாரிகள் செய்யும் யுக்திகளும், இன்னும் மற்ற விஷய ஞானமும் ஸுலபமாய் உண்டாக இவ்விதக் காட்சி ஒரு முக்கிய ஸாதனமாகும். அப்ராத்யக்ஷமான கொள்கைகளின் விஷயங்கள், கிருத்தியங்களின் பலன்கள் முதலியவைகள் தவிர, பிரத்தியக்ஷமாய்க் கிரகிக்கக்கூடிய வஸ்து சம்பந்தமான அறிவானது புஸ்தகங்கள் மூலமாய் ஏதோ ஒருவாறு ஏற்படக் கூடியதாயினும், அவைகளை நேரில் காணுவதா லுண்டாவதுபோல், தெளிவாய் புத்தியில் பதியும்படி ஏற்படாதென்பதற்கு சந்தேகமில்லை. நீராவிக் கப்பல் சமுத்திரத்தில் போவதை எப்போதும் பாராத ஒருவனுக்கு, அதைப்பற்றி எவ்வளவு வர்ணித்துச் சொன்னாலும் யதார்த்தமான ஞானம் ஏற்படுவது கஷ்டம். ஒருக்கால் அதில் நம்பிக்கையே ஏற்படாது. அப்படி ஏற்பட்டாலும் ஏதோ ஸ்தூலமான அறிவு உண்டாவதிலும் பிரத்தியக்ஷமாய் பார்ப்பதாலுண்டாகும் வஸ்து ஸ்திதி ஞானமும் மனத்திருப்தியும் விசேஷமே. ஆகாயக் கப்பலைப்பற்றி எவ்வளவு வர்ணித்துச் சொன்னாலும், எழுதினாலும் நேரில் பார்ப்பதுபோலாகுமா? நம் புராணாதிகளிற் சொல்லப்பட்ட விமானங்களைப்பற்றி இதுவரையில் எவ்விதம் நினைத்தார்கள்! சில வஸ்துக்களை, நேர்த்தியான படரூபமாய் வரைந்து காட்டினால் அவைகள் விஷயமாய் ஸ்தூலமான அறிவு ஏற்படலாம். அப்படியிருந்தாலும், சலிக்கும் வஸ்துக்கள் விஷயத்தில் அசையாத சித்திரப் படங்கள் மனதில் நன்றாய்ப் பதியக்கூடிய ஞானத்தை உண்டுபண்ணா. பலவிதமாய் அசைவதைக் காட்டக்கூடிய படங்களைக் கண்ணுற்றால், சற்றேறக்குறைய விஷயங்களை நேரில் பார்ப்பதற்கு ஒப்பாகும். இதர தேசங்களிலுள்ள அதிசயக் காட்சிகளையும், ஜனங்களின் நடை உடை நாகரிகம் முதலிய விஷயங்களையும் புதிது புதிதாய்க் கண்டுபிடிக்கப்படும் யந்திரங்கள் கருவிகளின் அமைப்பையும், ஆச்சரியச் செயல்களையும் தெரிந்து கொள்ள வேண்டுமென்ற ஆவல், பொதுவாய் மனுஷ்ய ஸ்பாவத்திற்கு இயல்பே. இவ்வித ஞானத்தை வெகு தனம் செலவழித்து அநேக அஸௌகரியங்களைப் பொறுத்துக்கொண்டு தேசாந்திர சஞ்சாரம் செய்து தெரிந்துகொள்வது அநேகருக்கு அஸாத்தியமான காரியம். ப்ரத்யக்ஷ ஞானத்துக்கு ஒப்பென்றே சொல்லக்கூடிய அறிவு, பயாஸ்கோப் முதலிய சலிக்கும் படக் காட்சியால் எளியவர்களுக்குக்கூட சுவல்பச் செலவுசெய்து இருந்த இடத்திலேயே கிடைக்கக்கூடுமானால், இவ்விதக் காட்சி உலகில் கல்வி பரவுவதற்கான தற்கால முக்கிய ஸாதனங்களில் ஒன்றென்று சொல்லச் சந்தேகமேயில்லை.

மேற்சொன்னபடி, இவ்விதக் காட்சிகள் பல பேர்களுக்கு விநோத ரூபமாய்க் கல்வி பரவக்கூடிய ஸாதனமா யிருப்பதுடன், இதர விதத்திலும் உபயோகமுள்ளதா யிருக்கின்றன. தனிகர்கள் தங்கள் மூலதனத்தை மற்ற வியாபாரத் தொழில்களில் உபயோகிப்பதுபோல் இவ்விதப் படங்களை அமைத்து வெகுஜனங்கள் பார்க்கும்படி செய்து அதனால் தகுந்த லாபத்தை அடைவதற்கும், எளியவர்களில் பலர் வேலை செய்து ஜீவிக்கவும் அவகாசம் ஏற்படுகிறது. இக்காலத்தில், பல வஸ்துக்கள் உண்டாகி வியாபாரத் தொழில் நடத்தும் சாலைகள் அநேகம் ஏற்பட்டு, அதன் மூலமாய் ஆயிரக்கணக்கான ஜனங்கள் பிழைத்து வருகிறார்கள். நாளடைவில் பயாஸ்கோப் முதலிய யந்திரங்களின் அமைப்பும், காட்சியும் ஒரு பெரிய தொழிலாகி, அநேக தனவான்கள் ஏராளமான தனத்தைச் செலவழித்து

305



உடைத்தம் வலியறிவா ரூக்கத்தி னூக்கி யிடைக்கண் முரிந்தார் பலர்.

இவ்விதத் தொழிற்சாலைகளை ஸ்தாபித்து, அதனால் தங்கள் தங்கள் கைம்முதலுக்குத் தகுந்த லாபமும், இதரர்களுக்குப் பொருளுதவியும் ஞான அபிவிர்த்தி ரூபமான ஒத்தாசையும் ஏற்பட இடமுண்டு.

முதலில், இவ்வித படங்களின் காட்சி சாமான்யமாய்க் கல்விக்கு ஸாதனமாய் இருப்பதைப் பற்றி சொன்னோம். முக்கியமாய் கல்வி இருவகையாகும். (Instruction and Education) மனிதர்களுக்கு இயற்கையாய் மூன்றுவித சக்தியுண்டு. அது தேக போஷணம், புத்திக்கூர்மை, நல்லொழுக்கம் இவை சம்பந்தமானது. இவ்வித சக்தியானது, வரவர விருத்தியாகி, ஒவ்வொருவனும் தன் வாணாளைத் தனக்குச் சுகமாயும், பிறருக்கு உபகாரமாகவும் நடத்தி நற்கதியடைய எந்த ஞானம் ஸாதனமாயிருக்கிறதோ அதுதான் சரியான படிப்பு(Education) அல்லது கல்வி எனச் சொல்லத்தகும். இவ்விதக் கல்வியைப் பரவச்செய்ய வேண்டுமென்கிற எண்ணத்துடன், எல்லாத் தேசங்களிலும் பாடசாலைகளும், பெரிய கலாசாலைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனால் அநுபவத்தில் அவ்வித எண்ணம் சரிவர நிறைவேறி வருகிறதென்று சொல்லச் சாத்தியமில்லாமலிருக்கிறது. மாணாக்கர்களுக்குக் கற்பிக்கப்படும் பாடங்கள் அவர்கள் மனதில் நன்றாய்ப் பதிந்து ருசி உண்டாக்கி அதனால் மேற்சொன்ன மூவகைச் சக்தி விசேஷமும் முறையே ஒன்றக்கொன்று அநுகுணமாய் விஸ்தரித்து இவ்வுலகவாழ்க்கையில் தங்களுடையவும், தேசத்தினுடையவும், ராஜாங்கத்தாரினுடையவும், ஹிதத்தைக் கருதி நடக்கக்கூடிய யோக்கியதை ஏற்பட்டால்தான் கல்வி ஸபலமாகும். அப்படிக்கு அல்லாமல், உலகத்திலுள்ள வஸ்துக்கள், ஜாதியார்கள் விஷயமாக உபாத்தியாயர்கள் சொல்வதை, மாணாக்கர்கள் சரியாகத் தெரிந்து கிரஹித்துக் கொள்ளாமலும், பிறகு அவர்கள் மனுஷ்யத்தன்மையடையுங்கால் அவரவர்கள் வாழ்நிலைமைக்குரிய கடமைகளைச் செய்துவர எவ்விதமும் பயன்படாமலுமிருந்தால் அவ்வித ஸ்தூல ஞானம் அல்லது கேவல அறிவு(Instruction) அதிகப் பயன்படாது. சில சமயம் மூளைக்குப் பெருஞ் சுமைபோல் ஆனாலும் ஆகலாம். இக்காலத்தில் கற்பிக்கப்படும் அறிவு பயனளிக்க வேண்டுமானால், கூடிய வரையில் பிரத்தியக்ஷத்தில் காண்பிக்கக்கூடியவஸ்துஞானத்தைக் கொண்டே பாடங்கள் கற்றுக் கொடுக்கப்படவேண்டும். மேற்குத்தேசத்தார்கள் இதையறிந்து, பாடசாலைகளில் ஏற்படும் அறிவு, மாணாக்கர்களுக்கு அநுபவ ரீதியாகப் பயன்படும்படித் தகுந்த ஏற்பாடுகள் செய்துவந்துகொண்டிருக்கிறார்கள். இவ்விஷயத்தில் மேன்மேலும் ஊக்கமுடையவர்களாய்த் தங்கள் ஆஸ்தையைக் கூடிய மட்டில் காரியத்தில் காண்பித்துக்கொண்டிருக்கிறார்கள். நம்தேசத்தில் இவ்விதப் பிரயத்தனம் அநேகமாய் இல்லாமலிருந்து, கொஞ்சகாலமாய் ஸ்வல்பமாய்ச் செய்யப்பட்டுவருகிறது. பௌதிக சாஸ்திரப் பாடங்கள் விஷயத்தில் மாணாக்கர்கள் எக்ஸ்பெரிமெண்ட்ஸ் (Experiments) என்று சொல்லப்பட்ட பலவித கருவி விசேஷங்களின் அமைப்பு, அதன்செயல் முதலிய விவரத்தை உபாத்தியாயர் செய்து தாங்கள் பார்க்கவோ அல்லது சில சமயம் தாங்களே நேரில் செய்து தெரிந்துகொள்ளவோ ஏற்பாடுகள் நடைபெற்றுவருகின்றன. இனி, செய்யப்படவேண்டியது ஏராளமாயிருக்கிறது. 'அல்பாரம்ப க்ஷேமகர:' என்பதுபோல், ஒருவிதத் திருப்தி உண்டாகக் கூடியதாயினும், ஆரம்பத்தோடேயே அநேகமாய் நின்றுவிட்டால், தேசாபிவிருத்திக்குப் பாதகமாயிருக்கும்.

இவ்விஷயத்தில் பயாஸ்கோப் மூலமாய்த் தெரிந்துகொள்ளவேண்டிய அம்சங்கள் அநேகமிருக்கின்றன. ஏற்கெனவே, மேற்குத்தேசத்தில் இது சம்பந்தமான ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருகின்றன. ஓரிடத்தில், ஏழு பாடசாலைகளின் அதிகாரிகள் ஒன்றுசேர்ந்து தங்கள் பாடசாலைகளிலுள்ள மாணாக்கர்கள் ஒவ்வொரு வாரக் கடைசியில், ஒருநாள் காலையில் பயாஸ்கோப் சாலைக்குப்போய் அந்த வாரத்தில் நடந்த பாடங்களுக்குரிய படங்கள் காட்சியைப் பார்த்துவிட்டு உடனே தங்கள் தங்கள் பாடசாலைக்கு வந்துசேரும்படியான ஏற்பாடு செய்து வருகிறார்கள். பூகோள சாஸ்திரம், பௌதிக சாஸ்திரம் இவைபோன்ற பாடங்களைச்சார்ந்த காட்சிகள் விசேஷ உபயோகமுள்ளவை. பிட்ஸ்பர்க் (Pitzburg) என்னுமிடத்திலுள்ள தொழில் கலாசாலையில் (Technical School) லோஹரூபமான இரும்பு, உலகத்தில் மிகப்பெரிய சுரங்கத்திலிருந்து மஹத்தான யந்திரங்களால் வெட்டப்படுவதும், தகுந்த கலங்களில் ஏற்றிக்கொ

அமைந்தாங் கொழுகா னளவறியான் றன்னை வியந்தான் விரைந்து கெடும்.

ண்டுபோய் இறக்கப்படுவதும், பிறகு ஐக்கிய மாகாணங்களிலுள்ள உருக்கு யந்திரச்சாலைக்கு அனுப்பப்படுவதும், அவ்விடத்தில் இரும்பு லோஹத்தை உருக்கி நேர்த்தியான எஃகு ஆக்கு வதும், வெகு விசதமாய்ப் பயாஸ்கோப் படங் கள் மூலம் கற்பிக்கப்படுகின்றன. லண்டன் தேசத்தில் உபாத்தியாயர்களின் சங்கமானது (London Teachers' Association) இவ் வித படங்களின் உபயோக விஷயமாய்ச் சர்ச்சை செய்து, அவர்களுள் சிலரைக் காரிய விசாரணை சபையாராக நியமித்து, அவர்கள் ஏற்கெனவே ஏற்படுத்தியுள்ள படங்களை எவ் வாறு உபயோகப்படுத்தலா மென்றும், எலி மெண்டெரி பாடசாலைகளுக்குத் தகுதியாய் எவ்வித புதிய படங்கள் தேவையா யிருக்கு மென்றும் விசாரித்துக்கொண் டிருக்கிறார்களாம். நகரத்தில்வசிக்கும் சிறுவர்களுக்கு, கிராமவாழ்க் கை சம்பந்தமான படங்களும், உள் பிரதேசத்தி லிருக்கும் சிறுவர்களுக்கு கடற்கரைப்பட்டினம், துறைமுகம், கப்பல் ஸமுத்திரத்தில் செல்வது முதலிய காட்சிகளும், பூகோள சாஸ்திரம், தேச சரித்திரம் கற்றுக்கொள்பவர்களுக்கு இதர தேசத் தோற்றங்கள், அந்த ஜாதியாரின் நடை, உடை, பாவனைகள் சம்பந்தமான சித்திரங்களும் இன்னும் நாம் தினந்தோறும் பார்த்துக் கையாடிவரும் பதார்த்தங்களை உண்டுபண்ணு வதை யுணர்த்தும் படங்களும் நிதர்சனமாய்க் காட்டப்படின், அந்தந்தப் பாடங்களில் சிறுவர் சிறுமிகளுக்கு மனங்கவிய, ருசி பிறந்து அவை களை வெகு சீக்கிரத்திலும் சுலபமாயும் தெரிந்து கொள்ள இடமுண்டென்று சொல்லவேண் டுமா? தவிர, சில விஷயங்கள் நாடகரீதியாயும் நவீனகதா (Novels) ரூபமாயும் எழுதப்பட் டால் நன்றாய்ப் புத்தியிற் படியுமென்று எழுதப் பட்டுவருகின்றன. தற்கால நாவல்களால் சில பாதகங்களும் உண்டு. புத்தியை உபயோகித்து நல்ல விஷயங்களை மாத்திரம் கிரஹிக்கவேண்டும். மேற்கண்ட விஷயங்களை நாடகரூபமாய் நடித் துக் காட்டினால் நிரம்ப ஸ்வாரஸ்யமா யிருக்கு மென்றே நாடகங்கள் பற்பல பாஷையில் நடை பெற்று வருகின்றன. இவ்விஷயத்திலும் பயாஸ் கோப் மூலமாய் எவ்வளவு செய்யக்கூடுமென்று ஏற்கெனவே அதைப் பார்த்தவர்கள் எளிதில் தெரிந்துகொள்ளலாம்.

ஆகையால், இவ்விதக் காட்சிகள், ஜனங்களுக் குப் பொதுவாய் விநோதார்த்தமாகவும், அரும் பொருள் ஞானம் உண்டாக்குவதற்காகவும் சில ருக்கு வியாபாரத் தொழிலாகவும், மற்றும் பல ருக்கு ஜீவனோபாயமாக இருப்பதுடன், நாளு வித பாடசாலைகளில் படிப்பவர்களுக்கு எவ்வ ளவு யதார்த்தமாய் உபயோகப்படக்கூடும் என்று சற்று ஆலோசித்தால் நன்கு விளங்கும். இவ்விஷயத்தில் ஜனங்களின் வித்தையையும், க்ஷேமத்தையும் கருதும் ராஜாங்கத்தாரும், தேசாபிமானிகளான பிரபுக்களும் தேசத் தலை வர்களும், பாடசாலைகள் நடத்திவரும் தனி கர்களும், சங்கத்தார்களும், எல்லாப் பதவிகளி லுள்ள உபாத்தியாயர்களும் கூடிய சீக்கிரம் கவ னித்தல் அவசியமே.

மொழியும் குழந்தையும்

CHILD AND THE SPEECH

குழந்தை எவ்விதப் பாஷை யறிவுமின்றி அழுகை மட்டிலு மறிந்த ஒரு நிலைமையிலிருக் கிறது. அதிலிருந்து வெளிக்கு நன்றாகப் புலப் படாத பல படிகளின் மூலமாக சற்று மேலோ கீழோ தனது தாய்மொழியினை நன்றாகப் பேசும் மனிதனாக வளர்ந்துவிடுகின்றது. தானு கக் கல்வி கற்பதற்குரிய தத்துவங்களை விளக்கு வதற்கு, இந்த வளர்ச்சி நெறியைவிட அதிகத் தெளிவும் சிறந்ததுமான வேறோர் உதாரணம் கிடைத்தல் அநேகமாக அசாத்தியமாகும். 'கா, கூ' வென்று கத்துதல், அழுதல், மற்றும் அர்த்தமற்ற சத்தங்களைச் செய்தல் ஆகிய வாய் அப்பியாசங்க ளெல்லாந்தான் பாஷையின் மூலாதார இருப்பாகும் என்று மனோதத்துவ சாஸ்திரிகள் கூறுகின்றார்கள். குழந்தைகள் தாமாகவே இவற்றைப் பழகுகின்றன. இப்பழக் கம் காலக்கிரமத்தில் சரியான பாஷையை உப யோகிக்கக் குழந்தைக்கு இயல்விக்கின்றது. திட்டமான போதனை எதுவும் கிடையாது; தருக்க முறைக்கொத்த எந்தமுறையும் அநுசரிக்

கப்படவில்லை. குழந்தை தானாகவே பாஷாஞானத்தையும் அதைப் பேசுந்திறமையையும் பெற்றுக்கொண்டு விடுகின்றது. இதனைச் சொல்லுதல் தேவையில்லை. ஆனால் இந்தத்தெளிவானஉண்மையைக்கவனிக்குங்கால், இப்படியில் இதுகாட்டும் ஒருபடிப்பினையைக் குறிப்பிடல் சாத்தியமாகும். ஏனெனில், சுதந்திரமான சோதனைகள், சுயமுயற்சியான கல்வி ஆகிய முறைகளால் சிந்தனைப் பரிமாற்ற சாதனமான பாஷையை இவ்வாறு குழந்தை பெற்றுக்கொண்டதால் சுயமாய்க் கல்வி கற்பது சம்பந்தமான இதே தத்துவங்களைப் பிரயோகிப்பதனால், இதே சந்தோஷகரமான சுய முயற்சியாலேயே பிற பொருள்களின் ஞானத்துவக்கத்தையும் ஏற்படச்செய்யலாம் என்பது நிச்சயமாகும்.

* * *

குழந்தை பழகுவதற்குரிய சகவாசங்களையும் பொருள்களையும் சந்தோஷமணங் கமழ்வதாகச் செய்தல்வேண்டும். ஏனெனில், ஐந்து வயதுப் பாலகனது பாஷா ஞானமும் குணமும் பெரிதும் அவனது மூத்தோரையும் சூழவுள்ள பொருள்களையுமே சார்ந்துள. குழந்தை தெளிவாகத் தன் மனத்திலுண்டாகும் எண்ணங்களை வெளியிடுவதற்கு, அது சோர்வின்றிச் சதா முயற்சி செய்யவேண்டியதா யிருக்கிறது. அதோடு, சந்தோஷமும் சிந்தனையும் அனுதாபமும் உடைய முதியோர்களைப் பார்த்து, அவர்களை நகல் செய்ய வேண்டியதாயு மிருக்கிறது. குழந்தை பின்னால் பாஷையில் பெறக்கூடிய திறமை பெரிதும் அதன் சகவாசங்களையே சார்ந்ததா யிருப்பதால், அக்குழந்தை யார் பராமரிப்பில் இருக்கின்றதோ அவர்களது பேச்சும் சொற்களும் சாத்தியமான மட்டில் தெளிவாகவும் அழகாகவு மிருக்கவேண்டும். அசுத்தமான உச்சரிப்பு, திறமையற்ற பேச்சு, வார்த்தைகளிலும் கருத்துக்களிலும் குறைவு ஆகியவற்றுடன் கலாசாலைக்கு வரும் குழந்தையை, அறிவில் மட்டமானதெனத் தள்ளிவிடக்கூடாது. இந்தக் குற்றத்தையும் இதன் பொறுப்பையும், குழந்தை தன் பிள்ளைப் பருவத்தை யார் பராமரிப்பில் கழித்ததோ அவர்மீதே சுமத்தக்கூடும். சிந்தனையிலும், பேச்சிலும் அவனுக்குள்ள இக்குறைகள், அவனது சின்னஞ்சிறு பருவச் சகவாசங்களையே பிரதிபலிப்பவையாகும்.

இந்த விஷயத்தில் எளியவர்களது அசுத்தச் சந்துகளில் வாழும் குழந்தையும், தன் குழந்தையைக் கவனிக்க முடியாமல் அவ்வளவு தீவிரமாகத் தேசத்தின் குழந்தைகளின்மீது கவனத்தைச் செலுத்தித் தன் குழந்தையைப் படிப்பும் சிரத்தையுமில்லாத தாதியிடம் ஒப்படைக்கும் படிப்பாளித் தாயின் குழந்தையும் ஒரேதரமாகவே இருக்கின்றன. ஏனெனில், இரு குழந்தைகளின் விஷயத்திலும், சொல்லறிவு அநேகமாகப் பூச்சியமாகவே இருக்கின்றது. மனமும் மனமும் பரிமாறிக்கொள்ளும் சாதனமான அந்தச் சந்தோஷ அனுபவக் குறைவால், கருத்துக்களிலும் சிந்தனைகளிலும் வறுமை ஏற்பட்டுவிடுகின்றது. இந்தியத் தாய்மார்களே! டீன் இனாஜ் என்பவர் வேறோர் விஷய சம்பந்தமாகக்கூறிய-ஆனால் இங்கு மிகப் பொருத்தமான-சில வார்த்தைகளை உங்கட்குக் கூறுகிறேன்:—"நாம் எப்பொழுதும் நமது குழந்தைகளின் வருங்கால வாழ்க்கைக்குரிய விதைகளை தெளித்துக்கொண்டிருக்கிறோம்; நமது சென்றகாலக் குழந்தைகளின் வாழ்க்கையால் விளைந்த பலன்களையே நாம் எப்பொழுதும் அறுவடை செய்துகொண்டிருக்கிறோம்."

* * *

குழந்தைகளிடம் வாஞ்சை மிக்க பெற்றோர்களும் பிறரும் அவற்றின் வசீகர மழலையைப் பாதுகாக்கும் ஆர்வத்துடன் தாங்களும் குழந்தைபோல் அபிநயித்துப் பேசுகிறார்கள். இது அடிக்கடி நடக்கும் ஒரு குற்றமாகும். இதனைத் தவிர்க்கவேண்டும். இவ்வாறு செய்தல், குழந்தைக்கு நல்ல பேச்சுப் பழக்கம் உண்டாவதற்குத் தடைபுரிகின்றது. குழந்தையின் முன்னேற்றப்பாதையிலே, அனாவசியத் தடங்கல்களையும் இது குவித்துவிடுகின்றது. குழந்தையின் மனோ வாழ்க்கையிலும் உடல் வாழ்க்கையிலும் உள்ள பிற அம்சங்களிற் போலவே, பேச்சுப் பயிற்சியிலும், நற்பழக்க விதிகளை மதித்து நடக்கவேண்டும். ஏனெனில், பழக்கம் உருப்பட இயற்கையிலே மூன்று வருஷங்கள் ஒதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றன. முதியவர்கள் இதனை நன்றாக அறிந்துகொண்டு, அனாவசியத் தடங்கல்களைக் குழந்தைமுன் வைக்காமல், தங்கள் கடமையைச் செவ்வனே புரிவாராயின், குழந்தை தன்னை யறியாமலே நல்ல சுத்தமான பேச்சுப் பழக்கங்களையே விரும்பும். மற்றெதிலும்

போலவே, பாஷையிலும் மிகச் சிறந்ததையே குழந்தைக்கு வழங்கவேண்டும். குழந்தையின் பேச்சும் சம்பாஷணையும் கதைகளும் இலக்கியத் திலேறத் தக்கவல்லவாதலின், இப்பருவத்துக்கு இவை போதுமென நினைத்து, நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ளலாகாது. குழந்தைக்கு மிகச் சிறந்ததையே நல்கினல், குழந்தையின் நல்லதை கெட்டதைப் பகுத்தறியும் ஆற்றல் அதனல் மேலும் அபிவிருத்தி யடைகின்றது. சிறந்ததை யே தேர்ந்து கொள்ளத்தக்க திறமையும் அதற் குத் தன்னையறியாமலே மிகுதிப்படுகின்றது.

* * *

குழந்தையின் அபிவிருத்தியை மந்தப்படுத்த லாகாது; துரிதப்படுத்தவுங் கூடாது. எப்பொ ழுதும் நல்ல உதாரணங்களே குழந்தையின் முன்பு வைக்கப்படுமாயின், உச்சரிப்பு, வசனம் ஆகியவற்றில் பிழைகளைத் திருத்தவேண்டிய தேவை நமக்கு நேராது. இவ்வாறு பிழை திருத்தங்கள் செய்தலோ, குழந்தைக்குத் தன் உணர்வை உண்டாக்கி, தனது சக்திகளில் நம் பிக்கைக் குறைவை உறச் செய்துவிடும். செவி யின் சரியான கேள்விச் சக்திக்குப் பயிற்சி யளித்தல், தொண்டை, வாய், உதடு ஆகியவற் றின் தசைகளின் உபயோகத்தைச் சரிவரத் திருத்துதல் ஆகிய இயற்கைக்கு உதவும் காரி யங்களைப் புரிதலே நமது கடமையாகும்.

* * *

குழந்தைகளின் சொல்லறிவு பற்றிய பல ஆராய்ச்சிகளின் முடிவுகள் சமீபத்தில் வெளி யிடப்பட் டிருக்கின்றன. சிறு குழந்தைகள் விஷயத்தில் கவனம் செலுத்துவோர்க்கு அவை ருசிகரமாகவும், யோசனையான எண்ணங் களை எழுப்பக்கூடியவையாகவு மிருக்கின்றன. ஒரு மனோதத்துவ சாஸ்திரி கூறுவதாவது :— "16 முதல் 19 மாதங்கள் வரை வயதுள்ள குழந் தைகள், 16 முதல் 232 வார்த்தைகள் வரை யில் பேசுகின்றன. இரண்டு வருஷக் குழந்தை கள், 115 முதல் 1227 வார்த்தைகள் வரையில் பேசுகின்றன. அவ் வயதுக்குப் பிறகு, சொற் களின் எண்ணிக்கை வெகு விரைவாக அதிகரிக் கின்றது. சராசரி மூன்று வருஷக் குழந்தை 1000 வார்த்தைகள் பேசுகின்றது. என்றுதிட்ட மாகச்சொல்லலாம். பொருள்களை அறியவேண்டு மென்பதில் சாதாரணமான ஆவலும், பிறர்பேச் சைக்கண்டு அதைப்போல் அபிநயிக்க வேண்டு மென்பதில் இயல்பானகுழந்தையிடம் இருக்கக் கூடியவிருப்பமும், எதிர்ப்படக்கூடிய ஒவ்வொரு விஷயத்தையும் அதற்கு விளக்கி யுரைக்கக்கூடிய முதியோர் அல்லது பெரிய குழந்தைகளின் சகவாசமும் உடைய குழந்தை சம்பந்தப்பட்ட மட்டிலுமாவது மேற்கூறியது உண்மையாகும்."

* * *

குழந்தையின் சிரத்தையையும் ஆவலையும் அபிநய சக்திகளையும் திருப்தி செய்வதுடன் நல்ல உதாரணங்களை அதற்கு அளிப்பதும் அவசியமென்பது இவ்வாறு வற்புறுத்தப் பட் டது. ஏனெனில், அசுத்தச் சந்துகளில் வசிக்கும் எளிய குழந்தை, புத்திசாலித்தனமற்ற அசிரத் தையான முதியோர் போஷணையில் இருக்கும் குழந்தை - "குழந்தைகளைக் கண்குளிரக் காண வேண்டுமே யன்றி அவற்றின் பேச்சைக் கேட்க வேண்டியதில்லை" என்று கருதும் முதியோர் பராமரிப்புக் குட்பட்டு அவரிடம் பேச்சுப் பழக்கத்திற்கு ஆதரவு பெறாத குழந்தை - ஆகி யவை சம்பந்தப்பட்ட மட்டில் மேற்கூறிய விஷ யங்கள் பொருந்துவனவாயில்லை.

* * *

பாஷையில் குழந்தைக்குள்ள சிரத்தையை யும், அதனல் அது அடையும் அறிவையும், பிறப்பு முதலிருந்தே நம்மால் வளர்க்கவியலு மென்பதைக் கண்டோம். நூறு வருஷங்களுக்கு முன், டாக்டர் ஜான் ப்ரௌன் என்பவர் எழுதி யுள்ள பின்வரும் விஷயத்தை நாம் நினைவில் வைத்துக் கொள்ள வேண்டும்; அதாவது :— குழந்தை தனக்குத்தானே கற்றுக்கொண்ட விஷயம், பின்னல் எப்பொழுதும் அதனை விட் டகலா திருந்து வருகின்றது. குழந்தைக்குத் தனக்குத் தானே தெரியாமலே யிருந்துவரும் இந்த ஞானம், இயற்கையாக வளர்ந்து ஆரோக் கிய அபிவிருத்தி பெறுவதற்கான முறையில் அதனை அளந்து ஆதரிக்கத்தக்க நன்மணங் கமழும் நிலைமையையும் சகவாசங்களையும் குழந் தைக்கு அளித்து, நமது கடமையை நாம் ஆற்று வோமாக (மிஸ் கோரிகார்டன் - ஹிந்து)

இவ்வுலகில் பத்து லக்ஷம் ஜனங்களுக்கு மேலுள்ள பட்டணங்கள் :—லண்டன், நியூயார்க், பர்லின், பாரிஸ், சிகாகோ டோகியோ, வியன்னா, பிலடல்பியா, ப்யூனஸ் அயர்ஸ், பீகிங், கல்கத்தா, மான்டன், பம்பாய், ரயோடி ஜனீரோ, கிளாஸ்கோ, கான்ஸ்டாண்டி நோபிள் ஆகிய இவைகள் தாம்.

உலகத்தின் விசித்திரங்கள்

WONDERS OF THE WORLD

1. எகிப்து தேசத்து கோபுரங்கள்

[ஸ்ரீமான் வி. எஸ். கிருஷ்ணசுவாமி, அவர்கள், பீ. ஏ.]

உலகத்தில் ஏதேனும் விநோதமான விஷயத்தைக் குறிக்க வேண்டியிருந்தால், அதை உலகத்தில் எட்டாவது அதிசயம் என்று சொல்வதுண்டு. ஆகவே அதற்குமுன் ஏழு அதிசயங்கள் இருக்கின்றன என்று ஏற்படுகின்றது. அவைகளை உங்களுக்குத் தெரியுமா? அவ்வேழு அதிசயங்களும் பின்வருமாறு :— (1) எகிப்து தேசத்து கோபுரங்கள் : (2) பாபிலான் நகரத்துக் கோவிலும், சுவர்களும், தொங்கும் உத்யான வனங்களும் : (3) ஒலிம்பஸ் என்னும் இடத்தில் உள்ள ஜூபிடரின் சிலை : (4) எபிஸஸ் என்னும் ஊரில் இருந்த டயானா என்னும் தெய்வத்திற்குக் கட்டப்பட்ட கோவில் : (5) மாஸோலியம் எனும் ஸமாதி : (6) அலெக்ஸாண்டிட்ரியா நகரில் கட்டப்பட்ட 'பேராஸ்' எனும் தீபஸ்தம்பம்: (7) ரோட்ஸ் எனும் ஊரின் துறைமுகத்தில் அபோலோ என்னும் தெய்வத்தின் ஞாபகார்த்தமாக வைக்கப்பட்டிருந்த ஒரு பிரும்மாண்டமான சிலை (கலோஸஸ்).

இப்பொழுது மேற்சொன்னவைகளைக் காட்டிலும் பெரிதான தீபஸ்தம்பங்களும், கோவில்களும், சிலைகளும் ஏற்பட்டிருக்கின்றன எனினும், முன் காலத்தில் - நாகரிகம் இப்பொழுது போன்று அவ்வளவு செழிப்புற்றிராமல் இருந்த காலத்தில் - இவ்வளவு பெரிய காரியங்களைச் செய்துமுடித்து, உலகத்துக்கே அந்தந்தத்துறைகளில் வழிகாட்டினதுபோ லிருந்ததால், அவைகள் உலகத்தின் அதிசயங்கள் என்று வழங்கலாயின. மேற்சொன்ன அதிசயங்களிற் சில, இருந்த இடமே தெரியாமல் போய்விட்டன. சில இடிந்துபோய், வெகுகாலமாய் மண்ணால் மூடப்பட்டிருந்து, சமீபகாலத்தில்தான் வெளிப்படுத்தப்பட்டுள்ளன. ஆனால் எகிப்து தேசத்து கோபுரங்கள் மாத்திரம் அழியாமல், வெயில், மழை, காற்று, மணல் இவற்றால் ஏற்பட்ட சிறு மாறுதல்களை மாத்திரம் அடைந்து, அநேகமாய் முன்போலவே கம்பீரமாய்த் தோற்றுகின்றன. அவைகளைப்பற்றி இந்தக் கட்டுரையில் சொல்வோம்.

எகிப்து தேசத்தில் வெவ்வேறு நகரங்களில் இக்கோபுரங்கள் இருக்கின்றன. அவற்றுள் எல்லாம் கிஸே (Gizeh) என்ற விடத்தில் இருப்பனதாம் மிகவும் உன்னதமானவை. கி. மு. 900ஆவது சியாப்ஸ் (Cheops) என்னும் அரசன் கிஸேயிலுள்ள பெரிய கோபுரத்தைக் கட்டினான். அதற்குப் பின்னர் ஸெப்ரென் எனும் அவனுடைய தம்பி, மற்றொரு கோபுரம் கட்டினான். அதற்குப் பிறகு மைஸெரினஸ் என்ற சியாப்ஸின் பிள்ளை, மூன்றாவது கோபுரமொன்றைக் கட்டினான். இவ்வாறாக மற்றும் சில கோபுரங்கள் அங்கு ஏற்பட்டுள்ளன.

இவற்றுள் பெரிய கோபுரமே மிகவும் பிரும்மாண்டமானது. அதை ஒரு லக்ஷம் வேலையாட்கள், இருபது வருஷகாலம் வேலைசெய்து கட்டினார்களாம். ஹெரோடோடஸ் (Herodotus) என்ற கிரேக்க சரித்திராசிரியர் "இந்த கோபுரம், ஒவ்வொரு பக்கத்திலும் அடியில், 800 கிரேக்க அடிகள் நீளமுள்ளது. இது மிகவும் நன்றாய் இழைக்கப்பட்ட கற்களால் கட்டப்பட்டுள்ளது. ஒவ்வொரு கல்லும் மற்றொன்றோடு மிகவும் ஸாமர்த்தியமாகச் சேர்க்கப்பட்டுள்ளது" என்று கூறுகிறார்.

இந்தக் கோபுரத்தின் பரிமாணம் பின்வரும் தகவல்களால் நன்கு விளங்கும். அதன் சதுரமான அடிவாரம் 550,000 சதுர அடிகள்; இதன் உயரம் 474 அடி. (முதல் முதலில் கட்டி முடிந்ததும் இது 502 அடி உயரம் இருந்ததாம்). இதன் ஒவ்வொரு தட்டும், படிக்கட்டுகள்போ லிருக்கின்றன. இங்ஙனம் 203 தட்டுகள் இருக்கின்றன. ஒவ்வொரு படியும் ஸமமான தூரத்தில் இல்லாமல் 1 அடி 8 அங்குல முதல், 4 அடி 8 அங்குலம் வரை உயரம் உள்ளனவாம். எல்லாவற்றிற்கும் மேலிருக்கும் தட்டானது ஒவ்வொரு பக்கமும் 32 அடி 8 அங்குலம் அளவுள்ளது; அதன் பரப்பு சுமார் 1067 சதுர அடி ஆகிறது. இதன் வாயிற்படி கீழிருந்து 47 அடி உயரத்தில் இருக்கிறது.

ஆகா றளவிட்டி தாயினுங் கேடில்லை போகா றகலாக் கடை.

இரண்டாவது கோபுரம் அடிவாரத்தில் ஒவ்வொரு பக்கமும் 684 அடி கொண்டதாய், 456 உயரமுள்ளது. மூன்றாவது கோபுரம் 174 அடி உயரம், அடிவாரத்தில் ஒவ்வொரு பக்கமும் 300 அடி கொண்டது.

ஸக்காரா எனும் இடத்தில் பல பெரிய கோபுரங்கள் இருக்கின்றன. அவற்றுள் மிகப் பெரியது 340 அடி உயரம். அடிவாரம் 656 அடி.

தஷூர் எனுமிடத்தில் பல கோபுரங்கள் உள்ளன. அவற்றுள் மிகப்பெரியது 343 அடி உயரம்; அடிவாரம் 700 அடி. மற்றும் ஒரு கோபுரம் முழுவதும் மிகவும் கெட்டியான வெள்ளைக் கல்லினால் செய்யப்பட்டது. அதன் பக்கங்கள் நான்கு திக்குகளையும் எதிர்நோக்கி யிருக்கின்றனவாம்.

தீப்ஸ் எனும் இடத்தில் சில சிறிய கோபுரங்கள் இருக்கின்றன.

இந்தக் கோபுரங்கள் ஒவ்வொன்றும் ஒரு இரகசிய அறையில் விசித்திரமான சாமான்கள் அடங்கியவைகளாய்க் கட்டப்பட்டுள்ளன.

ந்யூபியா எனுமிடத்தில் சுமார் எண்பது கோபுரங்கள் இருக்கின்றனவாம். நைல் நதியோரத்தில் அஸ்ஸூர் எனும் இடத்தில் பல கோபுரங்கள் உள்ளன; அவைகள் எல்லாம் சந்தனக் கல்லால் கட்டப்பட்டுள்ளன.

கௌரி என்ற விடத்தில் சில கோபுரங்கள் இருக்கின்றன. அவைகளுள் மிகவும் பெரிய கோபுரத்திற்குள் வேறு மாதிரி வேலைப்பாடமைந்ததாயும், வேறு கல்லால் கட்டபட்டதாயுமுள்ள ஒரு சிறிய கோபுரம் இருக்கிறதாம்.

இந்தக் கோபுரத்தை யார் கட்டினது என்பது கவனிக்கத் தக்கது. முன் காலத்தில் எகிப்து தேசத்தின் முக்கிய நதியான 'நைல்', வெள்ளத்தால் பெருக்கெடுத்து மிக்க நாசம் விளைவித்தது. ஹிந்துக்களுக்குப் பிரளயகாலம் போல் அந்த வெள்ளம் எகிப்தியர்களால் கருதப்பட்டு வருகிறது. அவ்வெள்ளத்திற்கு சுமார் முன்னூறு வருஷங்களுக்குமுன், எகிப்து தேசத்தை ஸாரிட் 'இப்னே ஸல்ஹூக்' (Saurid Ibn Salhouk) மிகவும் செம்மையாய் ராஜ்யபரிபாலனம் செய்துவந்தான். அவன் காலத்தில் நாடெங்கும் செழிப்பும் சிறப்பும் வளர்ந்தோங்கி, ஜனங்கள் மிகவும் சுகவாஸிகளாய், சத்துரு பயமின்றி வசித்துவந்தனர். ஓரிரவு அம் மன்னன், தூக்கத்தில், பூமண்டலமே தலைகீழ் உருண்டு, அதன்மேலுள்ள மனிதர்கள் எல்லோரும் தரைமேல் குப்புறத் தள்ளப்பட்டுக் கிடப்பதாயும், நக்ஷத்திரங்கள் ஒன்றின்மேல் ஒன்று விழுந்து நாசப்படுவதாயும் ஒரு ஸ்வப்னம் கண்டான். இதன் பின்னர் ஸ்திர கிரஹங்களெல்லாம் ஒருங்கே சேர்ந்து, வெள்ளைச் சேவல்களாய் பூமியிலிறங்கி, மனிதர்களையெல்லாம் கொத்தித் தூக்கிக்கொண்டு இரண்டு மலைகளினடுவே சென்றதாயும், உடனே அம்மலைகளிரண்டும் அவர்கள்பின் மூடிக்கொண்டதாயும் தன் கனவில் பார்த்தான்.

மறுநாள் காலையில் மன்னவன் நடுங்கிக்கொண்டே கண்விழித்து, தன் இராஜ்ஜியத்திலுள்ள முக்கிய ஞானிகள் (நூற்று முப்பது பேர்) எல்லோரையும் வரவழைத்தான். அவர்கள் எல்லோரும் வந்து சேர்ந்ததும், அரசன் தன்னுடைய ஸ்வப்னத்தில் கண்டதை யெல்லாம் அவர்களுக்கு விஸ்தாரமாய்ச் சொன்னான். உடனே ஞானிகள் பல்வேறு விதங்களான பரீக்ஷணங்களெல்லாம் செய்து, நக்ஷத்திரங்களின் ஸ்தானங்கள் முதலியவைகளைக் குறித்துக் கணித்துப் பார்த்து, "சமீபகாலத்தில் ஒரு பிரளயம் ஏற்படப்போகிறது. அதுவே உங்களுடைய கனவின் தாத்பர்யம்" என்று அரசனிடம் சொன்னார்கள். "நம்முடைய ராஜ்பத்திற்கு வருமா அந்தப் பிரளயம்?" என்று வினவினன் அரசன். "கட்டாயம் வரும். வந்து இராஜ்ஜியம் முழுவதையும் அழித்துவிடும்" என்றனர் ஞானிகள்.

குறிப்பிட்டபடி பிரளயம் ஏற்பட இன்னும் பல வருஷங்கள் இருந்தமையால், மன்னன் அதற்குள் பிரும்மாண்டமான பிரமிட் என்னும் கோபுரங்களைக் கட்டிமுடிக்குமாறு தன் பிரஜைகளுக்குக் கட்டளையிட்டான். அங்ஙனம் கட்டி முடிக்கப்பட்ட கோபுரங்களில், ஒவ்வொன்றிலும் அகலமான வழி ஒன்று செய்து, அதன் மூலம் நைல் நதி வெள்ளப் பெருக்கெடுத்தக்கால் ஓடுமாறு ஏற்பாடு செய்தான். ஒவ்வொரு கோபுரத்திலும் ரக்ஷைகளும் கவசங்களும் இன்னும் வெவ்வேறு விதமான தடைகள் முதலானவைகளையும் வைத்தான்; அளவற்ற திரவியங்களையும், வெள்ளி, பொன் இவைகளால் செய்யப்பட்ட சாமான்களையும் சேமித்தான்; ஞானிகளால் சொல்லப்பட்ட ஒவ்வொரு விஷயத்தையும் அவைகளுள் எழுதி

312

வைத்தான்; மற்றும் மனிதருக்குத் தெரிந்த கலைகள், சாஸ்திரங்கள் முதலியவற்றை வரையச் செய்தான்.

இந்தக் கோபுரங்களைக் கட்ட சிற்பிகள் எங்கெங்கிருந்தோ தகுந்த கல்களையும், மற்றும் வேண்டிய சாமக்கிரியைகளையும் கொணர்ந்தனர். ஒவ்வொரு கோபுரத்தின் அஸ்திவாரமும் ஈயத்தாலும், இரும்பினாலும் செய்யப்பட்ட கம்பிகளால் பந்தப்படுத்தப்பட்டன. முதல் கோபுரம் கட்டி முடிந்ததும், பட்டால் முழுவதையும் மூடினன். தன் ஜனங்களையெல்லாம் வரவழைத்து விருந்தளித்தான். பின்னர் மற்ற கோபுரங்கள் கட்டி முடிந்தன. மேற்கு கோபுரத்தில் முப்பது கஜான அரைகள் கட்டி, அவற்றுள் உலகத்திலகப்படக்கூடிய விலையுயர்ந்த பொருள்களையும், பாத்திரங்கள், நகைகள், மற்றும் பல்வேறு சாமான்கள், ஆயுதங்கள், கண்ணாடிகள் முதலிய சாமான்களையும் ஒவ்வொரு அறையினுமாக நிரப்பினன்.

கிழ்ப்புறம் இருந்த கோவிலில் வானசாஸ்திர சுவடிகளையும், அதற்கேற்ற சாமக்கிரியைகளையும்,வாசனை திரவியங்களையும் வைத்தான். முழுவதும் வர்ணமடிக்கப்பட்ட கோபுரமொன்றில் ஸகல வேதாந்த சாஸ்திரங்களையும் ஒவ்வொரு குருவின் சரித்திரத்தையும், அவர் செய்த விஷயங்களைப்பற்றின புத்தகங்களையும் சேர்த்து வைத்தான். ஒவ்வொரு கோபுரத்திலும் அளவற்ற தன நிதியைச் சேர்த்துவைத்தான்; ஒவ்வொன்றுக்கும் ரக்ஷகனை ஓர் உருவத்தை ஏற்படுத்தினன். ஒரு கையில் ஈட்டியை யேந்தி, தலையில் பாம்பைச் சுற்றிக்கொண்டுள்ள உருவம் ஒன்றை சலவைக்கல்லால் செய்து, அதை மேற்புரத்து கோபுரத்தில் வைத்தான். யாராவது அதனருகே வந்து சும்மா நின்றுகொண்டிருந்தால், தலையிலுள்ள பாம்பானது அவனை ஒரு பக்கத்தில் கடித்து, பின்னர் அவன் கழுத்தைச் சுற்றிச் சுருக்கிட்டு நசுக்கிக் கொல்லுமாம். கிழக்கு கோபுரத்தில், கரும் தந்தத்தினல் செய்யப்பட்டு, சிம்மாதனத்தில் உட்கார்ந்துகொண்டு, கண்களைத் திறந்து பிரகாசித்துக்கொண் டிருக்கும் உருவமொன்றை அமைத்தான். அதனை யாரேனும் உற்றுப் பார்த்தால், அவனுக்கு ஒரு பக்கத்தில் ஒரு பலமான ஓசை கேட்குமாம். அதோடு அவன் ஸ்மரணையற்று கீழே குப்புற விழுந்து சாகும்வரையில் அங்கேயே கிடப்பானம். வர்ணம் தீட்டின கோபுரத்தில் உட்கார்ந்த மாதிரி கல்லால் செய்யப்பட்ட உருவம் வைக்கப்பட்டது. அதை உற்று நோக்கினவன் அதன்பால் இழுபட்டு அதோடு ஒட்டிக்கொண்டு, சாகும் வரையில் அங்கேயே இருப்பானும். இங்ஙனம் கோபுரங்களைக் கட்டி முடித்தபின், அவன் பின்வருமாறு அவைகளில் எழுதிவைத்தானம்.

“ராஜா ஸரீத் என்ற நான், இந்தக் கோபுரங்களை ஆறு வருஷங்களில் கட்டி முடித்தேன். எனக்குப்பின் அரசனுய் வருபவன் எவனாவது, எனக்கு சமானமானவன் என்று சொல்லிக்கொள்வானேயாகில், கட்டுவதைக் காட்டிலும் இடிப்பது சுலபமேயாகையால், இவைகளை ஆறு நூறு வருஷங்களுக்குள் அழித்துவிடப் பார்க்கட்டும். கட்டி முடித்ததும் நான் இவைகளை முழுவதும் பட்டினல் மூடினேன்; அவர்கள் வெறும் பாய்களாலாவது மூடமுடியுமா என்று பார்க்கட்டும்.”

ஊக்கம்

TRY, TRY, TRY AGAIN

[ஸ்ரீமான் வே. சுப்பிரமணியம் அவர்கள், பீ. ஏ.]

பள்ளிக்கூடத்தில் சிறுவர்கள் படித்துவரும் பாடல்களி லெல்லாம்,

“உறுதிபயப்ப கடைபோகா வேனும்
இறுவரை காறும் முயல்ப - இறும் உயிர்க்கும்
ஆயுள் மருந்து ஒழுக்கல்நீத அன்றல் அல்லன
ஆவனவும் உண்டு சில.” [போல்

என்னும் நீதிநெறிவிளக்க வெண்பாவினுள்ள இனிமையாகிய சுவையை உடையன மிகவும் சிலவேயாகும். மனம் முறிந்து, இனிமேல் நாம் செய்து முடிக்கக்கூடியது ஒன்றுமில்லை என்று தளர்ச்சியடையும் ஆண்மக்களுக்கும் இப்பாடல் தக்க ஊக்கத்தை உண்டாக்கும் மந்திரமாகும்.

313

எவனொருவனுக்கும் தான் ஒரு காரியத்தைச் செய்யத் தொடங்கிய பிறகுதான் தனக்கு எவ்வளவு ஆற்றலுண்டென்று கண்டறியக்கூடும். புதிது புதிதாய்த் தொடங்குங் காரியங்கள் எவையும், மிக்க அருமையும் பெருமையு முடையவைகளாகவே தோன்றும். ஆனால் அடுத்து முயன்று ஒரு காரியத்தைச் செய்யப் பழகியபின், மனமும் உறுதியடைந்து எத்துணைய பெரிய காரியத்தையும் வருத்தமின்றிச் செய்து முடிக்கத் துணிவு உண்டாகும்.

ஒரேவழி செல்லு மிருவரில், "நான் என்ன செய்வேன்" என்று ஏங்கி நிற்பவன், சேற்றில் காலழுந்தி வழிப்போக்கர்களுக்கும் இரடு கட்டையாய் நிற்பான். வருத்தம் பாராமல் முன்னோக்கிச் செல்லும் துணிவோடு செல்பவனோ, தான் இழுத்துச் செல்லும், நிரம்ப மூட்டை யடுக்கிய வண்டியைக்கூட, கொடி வழிகளினு மிழுத்துச் செல்வான். பிராணனுக்கு வந்தபோது ஓட்டமெடுக்கத் தயங்கலாமா? முயற்சியானது அதிமாயமான விநோதங்களை வெளிப்படுத்தும். சிறு தேனீக்கள் ஒன்று கூடி, 'முயல்வோம்' என்றன. மலையிலும் காட்டிலுமுள்ள பூக்களெல்லாம் மதுரமான தேனாக மாறின. மிக்க அற்ப ஜந்துக்களாகிய அணில்கள் 'முயல்வோம்' என்றன. அவை நீள்கடலில் வானர வீரர்கள் கட்டிய சேதுவின் மேடு பள்ளங்களெல்லாம் மணல் தூவிச் சமனாக்கினவென்பது ஒரு பழங்கதை. ஆகாயத்திலிருந்து விழும் சிறு மழைத்துளி யொன்று, 'முயல்வேன்' என்றது. கடலில் ஆழவழுந்திக் கிடக்கும் சிப்பி வயிற்றிற் புகுந்து பலநாள் தவஞ்செய்து பிறகு பெருகொளி முத்தாய் மேம்படலாயிற்று. கண்ணளவில் அடங்கும் உருவமுள்ள சூரியன், 'முயல்வேன்' என்றான். மலையின் கொடு முடிகளிலுள்ள பனிப்பாறை யெல்லாம் தண்ணீராய்க் கரைந்தோடிற்று. முட்டையை விட்டு வெளியே வந்த சிறு பறவைக் குஞ்சுகள் மெள்ளப் பறந்து பார்த்தன. இருக்க இருக்க, தங்களிறகுகள் தங்களை வெகுதூரம் தாங்கிச் செல்லும் வலிமையுள்ளன வென்று கண்டுகொண்டன. ஏரில் கட்டிய கடா 'உம்' என்றது. பாழ்நிலமெல்லாம் பாங்குபட்டுப் பயிர் விளையலாயிற்று. முயற்சியின் மாயமே மாயம். பறக்கின்ற பறவைக்கு எது தூரம்? ஏறிச்செல்லத் துணிந்தவனுக்கு எந்த மலைதான் உயரம்? உழுகிறவன் களிமண்ணென்று விட்டுவிடுகிறானா? இறைக்கத் துணிந்தவனுக்கு வற்றாத கிணறும் உண்டோ? அல்லது தைத்து நிரப்பும் வேலை செய்வோனுக்கு இணங்காக் கந்தைத் துணிதானுமுண்டோ? எறும்பூரக் கல்லுங் குழியும். அடிமேலடி யடித்தால் அம்மியும் நகரும். ஆற்றுக்கு அணை மலைமலையாய்ப் பிடுங்கிப் போடுகிறார்களா? கூடை மண் கூடை மண்ணைத் தானே கொட்டுகிறார்கள். உலகத்தில் ஏதேனும் ஒரு காரியத்தை ஒருவன் செய்து முடிப்பானேயானால் அக்காரியம் மற்றவர்களும் செய்து முடிக்கக் கூடியதே. செய்து முடியாத காரியம் கூட ஒருவேளை அடுத்து முயல்வோனுக்குப் படிந்து வரலாம்.

கலப்பையைக் கைப்பற்றிக் காடுகளை உழுவோர் கோழை படாச் செல்வம் அடைதலும், குயக்கலம் வனைவோர் குபேரனாவதும், திரைகடலோடித் திரவியந் தேடுவோர், அரசரோடிருந்து அரசு ஆள்வதும் இம்முயற்சியின் மாயமேயன்றோ? மேலுக்கு வரவேண்டும் என்னும் முன்னோக்க முள்ளோர், இடுப்பில் துணியை எடுத்துக் கட்டுதல் நலம். தொங்க விட்டுக் கட்டுபவன் தொங்கியே போவான்.

'உறுவினை காய்வோன் உயர்வு வேண்டல் பொய்'

விருப்ப மிருந்தால் வேரிலும் காய்க்கும். மன உறுதியுள்ள வழி காரியம் கைகூடும் வழியுமுண்டு. சூரியன் பிரகாசித்தல் பெரியோர்க்கும் சிறியோர்க்கும் ஒருங்கே. ஆதலால் கடவுளை நம்பித் தொடுத்த காரியத்தைத் தளராது கைப்பிடித்து சோர்வில்லாத ஊக்கமுடையவரைக் குன்றும் வழி தடுப்பதில்லை. கோழை நெஞ்சுடையோன் கோமளவல்லியைக் கைக்கொள்வது முண்டோ? மக்களே! தங்களிரு தோள்களையே தனித்துணையாகக் கொள்ளுவோர்களுக்கே பரம்பொருள் பக்கத்துணையாய் நிற்கும். அதிர்ஷ்டம் என்னும் பேச்சை ஆற்றில் விடுங்கள். அது கண்காணாததாகவே போகட்டும். அல்லது உண்டு, உடுத்து, குடித்து, மயங்கும் குண்டுணிக ளிடத்திலேயே குடிகொள்ளட்டும். நன்மையை வேண்டுவோன் செய்துவைத்த புண்ணியம் அசாவாத ஆண்மையே.

மனிதர்களுக்கு உயர்வு அவரவர்களுடைய உள்ளம் எத்தனை நீட்டமுடையதோ அத்தனையே. திருவினை ஆக்குவது முயற்சிதான்.

பகல்வெல்லும் கூகையைக் காக்கை யிகல்வெல்லும் வேந்தர்க்கு வேண்டும் பொழுது.

ஊக்கமும், மிக்க உரமும், ஒன்றிய சூழ்ச்சியும் உள்ளவனை விட்டு ஆக்கமகலாது. 'அடுத்து முயன்றாலும் ஆகும் காளன்றி எடுத்த கருமங்களாகா' என்று பாடிக்கொண்டு முயற்சி செய்யாமலே யிருந்தால் முடியுமா? கருமங்கள் மனிதர் கருதியவாறு ஆகா. பிரமன் எழுதியபடியே என்னும் மடநெஞ்சோடு இரங்கி நிற்பார் இரங்கியே நிற்க. புண்ணியம் வந்தெய்தும் போதல்லாமல் எண்ணியொரு கருமமும் செய்யவொண்ணாது, என்பாரும் ஏங்கி நிற்க. 'வருந்தி அழைத்தாலும் வாராத வாரா' என்பாரும் வாளா நிற்க. 'மாத்திரைக் கோலெறிந்தாலன்றி மாங்காய் விழாது' என்பாரோடு இணங்குவோம் யாம். வித்து இல்லாவிட்டால் சம்பிரதமும் இல்லாதது போல, கைவினை இல்லா விடத்துக் கருமங்களும் ஆகா. 'எழுதினவன் ஓலை பழுது' என்பது ஏழைமை. அங்காடித் தெருவில் அலைந்து மேய்ந்த பழங் கன்றும் பின்னுக்குப் பெரிய எருதாவதில்லையோ? காற்றுக்கு அசையும் சிறிய செடியும் காலஞ் சென்று காழுடைந்து யானைகள் கட்டும் கட்டுத்தறியாகும் பலம் அடைதலில்லையோ? வீணுக்கு விதியே வலிது என்று வாதாடாதேயுங்கள். அனுதினமும் முயற்சி செய்பவர்க்கே கடவுளும் கடாக்ஷிப்பார். செய்யவேண்டிய முயற்சிகளை யெல்லாம் செய்திட்டாலே செய்யவள் மணாளனும் வேண்டும் யாவையும் விருப்பொடு கொடுப்பான். முயற்சி செய்யானேல் நயத்தகு போகம் அளித்திடான் என்பது அறிஞர் கூறிய அரும்பத உரை. முயற்சி யில்லாமலே நினைத்த காரியம் பூர்வ புண்ணியத்தால் கைகூடும் என்றிருப்போர்க்கு, அரிசியும் காயும் சமைக்காமலே சாப்பிடத்தகும் பக்குவம் பெறலாமே. கலத்திலிட்டதைக் கையாலெடுத்து வாயில் போட்டுக்கொண்டாலொழிய, தானகவே வாயில் புகுந்து வயிற்றிலிறங்கிப் பசித்தழலை அவிக்குமோ? விதியே வலிது என்பார்க்கு மாறுகோளாக,

"தெய்வத்தா னாகா தெனினு முயற்சிதன்
மெய்வருந்தக் கூலிதரும்" —

என்றும்

"ஊழையு முப்பக்கங் காண்ப ருலைவின்றித்
தாழா துஞற்று பவர்"

என்றும் வற்புறுத்தினர் வள்ளுவனர். ஆகையால்உடையவர்கள் என்னும் பட்டம்பெற விரும்புகிறவர்கள் யாவரும் ஊக்கம் உடையவர்கள் ஆதல் அவசியம். ஊக்கமில்லாதார் உடையவராதலில்லை. இசையாத காரியமாயினும் எவ்விதத்தேனும் தன் ஆற்றல் கொண்டு இயற்றி அசையாது நிற்பதே ஆண்மையாகும். அரியதேயாயினும் சிறு முயற்சி செய்து உறுபயன் கொள்ளப் பெறுமாகில் ஒள்ளிய ஒழுக்கமுடையோர் அவ்வினை செய்யத் தாழ்வரோ? தாழார். கருமமே கண்ணாயினவர்கள் மெய்வருத்தம் பார்ப்பரோ? மானம், குலம், கல்வி, வண்மை, அறிவுடைமை, தானம், தவம் உயர்ச்சி, தாளாண்மை, பெண்ணாசை ஆகிய பத்தையும் பறக்கடிக்கும் பசியைத்தான் பொருட்டாக்குவரோ? கண் துஞ்சுவரோ? தமக்கு மாறாய்ப் பிறர் இழைக்கும் தீமையைத்தான் மேற்கொள்ளுவரோ? தம்முடைய செவ்வியையேனும் தொடுத்த கருமத்தின் அருமையையேனும் கருதுவரோ?

'பெருமை யுடையதன் அருமை பழியார்'
'அருமை யுடையதன் பெருமை பழியார்'
'நிறையச் செய்யார்க் குறைவினை பழியார்'

என்ற ஆன்றோர் முதுமொழியின் உண்மை தெரியாத வன்மை மிக்க வம்பர் செய்யும் அவமதிப்பைத் தான் பொருட்டாய்க் கொள்வரோ? ஊக்கமுடைமையே ஆக்கத்திற் கழகு. 'முயற்சியுடையோர் இகழ்ச்சி அடையார்' என்பது பழமொழி. பகீரதன் கங்கை கொணர்ந்ததும், கொலம்பஸ் அமெரிக்காவின் இருப்பைக் கண்டுபிடித்ததும் ஆகிய இவை போன்ற பலவும் இப் பழமொழிக்குச் சாக்ஷிபூதமான திருஷ்டாந்தங்கள்.

பக்கத்துணை பார்த்திருத்தல் பயனற்றது. தங்கள் தங்கள் தடக்கைகளே எக்காலத்திலும் உற்ற துணையாகும். அவைகளே இடுப்பில் கட்டிய துணி கலையும்பொழுது உதவுவதுபோலத் தப்பாமல் உதவுவன. தானுந் தனியுமாய் முயல்வதே உறுபயன் கொள்ளுதற்கு உலையா உபாயம்.

" தானே தனக்குப் பகைவனும் நட்டானும்
தானே தனக்கு மறுமையும் இம்மையும்
தானே தான் செய்த வினைப்பயன் துய்த்தலால்
தானே தனக்குக் கரி "

என்றது பழமொழி வெண்பா. ஆளை அனுப்புதல் அதமம்; மகனைப் போகவிடுத்தல் மத்திமம்; உடையான் செல்லல் உத்தமம் என்ப. விளைந்த வயலில் கூடுகட்டிக் குஞ்சு பொறித்த வானம்

பாடி வயலறுத்தற்குப் பிறருதவியை உடையவன் எதிர்ப்பார்த்துப் பேசிய நாள், தன் குஞ்சுகளை இடம் பெயராமல் படுத்திருக்கச் சொன்னதும், தானும் தன் மக்களுமே கதிரறுக்கத் துணிந்தது செவியிற் படவும் வேற்றிடம் தேடிச் சென்றதும், இவ்வுண்மையை வெளிப்படுத்துதற்கு இயற்றப்பெற்ற கதை. 'உதட்டு வாழைப்பழத்தை உள்ளே தள்ளுவாருண்டோ' என்றிருப்பார் பசியா லிறக்கவேண்டியவர்களே. பிறன்கை பார்த்து நிற்பவன் பேதையிற் பதர். பொய்க்கால் சட்டிப் பத்தடி நடப்பதற்குள் வெறுங்கால் வெகுதூரம் செல்லும். ஏனையோரை எதிர்பார்த்து ஏமாந்து போகாமல் கடவுளை நம்பிக் கைவினை கரவாமல் கருமம் புரிவோர் கைவிடப்படார்.

கையில் பொருள் மிகுந்திருந்தாலன்றோ காரியங்களைத் தொடங்கவாய்க்கும் என்றுஏங்கி நில்லற்க. வினைவல்லானை வீசி யெறிந்தாலும் கீழே விழாமல் குதித்து நின்று வேலை செய்து வருவாய் தேடவாய்த்தவழி வினவுவன். கைம்முதல் கனத்தவர் கடைசியில் கந்தை உடுத்தலுமுண்டு.

'முன்பெருகலின் பின் சிறுகாமை சிறந்தன்று'

தான் தேடிய பொன்னுக்கே மாற்றும் உறையும் உண்டு. தந்தை தேடிவைத்த மணிகளும் கல்லாம், பொன்னும் மண்ணாம். இன்மையோடு தொடங்குவோன் இனிமையோடு முடிப்பான் தன் வாழ்நாளை. பசித்தவனுக்கே புசித்தல் சுவையுடைத்து. கடுத்தின்றோனே கட்டியின் சுவை கடிதில் காண்பன். காணி முதலாளி கோடீசுவரன் ஆவதும் உண்டு.

இடத்தாழ்வால் இழிவுபெற்றோம். ஆதலால் ஏற்றமடைதல் எமக்கு ஏலாது என்றல் ஏழைமை. தாழ்ந்த கள்ளியின் வயிற்றில் பிறந்த அகில் கட்டையை அரசரும் ஆதரிப்பர். குப்பையில் கிடந்தது காற்றடித்துக் கோபுரத்தில் ஏறுதலில்லையோ? கைதேர்ந்த வினையாளன் தன் கூர்த்த புத்தியையும் செலுத்துவானேல் மற்றவர்கள் இழக்கும் எந்தக் காரியத்திலும் தான் பயன் பெற்றுப் பணக்காரனவான்.

'சீருடை ஆண்மை செய்கையின் அறிப'

ஆரியக் கூத்தாடினாலும் காரியத்தின்மேல் கண்ணுடையவர்களாய்ப் பொருளைப் போற்றி வாழ்வோர்கள் ஏற்றமடையாத நிலம் எந்த நிலம்?

கருமம் செய்வுழி மெய்வருத்தம் கண்டு கனுழுவோர் கசடர். கனியில் கொட்டை யுண்டென்று கழிப்பரோ? முள் உண்டென்று முழுமணம் கமழும் ரோஜாப்பூவை மோப்பதில்லையோ?

துன்பம் வெய்யோர்க்கே இன்பம் எளிது!
'மிகுதி வேண்டுவோன் தகுதி தண்டான்'
'இன்பம் வேண்டுவோன் துன்பம் தண்டான்'
'சோம்ப ரென்பவர் தேம்பித் திரிவர்.'

அசைவில்லாத ஊக்கமுடையாரிடம் ஆக்கம் அடையும்வழி தேடிச் செல்லும். உள் அடைபட்டுப் படுத்துஉறங்கும் நாயைத்தான் உண்ணி உறிஞ்சும். வேட்டைநாய் அதை அறிந்ததில்லை. வெறுஞ் சோம்பேறி, வெள்ளம் வடியும் வரை வழிபார்த்து வீண்போது போக்குவான். முயற்சி யுடையானே வெள்ளம் நீந்திக்கடந்து பட்டினத்தில் பண்டம் மாறிப் பயனெல்லாம் பெறுவன்.

பல்லோர் போட்டியால் பயனிழந்தோம் என்பர் பொருள் ஈட்டும் முயற்சி யில்லாதார் எவரும். தென்னை மரத்தில் தேள் கொட்டிற்றென்றால் பனை மரத்தில் நெறி ஏறிற்று என்பவரும் இருவரும் ஒருவரே. நொண்டிக் குதிரைக்குச் சறுக்கினதே சாக்கு. பொய்யோ பிழையோ பழி சுமக்கப் பிறர் உண்டு. ஊர் நிறைந்திருந்தாலும் வேலை செய்வோனுக்கு வெளியிட மில்லாமற் போகாது. பத்துப் பூனை பதுங்கிக் காத்திருந்தாலும் தப்பிப் பிழைத்து நுழைய எலிக்கு வளை எப்படியாவது ஏற்படும். நல்ல வினையாளனை நாட்டோர் நாளும் நாடுவர். நல்ல மாடு தன்னூரிலேயே விலைப்போகும். பஞ்சைக் கடையிலும் பத்துக் காசுக்கு விற்கும். மழுங்கச் சிரைத்த தலையிலும் மற்றொருவன் கத்திக்கு மயிருமகப்படும். சிறக்கச் செய்த காரியங்களையும் மேன்மேலும் சிறப்பிக்கலாகும். ஒப்பற்ற வேலைத்திறமை உடையவன் எவனோ அவனையே ஊராரெல்லாம் வேண்டுவார்கள். ஆகையால் ஊதியம் எல்லாம் அவனதே. ஆங்காங்கு பஞ்சு முதலிய ஆலைகள் அடர அமைக்கப் பெற்றதால் ஆள்களுக்கு அலுவல் அழிந்து, அறக்கூழ்ச்சாலை அடையலாயிற்று என்பார்கள் அந்தியில் அடையக்கூடிய ஆக்கம் அழிக்கும் கள் உண்ணும் அறிவிலிகள். இவ்வாலைகளால் பண்டங்கள் நயத்து பண்டைக்காலத்தில் பத்துப்பொன் பெற்றதெல்லாம் பின்னுக்குப் பத்துப் பணத்

அருவினை யென்ப வுளவோ கருவியாற் கால மறிந்து செயின்.

துக்குப் பெறல் அநேகருக்கு ஒருங்கே அலுவல் அளிக்கல் ஆனதும் முதலிய பெரும் பயன்கள் அவர்கள் மயங்கிய கண்களுக்கு புலப்படாவாயின. குப்பைமேடு குப்பைமேடாய்த் திரிவதே மணியமா யிருப்பவன் காலமெல்லாம் கந்தை கட்டிக் கழிக்கவேண்டியவனே. அப்படிச் செய்வதை விட்டு, சற்றே புத்திசெலுத்தி இங்கே கொஞ்சம் அங்கே கொஞ்சமாய்க் கைவினை கற்பானாகில் காட்டாளும் விட்டாளாகலாம். 'காலங் கெட்டுப்போச்சுது' என்பார்கள் கசடர்கள். கொட்டாவி விட்டுக்கொண்டு குணம் இல்லாதவனாய்த் திரிவோனுக்கு எந்தக் காலமும் கெட்டுப்போன காலமே. நல்ல காலம் வரவே வராது.

எந்த விதத்திலும் காரியத்தைச் செய்து முடித்தே தீரவேண்டுமென்ற மனத்துணிவோடு தொடங்காமையாலேயே மக்களிற் பலர் மேன்மையடைவதில்லை. அரைப்பணம் சேமிப்பது தான் கஷ்டம்; பிறகு ஆயிரம் சேமித்தலெளிது. 'முதல் போடு போட்டதும் பாதிப்போர் முடிந்தது' என்பார்கள். கள் குடிவைபை கண்காணாத் தூரம் கடாசிவிட்டு 'முயல்வேன்' என்னும் கொடியை யுயர்த்தி வினை செய்வதையே நாடிச் செல்வானாகில், சிறிது சிறிதாக மீத்துவைத்து நிதிகளில் ஈட்டிக் கடைசியில் நிகரற்ற நிதிக் குவையுடையோனாகலாம். என் தலைவிதி நான் தரித்திரனாகவே யிருக்க வேண்டும் என்று எண்ணி ஏங்கி நிற்போன் என்றைக்கும் ஏழையாகவேதா னிருப்பான். ஆனால் கடையரிற் கடையனாகிய வறிபனுக்கும் வளவனாக வாய்த்த வழியுண்டு; பவளம் பார்த்து விழித்தகடை, பெண்டாட்டியென்ற கால் விலங்கும் பெற்ற பிள்ளைகள் என்ற சுள்ளாணிகளும் கட்டுப்படுத்தாமுன், இவ்விலங்கங்கள் ஏற்பட்ட மேல் சுமையின் பளுவைச் சுமக்க முடியாமல் வாழ்வென்னும் வழிச்செலவில் பின்னிட்டவனாய், பசியாறக் கஞ்சியும், கட்டக் கந்தையும் கிடைத்தால் அதுவே கோடி பாக்கியம் என்று கொள்ள வேண்டியவனே. ஆனால் அப்படியும் சொல்வதற்கில்லை. குஞ்சுகள் மிஞ்சினால் கோழி குப்பை கிளறுவதும் அதிகம் தான். நெஞ்சழுத்தமுள்ள நெடியோன் குன்றின் நெடுமை கண்டு உள்ளம் அழிவனோ? மலையேறிச் செல்லல் எவ்வம் உடைத்தே. ஆயினும் படிபாங்கா யிருந்தால் போதாதோ? அது கண்டு மனத்துணிவோடு மலையேறும் ஊக்க முடையோன் தப்பாமல் உச்சி யடைவான். பட்ட பாடெல்லாம் நினைப்புக்கு இனிப்பு. சிறு காலையிலேயே இளையோர்கள் செவ்வி பாராமல் மெய்வருந்தி, கடிது முயன்று, கூழ் குடித்து, காசு மீத்து வைப்பாரேல், காலத்துக்கும் கஷ்டப்பட்டுக் கஞ்சி குடிக்கக் காரணமிராது. சிக்கனத்தைக் கருதியேனும் கள் குடியைக் கழிப்பாராக. கண்ணிற் சிறந்த உறுப்பு இல்லாததுபோல, தண்ணீரிற் சிறந்த உண்ணீருமில்லை. அதுவோ இயந்திரங்களையும் இயக்கும் வலிமை யுள்ளது. அரிமாவும் பரிமாவும் பருகுவதும் அதுவே. கள்ளுக் கடைக்காசுக்கு கதவு வைத்த வீடு கடிதிற் கட்டலாம். 'கள்ளுண்போன் சோர்வு இன்மை பொய்.'

இம்மையில் நன்மை புரியவேண்டும் இச்சையுடையோர்க்கும் 'முயல்' என்னும் அச்சிறு மொழியே முன்னிற்கும். தெய்வத்துக்குத் தொண்டு செய்யப் பல்வேறு துறைகளுண்டு. அவற்றி லொன்றேனும் ஒருவர்க்கு ஏற்றதாய் அமைவது திண்ணம். பல்லோர் குழாத்தில் பரக்கப் போதிக்கப் பேராற்றல் இல்லையென்று ஒன்றும் செய்யாமல் ஓயவேண்டியதில்லை. பக்கத்திலுள்ள பாமரர் பத்துப் பேர்க்கேனும் போதித்தலே போதும். சிறு புலத்திலும் பெருங் கதிர் விளையும். பெரிய பானையில் காய்ச்சினால் தான் பால் உருசிக்கும் என்பதில்லை. சிறு குடிசைகளிலும் பெருந் தவசிகளிருக்கலாம். திருடன் வந்தானென்று தட்டியெழுப்பச் சிறு நாயும் போதும். சிறு பொரியேனும் உள்ளிருப்பது நெருப்பே. சிறு குறளிலும் விழுமிய பொருள் ஆழ்ந்து கிடக்கும். செய்வனவற்றைத் திருத்தமாகவும் செவ்வையாகவும் செய்து, மனதார மாயோனை வாழ்த்தி நிறுத்தினால், பயன் கொடுக்கும் பாரம் பரம்பொருளுடையது ஆகும்.

அந்தோ! விழலுக்கிறைத்த நீர்போலும், காட்டுக் கெரித்த நிலவுபோலும், அநேகர்க்குப் புகட்டும் அரிய புத்திமதிகள் ஆற்றிற் கரைத்த புளியாம். கழுதைக்குபதேசம் காதிலே சொன்னாலும் அழுகைக் குரலொழிய அங்கொன்றுமில்லை. பருவத்தில் பயிரிடாமல் தூங்கினால் அறுவடைக் காலத்தில் அழவேண்டியவனே.

(இதன் தொடர்ச்சி 63-ம் பக்கம் பார்க்க.)

ஏன்?

WHY?

(ஒரு ஜனசார நாடகம்)

[ஸ்ரீமான் பே. கோ. சுந்தரராஜன் அவர்கள், பி. ஏ.]

அங்கம் 2

காட்சி—1

[மகாதேவய்யர் ஆழ்ந்த யோசனையுடன் உட்கார்ந்துகொண் டிருக்கிறார். பிரவேசம்: அவர் மனைவி.]

மனைவி:-- சாதமெல்லாம் ஆறிப்போரது சாப்பிட வர்ரதுதானே.

மகா:— உம்.........வருகிறேன்.

மனைவி:—என்னமோ மாதிரி இருக்கேளே! உடம்பு அசௌக்கியமா என்ன?

மகா:—ஒன்றுமில்லை. கிட்டுவைப்பற்றித்தான் கவலையா யிருக்கிறது.

மனைவி:—கவலையென்ன? அவன்தான் கல்யாணம் செய்துகொள்ள மாட்டே னென்கிறான். சட்டம் வேறே இருக்கு. அவனைப்பற்றி ஏன் கவலை?

மகா:—உனக்கென்ன தெரியும்? கிட்டு இப்போதுதான் காலேஜியில் முதல் வருஷம் முடித்திருக்கிறான். இனிமேல் எனக்கு வரும் 20 ரூபாய் பென்ஷனில், அவனை எப்படிப் படிக்க வைக்கிறது என்றுதான் யோசனை பண்ணிக்கொண்டிருக்கிறேன்.

மனைவி:—ஆனால் படிப்பை நிறுத்திவிட வேண்டியதுதான்.

மகா:—இப்போ படிப்பை நிறுத்திவிட்டால் அவன் ஒன்றுக்கும் உதவமாட்டான். தவிர, அவன் ஒன்றும் செய்யாமல் வீட்டில் வீண் காலம் கழிப்பதும் எனக்கு நியாயமாகத் தோன்றவில்லை. ராமநாதய்யர் அவனை 'பி. ஏ.' வரைக்கும் படிக்க வைக்கிறே னென்று சொன்னார். அதற்குள், நீயும் அவனும் ரொம்ப புத்திசாலிகளைப்போல் கல்யாணம் வேண்டாமென்று சொல்லிவிட்டீர்கள். இன்னமே அவன் தூங்க வேண்டியதுதான்.

மனைவி:—அவா படிப்புக்கு ரூபாய் கொடுப்பதைப்பற்றி எனக்கும் சந்தோஷந்தான். ஆனால் சட்டமொன் றிருக்கே. கல்யாணத்தைப் பண்ணிட்டு ஜெயிலுக்குப் போனால் எப்படி இருக்கும்?

மகா:—என்னமோ சின்னப்பயல் அவன் சொல்லுகிறா னென்று நீயும் உளறுகிறயே. உனக்கும், அவனுக்கும் எனக்குமேல் தெரிந்து விட்டதோ? சட்டம் நம்மை ஒன்றும் செய்யப் போகிறதில்லை. ஒருவனுடைய விவாஹத்திற்கெல்லாம் சர்க்கார் உத்திரவு கொடுப்பதென்றால் அது எவ்வளவு அநியாயம்! ரூபா யுள்ளவர்களுக்குச் சரிதான். நம்மைப்போன்ற ஏழைகள் என்ன செய்யறது? ராமநாதய்யர் திரும்பியும் வேறே எங்கேயோ மாப்பிள்ளை தேடுகிறாரென்று கேள்விப்பட்டேன். இச் சமயத்தை விட்டால் நமக்கு வரதக்ஷிணை ஒருவரும் கொடுக்கப்போகிறதில்லை.

மனைவி:—அது வாஸ்தவந்தான். எனக்கு இப்பொழுதுதான் நம்முடைய ஸ்திதி தெரிகிறது. ஆனால் சட்டம் ஒன்றும் செய்யாதென்று சொன்னாலும், எது எப்படி யாகுமோ? யார் கண்டா? வரதக்ஷிணையை வாங்கி அப்படியே சர்க்காருக்கு அபராதமாகக் கொடுத்துவிட்டு உட்கார வேண்டியதாயிருந்தால் என்ன செய்யறது? அதோடே உங்கள் ஒண்ணு விட்ட தமக்கை சாவித்திரி, தன்னுடைய பெண்ணை கிட்டுக்குக் கொடுக்கவேண்டுமென்று சொல்லிக்கொண்டிருக்கிறாளாம். நாம் வாங்கிக்கொள்ளாவிட்டால் சொந்தத்திலேயே பண்ணிக்காமல் அந்நியத்திலே பண்ணிண்டான்னு பொல்லாப்பு வேறே வரும். அப்படியே சொந்தத்தில் பண்

(62-ம் பக்கத் தொடர்ச்சி)

முன் யோஜனையின்றிக் கண்டதே காட்சி கொண்டதே கோலம் என்று அன்று கொண்டதை அன்றே துய்த்து அழிப்பார்க்கு மறுநாள் மருந்துக்கும் சோறின்றி மடிய வேண்டிவரும் என்பது ஒருதலை.

மணியே பொன்னே மண்ணே பொருளே
அணியே துணியே அகமே கலனே
இகமே சுகமே இவைதாமெல்லாம்
ஊக்கமே யுன்னை யுரைகுறி யன்றே!

ணிக் கொண்டாலும், சாவித்திரி வரதக்ஷிணை கொடுக்கமாட்டாளாம். பொண்ணுக்கு மாத்திரம் காசமாலையும் சங்கிலியும் போடணுமாம். இவ்வளவு பொல்லாப்போடே லக்ஷ்மியை வாங்கிக்கொண்டால் உடனே சாவித்திரி போலீஸுக்கு எழுதிடுவாள்.

மகா:—அவள் கிடக்கிறாள். அப்படித்தான் ஒவ்வொருவரும் இஷ்டப்படி சொல்லுவார்கள். எல்லோரையும் சந்தோஷிப்பிக்க நம்மால் முடியுமா? நாம் நம்முடைய சௌகரியத்தைப் பார்த்துக்கொண்டுதான் போகவேண்டும்.

மனைவி:— லக்ஷ்மியின் தகப்பனார்தான் காமாக்ஷி சம்மதிக்கவில்லை யென்று கல்யாணத்தை நிறுத்திவிட்டாரே. இன்னும் மாப்பிள்ளை எதற்காகத் தேடுகிறீர்? காமாக்ஷிதான் சட்டவிரோதமாக நடந்து ஜெயிலுக்குப் போயாவது விவாஹம் நடத்த வேண்டாமென்று சொல்லிவிட்டாளே.

மகா:—இதற்குத்தான், சட்டம் நம்மை ஒன்றும் செய்யப்போகிறதில்லை யென்று சொன்னேன். சட்டம் கொண்டு வந்தவர்கள், தாங்கள் புத்தியில் பிரகஸ்பதிகள் என்று நினைத்துக்கொண் டிருக்கிறார்கள். ஆனால் உண்மையில் சட்டத்தின் பிரயோஜனமற்ற தன்மை அவர்களுக்கே தெரியவில்லை. முதலில் குழந்தைகள் கல்யாணத்தைத் தடுப்பதற்காகவே சட்டம் கொண்டுவந்தார்கள். அப்படி மீறி கல்யாணம் செய்த பிறகு, பெற்றோரைத் தண்டிப்பதனால் பால்ய விவாஹம் எப்படி நின்று போய்விடும் என்பது பகவானைத்தான் கேட்கவேண்டும். நான் நாலு நாளைக்குமுன் இராமநாதய்யருடன் பேசிக்கொண் டிருந்தேன். அப்பொழுது வக்கீல் ராமசாமி அய்யரும் இருந்தார். அவர், ஏதாவது ராஜ சமஸ்தானத்தில் விவாஹம் செய்தால் சட்டம் ஒன்றும் செய்யாதென்று சொன்னார். அதுமுதல் இராமநாதய்யர் புதுக்கோட்டையில் விவாஹத்தை நடத்திவிடுவதாக நிச்சயித்து என்னைக் கேட்டார். ஆனால் கிட்டு ஒரே பிடிவாதமாய், சிறுபிள்ளைத்தனமாய் உளறுகிறான். எனக்கு ஒன்றும் தோன்றவில்லை.

மனைவி:—அப்படியானால் கிட்டுவிடம் இந்த சமாசாரத்தைச் சொல்லுகிறதுதானே.

மகா:—எல்லாம் எத்தனை தரம் சொல்லுவது! அவன் சட்டத்திற்குப் பயந்து சொல்லவில்லை. விவாஹமே வேண்டாமென்கிறான். படிப்பிலும் ஆசையாயிருக்கிறது. அவனைப் படிக்க ஆசைப்படும்போது, நான் என்ன செய்வது? கடன் வாங்கலாமென்றாலும் ஒருவரும் கொடுக்கமாட்டேனென்கிறார்கள். நீயே அவனிடம் இன்னொருதரம் சொல்லிப்பார். அவன் ஒரே பிடிவாதமா யிருந்தால், எனக்குக் கவலை அதிகமாய் ஏதாவது ஆபத்து நேரிடும்போ லிருக்கிறது. நம்முடைய நிலைமையை நினைக்கும்போது எனக்கு புத்தி தடுமாறுகிறது.

மனைவி:—சரி, போரும், கண்டபடி பேசவேண்டாம். எல்லாம் நான் சொல்லுகிறேன். இலைபோட்டு நாலுநாழி யாகிறது. சாப்பிடவாங்கோ.

மகா:—பசியே எடுக்கமாட்டெ னென்கிறது. கவலைதான் அதிகமா யிருக்கிறது. கிட்டுவும் வரட்டுமே.

மனைவி:—அவன் எங்கேயோ போயிருக்கிறான். வரும்போது சாப்பிடட்டும். நீங்க வாங்கொ, நாழியாரது. (போகிறாள்.)

காட்சி 2

[ஒரு திண்ணையில் கிருஷ்ணமூர்த்தி, சில தோழர்களுடன் சீட்டு விளையாடிக்கொண் டிருக்கிறான்.]

ஒருவன்:—டே! சீனு, என்னடா அடித்தை போன விசையே கிளாவர் இறக்கினையேடா சீ! இதாண்டா உன்னோடே; கொஞ்சம் கவனிச்சு விளையாடேண்டா.

சீனு:—என்னடா என் கிட்டே துருப்பே இல்லெயேடா என்ன பண்ணச் சொல்றே?

முதலில் பேசியவன்:— துருப்பில்லாட்டா வேறே போட்றது. கொஞ்சங்கூட ஸ்வாரஸ்யமில்லாமல் விளையாட்ராண்டா!

மற்றொருவன்:-அதுக்காக என்னடாசண்டை. ஆட்டத்தைப் பார்ரா. டைமண்ட் இறக்கா, வெட்றையா சரி போடு.

சீனு:—எங்கே யிருந்துடா வெட்ரது. எங் கிட்டேதான் துருப்பில்லெயே!

(ஒரு சீட்டைப் போடுகிறான். விளையாடுகிறார்கள்.)

கிரு:—(சீட்டுகளையெல்லாம் கீழே போட்டுவிட்டு) டே! ரொம்ப நாழியாய்விட்டது; போரும். நான் போகவேண்டும்.

சீனு:—ஏது அவ்வளவு அவசரம்? ராமநாதய்யர் ஆத்துக்கோ?

மு. பேசியவன்:—லக்ஷ்மியோடே விளையாடப் போவாண்டா.

மற்றொருவன்:—டேட கிட்டு, கல்யாண சந்தடியில் என்னை மறந்துவிடாதே.

கிரு:—டேட! உங்களுக்கு நான் விவாஹம் செய்துகொள்ள மறுத்துவிட்டேனென்று தெரியுமே. இன்னும் ஏன் வீணில் பேசுகிறீர்கள் ?

சீனு:—டேய் பால சந்நியாசி! உன்னைப் போல எத்தனையோபேரைப்பாத்திருக்கேண்டா எல்லாம் இங்கேதான் கல்யாணமாய்விட்டால் மாமியார் வீட்டைவிட்டு வரமாட்டாய்.

கிரு:—டேட! சீனு, விளையாடாதே. விவாஹம் விளையாட்டாகப் பேசும்படியான விஷயமல்லவென்பதை உனக்கு எத்தனை தடவை கூறியிருக்கிறேன்! என் மனப்பூர்வமாய்ச் சொல்லுகிறேன் ; உங்களில் ஒருவனாவது இன்னும் குறைந்தது ஐந்து வருஷங்களுக்குள் விவாஹம் செய்துகொள்ள வேண்டாம் ; உங்களுடைய நன்மைக்காகத்தான் சொல்லுகிறேன்.

முதலவன்:—போரும், தான் செய்துகொள்ளாதது போதாமல் நம்மையும் தடுக்க ஆரம்பித்துவிட்டான். பட்டுக்கரை வேஷ்டியும் நலுங்கும் விவாஹமில்லாமல் எங்கேயிருந்துடா வரும் ?

சீனு:—இல்லேடா அவர் மெட்ராஸிலிருந்து வந்திருக்கிறார். துரைக்கு நாகரிகம் முற்றிப் போய்விட்டது. இப்படித்தான் பேசுவார்.

கிரு:—மற்றுமொரு முறை சொல்லுகிறேன். விளையாடாதீர்கள். இப்பொழுது சிறுவர்களாகிய நாம், விவாஹம் செய்துகொண்டால் பின்னால் கஷ்டப்படுவோம். நம்முடைய நன்மைக்காகவே விவாஹச் சட்டமும் வந்திருக்கிறது.

இரண்டாமவன்:—இன்றைக்கு விவாஹச் சட்டம் வரும். நாளைக்கு ஒருவரும் குடுமி வைத்துக்கொள்ளக் கூடாது. உன்னைப்போல் கிராப் செய்துகொள்ள வேண்டுமென்று சட்டம் வரும். அதுவும் நம் நன்மைக்காகத்தானே?

சீனு:—ஆமடா அப்பொழுது தலைக்கு எண்ணெய் குறையாதா ?

முதலவன் :—இல்லேடா ! பொண்டாட்டியோடே சண்டைவந்தால் அவள் நன்றாய் முன் குடுமியைப் பிடித்து அடிக்க ஹேதுவாயிருக்கும்.

கிரு:-(இரண்டாமவனை நோக்கி) என்ன முத்து, நீகூட இப்படிப் பேசுகிறாய்? தவிர, நீங்களெல்லோரும் இம்மாதிரி பேசுவது எனக்கு ஆச்சரியமா- யிருக்கிறது. பெண் குழந்தைகளுக்காவது ஒன்றும் தெரியாது. நம்மைப்போன்ற படித்தவர்கள், சமூகத்தின் நன்மையையோசித்து நடந்துகொள்வதை விட்டு, விளையாட்டுத்தனமாய்ப் பேசினால் என்ன பயன் ? நாமல்லவோ தெரியாதவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். நாமே இப்படிப் பேசினால் படிக்காதவர்கள் ஸ்திதி என்னவாகும் ?

முத்து:—கிட்டு, நீ சொல்வதை முற்றிலும் நான்நம்புகிறேன். ஆனால் எனக்கொரு சந்தேகம்.

முதலவன்:—ஆம். இவர் புறப்பட்டு விட்டார். என் சார்! முத்துசாமி ஐயரே! கிட்டு உங்களுக்கு ஏதாவது கொடுக்கிறேனென்று சொன்னானோ ?

முத்து:—சரி விளையாடாதே போரும் - ஆனால், கிட்டு, நம்முடைய பெற்றோர் விருப்பங்கொண்டு, நமக்கு விவாஹம் செய்யவேண்டுமென்று ஆரம்பித்தால் நாம் தடுக்க முடியுமா? பெற்றோர் பெரிதா சமூகம் பெரிதா ?

கிரு:—தாய் தந்தையர் ஒருக்காலும் தங்கள் குழந்தைகளைக் கெடுக்க முயலார். ஆனால் அவர்கள் இப்பொழுது எனக்கு விவாஹம் செய்ய வேண்டுமென்றது, அவர்களுடைய விருப்பத்தினாலல்ல; அவர்கள் கட்டுப்பட் டிருக்கும் ஒரு முறையான ஒழுக்கத்தை நிலைநிறுத்த வேண்டுமென்ற நம்பிக்கையினால்தான். வேத சாஸ்திரங்கள் இச்சட்டத்திற்கு இடங்கொடுக்காததினால், இச்சட்டம் அநீதியானதென்றும், இதை மீறுவது தங்கடமையென்றும் நினைக்கின்றார்கள். முடிவில் இந்த நம்பிக்கை கொண்டவர்கள் அவர்கள் அடங்கியுள்ள ஒரு சமூகத்திற்குப் பயந்தே நடக்கின்றார்கள். அவர்களுட்பட்ட அச்சமூகம் ஓர் ஒழுக்கத்தைக் கடைப்பிடிக்கின்றது. ஆனால் அவ்வொழுக்கம் இப்பொழுது வளரும் சமூகத்தைச் சேர்ந்த நம்மைப் போன்றவர்களுக்கு தீங்கு விளைவிப்பதாயிருக்கிறது. ஆகவே, இப்புதிய சமூகத்தின் முக்கிய அங்கத்தினர், சிறுவர்களாகிய நாமாகையால், பெரியோர்களுக்கு அவர்களுடைய சமூகத்திற்கும் இனி வரப்போகும் சமூகத்திற்கும் உள்ள வித்தியாசத்தை எடுத்துத் தெரிவித்து, இப்புதிய சமூகம் க்ஷேமமா யிருப்பதற்கு இவ்வகையான மாறுதல்கள் தேவை என்பதையும் எடுத்துக் கூறுதல் நம்முடைய கடமை.

முத்து:—பெற்றோர், தம் சமூகத்து விதிகளை அநுசரித்து நடக்க முற்பட்டால், நாம் அவர்க

பொள்ளென வாங்கே புறம்வேரார் காலம்பார்த் துள்வேர்ப்ப ரொள்ளி யவர்.

ளுக்கு நம்முடைய கடமையைச் செலுத்த வேண்டாமா?

கிரு:—ஒரு சமூகத்தின் விதிகள், ஒரு காலத்திற்கே பொருந்தும். இச்சட்டமும் இன்னும் சிறிது காலத்தில் வேறொரு சட்டத்திற்கு இடங் கொடுக்க நேரிடும். உலகம் நாளுக்குநாள் அதிகமாய் மாறிக்கொண்டே வருகிறது. பெற்றோர் தாம் நம்பும் ஒரு விதிக்காக நம்மை விவாஹம் செய்துகொள்ள வற்புறுத்தினால் நாம் மறுக்க வேண்டியதுதான். நானும் அப்படியே செய்துவிட்டேன். பழைய ஒழுக்கங்களைப் பற்றியும், பழைய சமூகத்தைப் பற்றியும் நாம் கவலைப்படுவதில் பயனில்லை. இனிமேல் வரப்போகும் மானிட ஜன்மம் எவ்வளவு க்ஷேமமாயிருக்க வேண்டும் என்பதைப் பற்றியே நாம் யோசிக்க வேண்டும். இம்மாதிரி சாஸ்திரங்களால் போதிக்கப்பட்ட ஒழுக்கங்கள், நம் தேசத்தின் தற்கால நிலைமைக்குச் சிறிதும் பயனில்லாதவை யென்பது தெளிவாய்த் தெரிகிறது. நம் தேசம் முழுவதும், இனி வரப்போகும் சமூகத்தைச் சேர்ந்த வாலிபர்களாகிய நம்மையே நம்பிக்கொண்டிருக்கிறது. நம் தேசம் தற்கால உலகத்தில் சிறந்து விளங்கவேண்டுமானால், நாம், முதலில், நம்முடைய க்ஷேமத்தைப் பற்றியே சிந்திக்கவேண்டும். உதாரணமாக, நாம் இப்பொழுதே சம்சார சாகரத்தில் மூழ்கிவிட்டால், நம்முடைய தேசத்தை நிலைநிறுத்துவது எப்படி?

முத்து:—இப்பொழுது, உன் பெற்றோர் தம் தர்மத்திற்கே அல்லாமல் தங்களுடைய சந்தோஷத்திற்காகவே உனக்கு விவாஹம் செய்ய வேண்டுமென்றால் நீ மறுப்பாயா? அப்பொழுது, நீ உன் பெற்றோரை சந்தோஷிப்பிக்க வேண்டாமா?

(கிட்டு ஒன்றும் தோன்றாமல் சிறிது நேரம் யோசிக்கிறான்.)

சீனு:—வந்தான்டா வழிக்கு. இதற்குப் பதில் சொல்ல முடியவில்லை. ஒருவேளை பெற்றோரைக் காட்டிலும் சட்டமே பெரிதென்று சொன்னாலும் சொல்லுவான்!

கிரு:—முத்து நீ கேட்ட கேள்வி உண்மையில் கடினமானதே. ஆனால் நான் என்னை வியன்றவரை விவாஹத்தினால் எனக்கு நேரிடக்கூடிய கஷ்டங்களை என் பெற்றோருக்கு எடுத்துக் கூறியிருக்கிறேன். என் பெற்றோர், தங்கள் சந்தோஷத்திற்காக மாத்திரம், என்னை சம்சார சாகரத்தில் மூழ்குவிப்பார்களென்று எனக்குத் தோன்றவில்லை. ஏன், ஒருவரும் தங்கள் குழந்தைகளை அம்மாதிரி வற்புறுத்தமாட்டார்கள்.

முத்து:—ஒருவேளை வேறு காரணங்களைக் கொண்டு வற்புறுத்தினால்?

கிரு:—அப்படித் தங்கள் சந்தோஷத்தையே என் பெற்றோர் பெரிதாகக் கருதினால், நான் என்னுடைய வாழ்வை அவர்களுக்குத் தியாகம் செய்துகொள்ளுவேன். ஆனால் ஒன்று நிச்சயம். இப்பொழுது எனக்கு விவாஹம் நடந்தால் பின்னால் கஷ்டமே நேரிடும். சரி எனக்கு கால தாமதமாகிறது. நான் போகவேண்டும்.

(போகிறான்.)

சீனு:—என்னடா என்னமோ விளையாடுகிறான் என்று நினைத்துக்கொண்டிருந்தால், வாஸ்தவமாகவே தன்னால் முடியாத காரியங்களைப்பற்றியெல்லாம் உளறுகிறான்.

முத்து:—அவன் சொல்வது முற்றிலும் வாஸ்தவந்தான். அவன் தன் பெற்றோருக்கு ஒரே குழந்தை. அவனைப் படிக்கவைக்க வேண்டுமென்றே அவர்கள் எப்படியாவது விவாஹம் செய்யவேண்டுமென்கிறார்கள். அவன் அன்றைக்கே மறுத்துவிட்டான். ஆனால் இப்பொழுது படிப்பிற்கு வழியில்லை யென்று தெரிந்தால் விவாஹம் செய்துகொள்வான். அவனுக்கும் எப்படியாவது படிக்க வேண்டுமென்றே எண்ணம். அதோடு ஆசார சீர்திருத்தத்திலும் விருப்பம் அதிகம். ஆனால் அவன் தன் பெற்றோரை அதிகம் மீறமாட்டான். எதற்கும் பார்ப்போம். (எல்லோரும் போகின்றனர்.)

காட்சி 3

[மகாதேவய்யர் மனைவி ஓர் அடுப்பினருகில் உட்கார்ந்துகொண்டிருக்கிறாள். கிட்டு வருகிறான்.]

தாயார்:—கிட்டு, இத்தனை நாழி எங்கே போயிருந்தே, வா, சாப்பிட உட்கார். (இலை எடுத்துப் போடுகிறாள். கிட்டு உட்காருகிறான்.)

கிரு:—அப்பா எங்கே? அவர் சாப்பிட்டாய் விட்டதா?

தாயார்:-என்னமோ சரியாகவே சாப்பிடல்லை. எப்போ பாத்தாலும் கவலையாகவே இருக்கிறார்.

(சாதம் முதலியவை பரிமாறுகிறாள்.)

கிரு:—(சாதம் பிசைந்துகொண்டே) கவலையா? எதைப்பற்றி?

தாயார்:—உன்னுடைய படிப்பைப் பற்றித்தான். ரூபா யில்லாமல் ரொம்ப கஷ்டப்படு

கிறார். இப்போ யாரண்டையோ போய் கடன் வாங்கிக்கொண்டு வரவேண்டுமென்று போனார். அது கிடைக்காவிட்டால், உனக்கு விவாஹம் செய்தால்தான் படிப்பு நடத்த முடியும் என்று சொல்லுகிறார்.

கிரு:—அம்மா, விவாஹத்தைப்பற்றிப் பேச வேண்டாமென்று அன்றைக்கே சொன்னேனே. எனக்குக் கொஞ்சங்கூட இஷ்டமில்லாதபோது என்னை கட்டாயப்படுத்துவதில் என்ன பிரயோசனம்?

தாயார்:—என்ன கிட்டு, இன்னும் இப்படியே பேசுகிறாய்? உன்னுடைய படிப்பிற்குத்தானே இவ்வளவு கஷ்டப்படுகிறார்.

கிரு:—அம்மா, எனக்குப் படிப்பில் விருப்பமதிகமென்பது வாஸ்தவந்தான். ஆனல் (கொஞ்சம் குழம்பு விடு) எல்லோரும் கஷ்டப்பட்டு, நான் மாத்திரம் படித்து, பின்னல் நானும் கஷ்டப்படுவதை விட, படிப்பை நிறுத்திவிடுவதே நல்லது. அப்பொழுது விவாஹத்திற்கு அவசியமுமிருக்காது.

தாயார்:—படிப்பை நிறுத்துவதென்று நீ சுலபமாய்ச் சொல்லிவிடுகிறாய். நானும் அப்படித்தான் சொல்லிக்கொண்டிருந்தேன். ஆனல் அப்பாவைப்பற்றி ஊரார் என்ன சொல்வார்கள்? இருப்பது ஒரே குழந்தை; அவனுக்கும் படிப்பு சொல்லிக்கொடுக்காமல் கெடுத்துவிட்டாரென்று சொல்ல மாட்டார்களா? அதோடு நீ படிப்பை நிறுத்திவிட்டு அப்புறம் என்ன செய்யப் போகிறாய்?

கிரு:—அம்மா நான் இதுவரையிலும் படித்த படிப்பிற்கு 20 ரூபாயாவது சம்பளம் கிடைக்காமல் போகாது. விவாஹமாகாத வரையில் ஒருவனகிய எனக்கு 20 ரூ. போதாதா?

தாயார்:—(இலையில் சாதம் போட்டுக்கொண்டே) நீ சொல்வது வாஸ்தவந்தான். ஆனல் எங்களுடைய அந்திய தசையில் நீ எங்களைக் காப்பாற்ற வேண்டி நேரிடும்போது எவ்வளவு கஷ்டப்படுவாய்? எத்தனை காலந்தான் விவாஹம் செய்துகொள்ளாம லிருப்பாய்? இப்படியே பிரமசாரியாய் உன் ஆயுசு முழுவதும் இருக்கப் போகிறாயா? உன்னைப் பெற்றவர்கள், நீ கல்யாணஞ் செய்துகொண்டு சந்தோஷமாக குடும்ப வாழ்க்கை நடத்துவதைப் பார்க்கவேண்டாமா?

கிரு:—அம்மா, சந்தோஷமாக குடும்ப வாழ்க்கை நடத்துவதற்கு சிலருக்கே முடியும். அதற்குத் தகுந்த சௌகரியங்கள் உள்ளவர்களே சந்தோஷமா யிருக்கமுடியும். நான் இவ்வளவு சிறு வயதில் கல்யாணஞ் செய்துகொண்டு என் மாமனரின் உதவியால் படித்துவிட்டால் எனக்கு என் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்குத் தகுந்த சம்பளத்தோடு வேலை கொடுப்பவர் யார்? கல்யாண மாகாவிட்டால் வேலை கிடைக்கும் வரையில் கவலையில்லாம லிருக்கலாம்.

தாயார்:—கிட்டு, நீ ஏன் இப்படி பின்னல் வருவது துரதிர்ஷ்டமென்றே நினைத்துக்கொண்டிருக்கிறாய்? இப்பொழுது லக்ஷ்மியை உனக்கு விவாஹம் செய்வித்தால் அவள் பெற்றோர் அவளை சந்தியில் விட்டுவிடுவார்களா (மோர் விடுகிறாள்) பெரியவாள் இருக்கிறபோது உனக்கென்ன கவலை? என்னமோ அப்பா ரொம்ப கவலையோடே இருக்கிறார். புதுக்கோட்டையில் கல்யாணத்தை நடத்தினல் சட்டத்திற்கு ஆளாக மாட்டோமாம். இவ் விவாஹத்திற்கு உடன்பட்டால்தான் உன்னுடைய படிப்பு நடக்கும். இல்லாவிட்டால் உன்னுடைய படிப்பும் போய் அப்பாவுக்கும் கவலை ஜாஸ்தியாகும். அதற்கப்புறம் என்ன நேருமோ, எனக்குத் தெரியாது..................ஏதோ நாங்க ரெண்டு பேரும் உயிரோடு இருக்கிறபோதே உனக்குக் கல்யாணம் செய்துபார்க்க வேண்டுமென்றிருந்தோம். அதற்குப் பிராப்தமில்லை போலிருக்கு. தவிர, எங்களுக்குப்பின் நீ எப்பேர்ப்பட்ட மனைவியை யடைவாயோ தெரியாது. உனக்கு லக்ஷ்மிதான் சரியான பெண்ணென்று எனக்குத் தோன்றுகிறது. உன் நன்மையையே நினைத்துக் கஷ்டப்படும் உன் தாய் தகப்பனருக்கு நீ இன்னும் மனமிணங்காம லிருப்பது, எங்களுடைய தலைவிதிதான்

கிரு:—(சாப்பாடு முடிந்து எழுந்து) அம்மா, எனக்கு எவ்வித கஷ்டங்கள் வந்தாலும், நான் என் பெற்றோரை மகிழ்விக்க முடியாதவனனேனென்ற வார்த்தைக்கு ஆளாகமாட்டேன். நீங்கள் எனக்கு இப்பொழுது கல்யாணம் செய்வதினல் உங்களுக்கு சந்தோஷ முண்டாகுமென்றால் நான் விவாஹம் செய்துகொள்ளத் தயார். நான் என்னுடைய கடமையைச் செலுத்திவிடுகிறேன். அதன்பின் கடவுள்தான் என்னைக் காப்பாற்றவேண்டும்.

தாயார்:—கிட்டு எங்களுக்காக நீ மனம் வெறுத்து விவாஹத்திற்கு ஒப்புக்கொள்ள

வேண்டாம். உன்னுடைய க்ஷேமமே எங்களுடைய சந்தோஷம். உன்னுடைய படிப்புக்காகவும், உனக்கு இனிமேல் வரப்போகும் க்ஷேமத்தையும் கோரியே விவாஹம் வேண்டுமென்று சொல்லுகிறோம். ஆகையால், நீ மனப்பூர்வமாய் சந்தோஷத்தோடு ஒப்புக்கொண்டால்தான் எங்களுக்கும் திருப்தியா யிருக்கும்.

கிரு:—அம்மா, நீங்கள் இருவரும் எனக்காக கஷ்டப்படும்போது எனக்கு மனவெறுப்பு ஏன்? நான் விவாஹம் செய்துகொள்வது உங்களுக்கு சந்தோஷமென்றால், நான் என்னுடைய பெற்றோருக்குச் செலுத்தவேண்டிய கடமையைச் செலுத்தினேனென்ற எண்ணத்தினால் பெரிதும் மகிழ்வடைவேன். உங்களை சந்தோஷப்படும்படி செய்தால் அது எனக்கும் திருப்தியாயிருக்கும். இனிமேல் நீங்கள் கவலைப்படவேண்டாம். அப்பாவிடமும் சொல்லிவிடு. எதற்கும் கடவுள் இருக்கிறார். (போகிறான்.)

காட்சி 4

[ஒரு கிணற்றருகில் நான்கு பெண்கள். ஒருத்தி தண்ணீர் இறைத்துக்கொண்டும், மற்றவர் பாத்திரங்களைத் தேய்த்துக்கொண்டு மிருக்கிறார்கள்.]

காமு:—ஏண்டி சாவித்திரி, மீனாக்ஷி பிள்ளைக்குக் கல்யாணம் ஆயிடுத்தாமே. என்னமோ அந்தப் பிள்ளை கல்யாணமே வேண்டாமின்னு சொல்வதாகச் சொன்னாளே!

சாவித்திரி:—(தண்ணீர் இறைத்துக்கொண்டே) ஆமடி, இந்தக் காலத்துப் பையன்களெல்லாம் அப்படித்தான்; கல்யாணமே வேண்டாமென்கிறது; அப்பறம் மூன்றுதரம் கல்யாணம் பண்ணிக்கிறது. வேண்டான்னா, பெண் வீட்டுக்காரர் இன்னும் கொஞ்சம் ரூபாய் சேர்த்துக் கொடுப்பான்னுதான்.

காமு:—இல்லேடி, அந்தப் பையன் என்னமோ இப்ப வந்திருக்கிற சட்டம் நல்லதுதானென்றும், அதனால் கல்யாணம் செய்துகொள்ள சம்மதிக்கவில்லை யென்றும் சொன்னாளே. லக்ஷ்மி ரொம்ப சிறு பெண். அவளுக்கு அதற்குள் கல்யாணம் செய்யக்கூடாதென்றும் தான் சொன்னானாம். கடைசியிலே அவனுடைய அப்பாவும் அம்மாவும் கட்டாயப்படுத்தினதினால்தான் ஒப்புக்கொண்டானாமே!

சாவித்திரி:—ஆம், இவனுக்குத்தான் ரொம்ப அக்கறை. கல்யாணம் பண்றவா பண்ணின இவனுக்கென்ன பொறுப்பு! என்னடா நமக்காக இவ்வளவு கஷ்டப்படுகிறார்களே என்று நினைக்கிறதில்லே. ஏண்டி, சீதா! உங்க மாமனார் கூட புதுக்கோட்டைக்குக் கல்யாணத்திற்குப் போயிருந்தாராமே. கல்யாணம் நல்லா நடந்ததாமா? நலுங்குப் பாட்டு எல்லாம் யார் பாடினா? என்ன சீதனம் கொடுத்தாளாம்? பொண்ணுக்கு ஊஞ்சலுக்கு என்ன புடவை வாங்கினாளாம்?

சீதா:—என்னமோ நடந்ததாம். மாப்பிள்ளைக்குக் கொஞ்சங்கூட சந்தோஷமே கிடையாது. என்னதான் இருந்தாலும் இவ்வளவு சின்னக் குழந்தைக்குக் கல்யாணம் பண்ணினால் அவளுக்கு எப்படிவெட்கம் தெரியும்? நலுங்குவைக்கச் சொன்னால், மாம்பழம் கொடுத்தால்தான் நலுங்கிடுவேன் என்று அழுதாளாம். அப்புறம் மாம்பழத்தை சாப்பிட்டுண்டே இடது கையால் நலுங்கிட்டாளாம். ஊர்வலம் போறபோது ஆம்படையான் மடியிலேயே படுத்துத் தூங்கிவிட்டாளாம். ஊர் பூரா சிரிக்கிறது. இந்தக் குழந்தைக்குக் கல்யாணமில்லாமல் என்ன குறைவு? சட்டம் கொண்டு வந்தவா, எல்லா ஊரிலேயும் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவந்திருந்தால் இந்த வெட்கக் கேடெல்லாம் இடமிருக்காது.

சுப்பு:—போருண்டி, குழந்தையாவது மண்ணாங்கட்டியாவது! குழந்தேன்னு வெட்கமில்லாமல் போயிடுமோ? ஏன் வயசாகவில்லையோ? இதோ பார், என் ஓர்ப்படி பொண்ணுக்கு ஏழு வயசிலேயே கல்யாணமாச்சு. அதுக்குள்ளே யாராவது ஆம்படையான் பேரைச் சொன்னால் ஓடிப்போய் அடுக்குள்ளே ஒளிந்துகொள்ளுகிறாள். அவளும் குழந்தைதானே. அவளுக்கு மாத்திரம் வெட்கம் எங்கே யிருந்து வந்தது? லக்ஷ்மி ஒரே குழந்தேன்னு செல்லம் குடுத்திருக்கா. அதனால்தான் இவ்வளவு சீர்கேடு? இப்படி இருந்தால் என்றைக்குத்தான் வெட்கம் வருகிறது? கல்யாணமே யில்லாமல் எத்தனை நாள் ஆத்துலேயே வச்சிண்டிருக்கிறது? காலம் கெட்டுப்போச்சுடி. பாரு பட்டணத்திலேபெண்களெல்லாம் ஆத்து வேலையே விட்டுவிட்டு பங்தாடுவதற்கும், பிரசங்கம் செய்வதற்கும் புறப்பட்டு விடுகிறார்கள்! அடுப்பங்கரையில் இன்னமே புருஷாள் உட்காரவேண்டியதுதான்.

சீதா:—ஏண்டி, சுப்பு, என்ன நீகூட இப்படிப் பேச ஆரம்பித்துவிட்டாய்! பெண்களாகிய நாம், நம்முடைய சுதந்திரத்தை அடையவேண்டாமா? காலைமுதல் மாலை வரையில் அடுப்பினருகில் உட்கார்ந்துகொண் டிருப்பதுதான் வேலையாயிருக்கிறது நமக்கு. நீயே இப்படிப் பேச ஆரம்பித்து விட்டால், புருஷாள் என்ன்தான் சொல்லமாட்டார்கள்! இதெல்லாம் படிப்பில்லாததின் காரணம். படிக்கத் தெரியாத பெண்களிடம், இல்லாத விதிகளை யெல்லாம் சொல்லி அவர்களை அடக்கிவிட்டார்கள். படிக்கத் தெரிந்துவிட்டால் பொய் வெளியாய்விடுமே என்று பயந்து சிறு வயதிலேயே விவாஹத்தையும் முடித்துவிடுகிறார்கள். ஏன் எனக்கும் அப்படித்தான் செய்தார்கள். எங்கள் மாமாதான் மிகுந்த கஷ்டப்பட்டு எனக்கு வீட்டிலேயே படிப்பு சொல்லிக்கொடுத்தார். அதுக்குள்ளே என் நாத்தனார் என்னைப்பற்றிக் கண்டபடி பேச ஆரம்பித்துவிட்டாள். இப்படி நம்முடைய சகோதரிகளே நமக்காகக் கஷ்டப்படும்போது, நீ அவர்களைத் தூஷிக்கிறாயே?

சுப்பு:—ஆமடியம்மா, நீ ரொம்ப படித்தவள். பட்டணத்திலே அவா பிரசங்கம் பண்ணினா, நீ இங்கேயே பிரசங்கம் பண்ணுகிறாய்; போரும். எனக்கு நாழியாரது. உலைநீரிலே அரிசி போட்டிருக்கிறேன். கைக்குழந்தை அழும். என் பெரிய பையனுக்குக்கூட உடம்பு சரியாயில்லை. வாடி சாவித்திரி போகலாம்.

(குடத்தை யெடுத்துக்கொண்டு போகின்றனர் இருவரும்.)

காமு:—(தண்ணீர் இறைத்துக் கொண்டே) சீதா, போரும், இந்த மாதிரி நாலுபேர் இருந்தால் நமக்குக் குறைச்சலேயில்லை. தனக்காவது புத்தி இருக்கவேண்டும், இல்லாவிட்டால் சொன்னால் தெரிந்து கொள்ளவேண்டும். இரண்டுமில்லை.

சீதா:—அவள் என்ன செய்வாள் பாவம். அவளுடைய பெற்றோரின் குற்றம். அவளுக்கென்ன தெரியும்? ஒரே இடத்தில் படிப்பு மில்லாமல் வைத்திருந்த விவாஹமும் செய்துவிட்டால் அவள் மனதில் 'பெண் ஜன்மத்திற்கு விவாஹத்தைத் தவிர வேறு வழி கிடையாதென்றும், பிறந்ததிலிருந்து அடுக்குள்ளேயே இருக்கவேண்டு மென்றும் தோன்றிவிடுகிறது. இவளுக்குப் பிறந்திருக்கும் குழந்தைகள் எப்படி இருக்கும்? பார் இன்னும் 19 வயதாகவில்லை; அதற்குள் இரண்டு குழந்தைகள்!

காமு:—பாவம், அந்தப் பையன் கிட்டு எவ்வளவோ மறுத்துப் பார்த்தான். கடைசியில் தலைவிதி விடவில்லை. இன்னும் ஏழு, எட்டு வருஷங்களானால் குழந்தை பிறந்துவிடும். அப்பொழுதுதான் அவனும் படிப்பை முடித்திருப்பான். அப்புறம் வேலைக்குத் திண்டாடவேண்டியதுதான். அதுவும் இந்தக் காலத்தில் பிராமணனுக்கு யார் வேலை கொடுக்கிறார்கள்? எங்கள் அண்ணா பி.ஏ., பாஸ் பண்ணி மூன்று வருஷமாய் அலைகிறான். இன்னும் வேலை கிடைக்கவில்லை.

சீதா:—லக்ஷ்மி பாடுதான் திண்டாட்டம். பாவம் சிறு பெண்; மிகவும் கஷ்டப்படுவாள். ஆனால் ஒரு சந்தோஷம். கிட்டு படித்தவனைதாலும், தாராள மனதுடையவனைதாலும், எப்படியாவது கஷ்டப்பட்டு அவளைக் காப்பாற்றுவான். அவளுக்குக் கிட்டு யார் என்பதும், அவனிடம் எப்படி நடந்துகொள்ளவேண்டுமென்பதும் தெரிய எத்தனையோ நாளாகும். ஆனால் நல்லவேளை. லக்ஷ்மிக்கு நாத்தனாரில்லை; கிட்டு ஒரே குழந்தைதான். இன்னும் அவளுக்கு நாத்தனார் இருந்துவிட்டால் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை.

காமு:—எல்லா நாத்தனார்களும் கொடியவர்களா யிருக்கிறார்களா? என்னமோ உன் தலைவிதி அப்படி. அதற்காக எல்லாரையும் சொல்லிவிடாதே. எனக்கும் இரண்டு நாத்தனார் இருக்கிறார்கள். என்னிடம் எவ்வளவோ பிரியமாய்த்தான் இருக்கிறார்கள். இன்னும் நம்முடைய தம்பி தமையன் முதலியவர் மனைவிகளிடம் நாம் எப்படி இருக்கப்போகிறோமோ?

சீதா:—என்னமோ அது என் தலைவிதிதான் போலிருக்கிறது. ஆனால் - நாழியாகிறது, போகலாம், வா. இன்னும் இதற்கு வேறே ஆத்திலே கோபித்துக்கொள்ளுவா. முன்னாலேயே எனக்கு இன்னும் குழந்தை பிறக்கவில்லையென்று புகார். அது ஒன்றுதான் குறைச்சல். இன்னும் அதையொன்று பெற்று வைத்துக்கொண்டு அலைய வேண்டும். வா போவோம் (குடத்தை எடுத்துக்கொண்டு) நாம் இந்தமாதிரி பேசுகிறதை யாராவது கேட்டால் வீட்டைவிட்டுத் துரத்திவிடுவார்கள்.

(போகின்றனர்.)

அங்கம் 3

காட்சி 1

[எட்டு வருஷங்களுக்குப் பிறகு]

(சென்னையில் ஒரு வீட்டில் இருவர் பேசிக்கொண்டிருக்கின்றனர்.)

ஒருவர்:—ஏன் சார் ராமகிருஷ்ணய்யரே, உங்கள் வீட்டில் யாரோ புதிதாய்க் குடிவந்திருக்கிறார்களாமே, யார் அது?

ராமகிரு:—ஒரு பையனும் அவனுடைய மனைவியும் வந்திருக்கிறார்கள். பையன் ரொம்ப நல்லமாதிரி.

நண்பர்:—இங்கே ஏதாவது வேலையோ?

ராமகிரு:—வேலை தேடுவதற்காகத்தான் இங்கு வந்திருக்கின்றான். இப்பொழுது எல்லோரும் வேலைக்காக பட்டணத்திற்கு வந்துவிடுகிறார்கள். இங்கு இருப்பவனுக்கே திண்டாட்டமாயிருக்கிறது. பையன் பி. ஏ., பாஸ்பண்ணி மூன்று வருஷங்களாகின்றன. இன்னும் சரியாய் வேலை கிடைக்கவில்லையாம். அவனுடைய ஊரிலேயே பள்ளிக்கூடத்தில் 2 மாதமும், சப்ரிஜிஸ்ட்ரார் ஆபீஸில் 4 மாதமும் இருந்தானும். ஆனால் வேலை காயமாகவில்லை. பாவம் ரொம்ப கஷ்டப்படுகிறான். நானும் என்னாலானவரை உதவி செய்வதாகத் தீர்மானித்திருக்கிறேன். ஏன் சார்! உங்க ஆபீஸில் ஏதாவது காலி யேற்பட்டால் சொல்லுங்களேன்.

நண்பர்:—ஆஹா? ஆனால் இந்தக் காலத்தில் சிபார்சு இல்லாமல் எங்கே வேலை கிடைக்கிறது! போனமாதம் ஒரு கிளார்க் லீவில்போனார். அந்த இடத்திற்கு முப்பது அப்ளிகேஷன்கள் வந்துவிட்டன. அதில் பி. ஏ., (ஆனர்ஸ்) படித்தவர்கள்தான் ஜாஸ்தி. ஏன், அவனுடைய பெற்றோர்கள் இல்லையோ?

ராமகிரு:—அந்தப் பையனுடைய பெற்றோர் இறந்து இரண்டு வருஷங்களாகின்றன. அவனுடைய மாமனார், தன் பெண்ணுக்கு விவாஹமான மறு வருஷமே இறந்துவிட்டாராம். உடனே அவர் சொத்தை யெல்லாம் தாயாதிக்காரர்கள் பங்கிட்டுக் கொண்டார்கள். விவாஹத்தில் கொடுத்த வரதக்ஷிணையின் உதவியால் அந்தப் பையன் தன் படிப்பை முடித்தான். அந்தப் பெண்ணின் தாயார் பணமில்லாமல் அலைந்து கடைசியில் அவ்வூரிலேயே தன் சொந்தக்காரர்களிடத்தில் இருக்கிறாளாம். பெண்ணின் தகப்பனுருக்கு எவ்வளவோ ஆஸ்தியிருந்தும் பெண்ணுக்கு ஒன்றும் வராமற்போய் விட்டது. அந்தப் பையன் கிருஷ்ணமூர்த்தி, இன்று காலைதான் அக்கவுண்டண்ட் ஜனரல் ஆபீசுக்குப் போயிருக்கிறான்.

நண்பர்:—அடடா,பாவம் இந்தக் காலத்திலே எந்தப் பக்கம் திரும்பினாலும் இப்படித்தான் சார் இருக்கு. தன்னோடு இல்லாமல், மனைவியை வேறே காப்பாற்றவேண்டும். பையனுக்கு வயது என்ன இருக்கும்?

ராமகி:—இப்பொழுதான் 24-ஆகிறது. அந்தப் பெண்ணுக்கு இன்னும் 17-கூட ஆகவில்லை.

நண்பர்:—அடடா! சிறு குழந்தைகளாச்சே! அதற்குள்ளாகவா தனிக் குடித்தனம்!

ராமகி:—படிப்பில்லாவிட்டால் வேலை கிடையாது. படிப்புக்கு ரூபா யில்லாவிட்டால் உடனே விவாகம் செய்துகொண்டு வரதக்ஷிணை வாங்கி விடுகிறார்கள். பின்னால் வருவது யாருக்குத் தெரிகிறது? அதோ அந்தப் பையனும் வருகிறான்.

[கிட்டு வருகிறான். மிகவும் மெலிந்துபோய், முகமெல்லாம் வெளுத்து, கன்னங்கள் குழிபட்டு கவலை மிகுந்த முகத்தோடு காணப்படுகிறான்.]

என்ன கிருஷ்ணமூர்த்தி, என்ன விசேஷம்? ஏதாவது சமாசாரம் கிடைத்ததா?

கிரு:—அந்த இடத்திற்கு நேற்றே ஆள் நியமித்து விட்டார்களாம். எண்பது அப்ளிகேஷன்கள் வந்ததில், ஒரு கணக்கு எம். ஏ., படித்தவருக்குத்தான் கிடைத்ததாம்.

ராமகி:—அடாடா, உம்—போகிறது, பயப்படாதே. இதோ என் நண்பரிடமும் சொல்லியிருக்கிறேன், பார்ப்போம். ஆம், ஆத்துலே உன் மனைவிக்கு உடம்பு சரியில்லை யென்று சொன்னயே. கஷ்டப்படுத்தாதே. நம்பாத்திலேயே சாப்பிடலாம்.

கிரு:—ஒன்றுமில்லை, அவளுக்கு எப்பொழுதும் அப்படித்தான். அதனால நீங்கள் கவலைப் படவேண்டாம். நான் வருகிறேன். (போகிறான்.)

நண்பர்:—சிறு பையன்தான்; உடம்பெல்லாம் ரொம்ப மெலிந்துபோ யிருக்கிறதே. அதற்குள் இவனுக்குக் குடும்பக் கவலையா?

ராமகி:—விவாஹம் செய்யும்போது மேளத்தோடும், தாளத்தோடும், பாட்டுகளோடும் சங்

தோஷமாய் நடத்திவிடுகிறார்கள். பிறகு கஷ்டப் படுபவர்கள் ஒன்றும் தெரியாத சிறு தம்பதிகள். இந்தச் சட்டம் வந்தது நல்லவேளைதான். இல்லாவிட்டால், என் பெண் ஸரஸ்வதிக்கும் இதற்குள் விவாஹமாகி யிருக்கும். சட்டம் வராவிட்டால் நம் ஆசாரப்படிதானே நடக்க வேண்டி யிருந்திருக்கும்.

நண்பர்:—ஆம் சார், நல்ல வேளையாய் நாம் தப்பித்தோம். இந்த வேலைகூட இல்லாவிட்டால் நம் குழந்தைகளுடன் நாமும் திண்டாடவேண் டியதுதான். சட்டம் வந்தும், பால்ய விவாஹம் முற்றிலும் தடைபடவில்லையே. எங்கெங்கேயோ போய் விவாஹம் செய்துகொண்டு வந்துவிடு கிறார்கள். சரி, மணி பத்தாகிறது. ஆபீசுக்கு நாழியாய்விட்டது, நான் போய்வருகிறேன். (போகிறார்.)

[ராமகிருஷ்ணய்யர், அருகிலிருந்த ஒரு பத்திரி கையைப் படித்துக்கொண்டிருக்கிறார். அவர் மனைவி பிரவேசம்.]

ராமகி-மனைவி :—லக்ஷ்மி ஆத்துக்காரர் வந்து விட்டாரா?

ராமகி:—வந்துவிட்டான். பாவம், அவன் துர திர்ஷ்டம், வேலை ஒன்றும் கிடைக்கவில்லையாம். அவனைப்பார்ப்பதற்கே பரிதாபமாயிருக்கு. இங் கேயே சாப்பிடச் சொன்னேன். ஆனால் வீணு க்க் கஷ்டப்பட வேண்டாமென்று சொல்லிவிட் டான். அந்தப் பெண்ணுக்கு உடம்பு எப்படி யிருக்கிறது?

மனைவி :—உடம்பு என்ன ? எல்லோருக்கும் சாதாரணமாக வரதுதான். 9 மாசம் ஆயிடுத் தோ இல்லையோ, இப்பவோ அப்பவோன்னு இருக்கு. அவளால் ஒரு காரியமும் செய்யமுடிய வில்லை. நானும் அவளைச் சமைக்கவேண்டா மென்று எவ்வளவோ சொல்லிப்பார்த்தேன், கேட்கமாட்டே னென்கிறாள். இன்னிக்கு எழுந் திருக்கக்கூட முடியாமலே சமைக்க ஆரம்பித்து, கஞ்சியெல்லாம் காலில் கொட்டிக்கொண்டாள்.

ராமகி:—பாவம்; இன்னும் வயசு பதினேழு ஆகவில்லை, அதற்குள் குழந்தையா! அவன் இப்படி வேலையில்லாமல் திண்டாடும்போது குழந்தையும் பிறந்துவிட்டால் அதற்குமேல் என்ன கஷ்டம் வேண்டும்?

மனைவி:—அதற்காகத்தான் அவளும் கவ லைப் படுகிறாள். சாதாரணச் செலவிற்கே ரூபா யில்லை. இன்னும் பிரசவத்திற்கு என்ன செய் யப் போறாளோ தெரியவில்லை! அவள் தாயாரை வரச்சொல்லி அவள் ஆத்துக்காரர் காயிதம் எழுதியிருக்கிறாராம்.

ராமகி:—என்னமோ பாவம். நீயும் கொஞ்சம் பார்த்துக்கொள். அவளைப் பார்க்கும்போதெல் லாம், நல்லவேளையாய் நம் ஸரஸ்வதிக்குவிவாஹ மாகவில்லையேயென்று சந்தோஷமாயிருக்கிறது.

மனைவி :—ஆம், கல்யாணமாகி யிருந்தால் ஸரஸ்வதியும் அவளுடைய ஸ்திதியில்தான் இருப்பாள் சரி, ஸ்நானம் பண்றதுதானே, சமையலாச்சு, வாங்கோ. (போகிறாள்.)

அம்பலவாணன் அல்லது நாவாய்க் கைதி

“விக்டர் ஹ்யூகோ” என்னும் மிக்கப் பிரஸித்திபெற்ற பிரேஞ்சு நூலாசிரியரின் நூல் களுள் தலைமை வகிப்பதான, “லெஸ் மிஸரபிள்ஸ்” என்னும் நூலைத்தழுவி, தமிழன்பர் களால் போற்றப்பட்ட ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ., அவர்களால் எழுதப் பட்டது. (முதல் பாகம், பல அழகிய போடோ படங்களுடன், ஏற்கெனவே வெளிவந் துள்ளது. விலை ரூ. **1—8—0**. “விவேக போதினி” சந்தாதார்க்கு ரூ. **1—4—0**.

AMBALAVANAN or THE GALLEY SLAVE

An Adaptation of Victor Hugo's Immortal
Master-piece "Les Miserables"

(By Sriman P. S. SUBRAHMANYAM, M. A.)

[Author of very popular Tamil Works, "The Mystery of Vikramasingan Fort etc.]

அம்பலவாணன் :: இரண்டாம் பாகம்

:: 3-ம் அத்தியாயம் — மோகனசுந்தரியின் துயரம் ::

விஜயமங்கலம் மதுரைக்குப் பத்து மைல் தூரத்தில் மலைகளுக்கும் கடம்பவனத்துக்கும் அருகில் மிகவும் உயர்ந்த மேட்டுப் பூமியிலுள்ள சிறு கிராமம். சோலைகளாற் பொலிவுபெற்று விளங்கிய அக்கிராமத்தில் நமது கதையிற் கூறப்பட்டுள்ள சம்பவங்கள் நிகழ்ந்த காலத்தில் தனிகர்கள் வந்து கூடி மாளிகைகள் கட்டிக்கொண்டாகவில்லை. அக்கிராமத்தில் ஸ்திரமாய் வசித்து வந்தவர்கள் ஏழைக் குடியானவர்கள் தாம். அதன் புறத்தே யோடிய சாலை, பெரிய நகரமொன்றுக்கும் செல்லவில்லை யாதலால், அக்கிராமத்தின் வழியே சென்ற பாட்டைசாரிகளும் சிலரே. ஆகையினால் கூட்டமும் கூச்சலுமின்றி அக்கிராமம் மனத்துக்கு இரம்மியமாக விருந்தது. ஆனால் அவ்வளவு இனிய கிராமத்துக்குப் பெரிய குறையொன் றிருந்தது. அக்கிராமத்தில் பூமியை எங்கு வெட்டினாலும் இரண்டடி மண்ணுக்குக் கீழே கருங்கற் பாறையே காணப்பட்டதனால், அவ்வூரிலுள்ளோர் அவ்வூரில் கிணறு வெட்டுவது அசாத்தியமான காரியமெனத் தீர்மானித்து, அவ்வூரின் ஒரு கோடியிலுள்ள வற்றாத சுனையின் தண்ணீரைக் கொண்டு திருப்தியாய்க் காலங்கழித்து வந்தனர்.

அவ்வூரிலுள்ள பெரிய மனிதர்கள் - அதாவது, அங்குள்ள ஏழைகளுக்குள் பணக்காரர்கள் - குடத்துக்கு ஒரு காசு வீதம் அச்சுனைத் தண்ணீரை ஒரு ஆளிடம் விலைக்கு வாங்குவது வழக்கம். அந்த ஆள், காலையில் நன்றாய்ப் பொழுது விடிந்த பிறகுதான் எழுந்திருப்பான்; அஸ்தமித்தவுடன் கள்ளுக்கடைக்குப் போய் விடுவான். ஆகையினால் அஸ்தமித்தபின் சூரியோதயத்துக்குள், அப்பெரிய மனிதர்களுக்குத் தண்ணீர் தட்டுப்பக்ஷத்தில், குடத்தை யெடுத்துக்கொண்டு தாங்களே கிளம்பவேண்டுவதுதான். நமது பழைய நண்பன் சுடலைமாடன் சோற்றுக்கடை வைத்திருந்தாலும் அவ்வூரிற் பெரிய மனிதன் தான். ஆகையினால் அவனும் தன் கௌரவத்துக்குக் குறைவு வாராமல் தண்ணீர் விலைக்குத்தான் வாங்குவது வழக்கம். ஆனால் தன் சோற்றுக் கடைக்கு வேண்டிய அளவு தண்ணீரிற் பாதிதான் அவ்வாறு வாங்குவான். மிகுந்த பாதியை நமது ஏழை நீலாம்பாளது பெண் மோகனாள் கொண்டுவர வேண்டுவதுதான். இரவில் சுனைக்குப் போவதற்குப் பயந்த மோகனாள் வேண்டுமளவுக்கு அதிகமாகவே சுனைத்தண்ணீர் பகலிலேயே கொண்டு வந்து வைத்துவிடுவாள்.

எட்டு வயது நிரம்பாத காலத்தில் அவ்வளவு தூரம் முன் ஜாக்கிரதையுடன் வேலை செய்யும்படி தலையி லெழுதப்பெற்ற மோகனாள், சாலிவாகன சகாப்தம் 1112-ம் வருஷம் தைமாதக் கடைசியில், ஒருநாள் பொழுதுவிழுந்து இரண்டு நாழிகைக்கு சுடலைமாடனது சோற்றுக் கடையின் முன்கூடத்தை யொட்டிய பின்புற நடையில் உட்கார்ந்து முன்கூடத்தில் பணியாரங்கள் தின்றுகொண்டும், கள்ளை மனங்கொண்டமட்டும் குடித்துக்கொண்டும் கூட்டமாய் உட்கார்ந்திருந்த மனிதர்களைப் பார்த்துக் கொண்டு தான் சுனையிலிருந்து கொண்டுவந்து பெரிய பானையில் நிரப்பிய தண்ணீர் முழுவதும் செலவாகி தான் இரவில் சுனைக்குப் போக வேண்டியிருக்குமோ வென்று கவலையுற் றிருந்தாள்.

விஜயமங்கலத்துப் பேர்பெற்ற காளியம்மன் கோவிலில் அப்போது பிரமோற்சவம் நடந்து கொண் டிருந்தபடியால், சுற்று வட்டாரத்துக் கிராமங்களிலுள்ளவர்க ளெல்லோரும் அம்மனைத் தரிசிப்பதற்காகவும், பிரார்த்தனைகளைச் செலுத்துவதற்காகவும் அவ்வூருக்குத் திரண்டு வந்துகொண் டிருந்தார்கள். உற்சவ காலங்களில் விசேஷமாய்ப் பணஞ் செலவழித்து விநோதப்பொருள்களை வாங்குவது உலகம் தோன்றியது முதல் எல்லாத் தேசங்களிலுமுள்ள வழக்கமாதலால், மதுரையிலிருந்து அநேக வியாபாரிகள் அழகாய் வர்ணம் கொடுக்கப்பெற்ற பொம்மைகள், பித்தளை வெண்கலங்களாற் செய்யப்பெற்ற விநோதப் பாத்திரங்கள், ஊதுகுழல், கிலுகிலுப்பை, பட்டுச் சுருக்குப் பை முதலிய விளையாட்டுப் பொருள்களைக் கொண்டுவந்து காளி

எண்ணியா ரெண்ண மிழப்ப ரிடனறிந்து துன்னியார் துன்னிச் செயின்.

யம்மன் கோவிலுக்குப் பக்கத்தில் தெருவின் இருபுறங்களிலும் கொட்டகைக் கடைகள் வெகு விசித்திரமாக அமைத்திருந்தனர். இரவில் அம்மன் புறப்பட்டு ஊர்வலம் வருகையில் கூட்டம் அதிகமா யிருக்குமாகையால், கடை சாமான்கள் அக்கூட்டத்தின் மனத்தைக் கவரும்படி துலங்குமாறு மிக்க ஒளிவீசும் பல வகைத் தீபங்கள் ஒவ்வொரு கடையிலும் ஏற்றிவைக்கப்பட் டிருந்தன.

காளியம்மன் கோவிலுக்குப் பக்கத்திலிருந்த சுடலைமாடன் சோற்றுக் கடையும் அவ்வுற்சவ காலத்தில் கோலாகலமாய்த்தா னிருந்தது. மேற்கூறிய அன்றிரவு உற்சவத்துக்கு வந்த பெரிய மனிதர்களின் வண்டிக்காரர்களும், வெளியூர்க் குடியானவர்களும், அவ்வூரி லுள்ளவர்களில் மதுபானத்துக்காக அங்கு வழக்கமாய் வருபவர்களுமாகக் கூடி, அவன் சோற்றுக் கடையின் முன்கூடத்தில் நிரம்பி யிருந்தார்கள். அக்கூடத்தை யொட்டிய சிறு அறையில் கறுப்பாயி பணியாரங்கள் சுட்டுக்கொண் டிருந்தாள். சுடலைமாடன் தன் கடைக்கு வந்தவர்களுக்குத் தான் மரியாதை செய்யவேண்டுமென்னும் கருத்துடன் அவர்கள் கணக்கில் அவர்களுடன் ஓபாமல், கள் குடித்துக்கொண்டு, விநோதமாகப் பேசி அவர்களைக் களிப்பித்துக்கொண் டிருந்தான். சமீபத்திலிருந்த மற்றொரு அறையிலிருந்து இரண்டு சிறுமிகள் சிரித்து விளையாடும் சத்தமும், ஒரு கைக்குழந்தை அழும் குரலும் கேட்டுக்கொண் டிருந்தன. முன்னமே கூறியவாறு மோகனாள் கூடத்தை யொட்டிய பின்புற நடையில் உட்கார்ந்திருந்தாள். அவளுக்கு வயது எட்டாகியும், ஆறு வயதுக்குள்ள வளர்த்தியே உடையவளா யிருந்தாள். கிழிந்து பீத்தலாய்ப்போன ஒரு சிற்றாடைமட்டுந்தான் அவள் உடுத்திக்கொண் டிருந்தாள். மலைநாட்டில் தைமாதக் கடைசியிற் பெய்யும் பனியும், வீசும் சிறற் காற்றும், கொடியர்கள் கையிற்பட்டு வருந்திய மோகனாளுக்குப் பின்னும் பெருங் கொடுமையை இழைத்தன. குளிரினாலும், இருட்டில் தனியே சுனைக்குச் செல்லவேண்டி வருமோ வென்ற பயத்தினாலும், மோகனாளின் தேகம் அடிக்கடி நடுங்கிற்று. அவள் உட்கார்ந்த இடத்துக்கருகே கூடத்துச் சுவரில் பெரிய சாட்டையொன்று ஒரு மூலையில் தொங்கிற்று. மோகனாளின் கண்கள் அதன் புறமாக அடிக்கடி திரும்பின. அப்பொழுதெல்லாம் அவள் சிறு தேகம் குலுங்கிற்று.

புதிதாக நான்கு வழிப்போக்கர்கள் கடைக்குள் நுழைந்தனர். கறுப்பாயி அவர்களிடஞ் சென்று, அவர்களுக்குத் தேவையான பணியாரங்களைக் கொண்டுபோய்க் கொடுத்துவிட்டு, அவர்களுக்குத் தண்ணீர் கொடுப்பதற்காகத் தண்ணீர்ப் பானையைப் பார்த்தாள்; தண்ணீர் கொஞ்சந்தா னிருந்தது. "தண்ணீர் ஆய்விட்டதுபோ லிருக்கிறதே!" என்று சொல்லிக்கொண்டு பானையைத் தூக்கிக் கவிழ்த்து, அதிலுள்ள தண்ணீரை ஒரு சிறு பாத்திரத்தில் ஊற்றினாள். "ஊம்! போதும்! வருகிறவர்களெல்லோரும் தாகத்துக்குக் கள்தானே குடிக்கிறார்கள். போதும்!" என்று வாய்க்குள் சொல்லிக்கொண்டாள். அவள் தண்ணீர்ப்பானையினண்டையில் போனதுமுதல் அவள் என்ன சொல்லுவாளோ வென்று பயந்து நடுங்கிக் கொண்டிருந்த மோகனாள், அவள் வாயிலிருந்து 'போதும்' என்ற வார்த்தை வந்ததும், இப்போதைக்குப் பயமில்லையென்று சொல்லிக் கொண்டு பெருமூச் செறிந்தாள். ஆனால் எப்போதுமுள்ள பயம்மட்டும் இருந்துகொண்டேயிருந்தது.

அச்சமயத்தில் ஒரு பொதிமாட்டுக்காரன் வெகு கோபத்துடன் கூடத்துக்குள் நுழைந்து கறுப்பாயியை யணுகி, "என்ன அம்மா இது? என் மாட்டுக்குச் சொட்டுத் தண்ணீர்கூட வைக்கவில்லையே!" என்றான்.

"யார் ஐயா சொன்னது? அதுதான் வேணுமென்கிற தண்ணீர் குடித்ததே" என்றாள் கறுப்பாயி. "இல்லை அம்மா! வேண்டுமானால் நீங்கள் வந்து பாருங்கள். வயிறு இருபுறமும் ஒட்டிப்போயிருக்கிறது அம்மா!" என்றான் மாட்டுக்காரன். அப்பொழுது மோகனாள் தானிருந்தவிடம் விட்டெழுந்து வந்து, "என்ன ஐயா! இப்பிடி சொல்லுறே! நாந்தான் ஒரு தொட்டி தண்ணி வச்சேன், அது வயிறு ரெம்ப குடிச்சுதே!" என்றாள்.

மாட்டுக்காரன் அவளைக் கோபத்துடன் விழித்துப்பார்த்து, "சுண்டுவிரலளவு கூட இல்லை இந்தக் குட்டி, அதற்குள்ளே எவ்வளவு பொய் சொல்லுகிறதடா! ஏ குட்டிப் பிசாசே! பொய் சொல்லி ஏமாற்றவா பார்க்கிறாய்? தண்ணீரைக் காணாமல் நாக்கு வறண்டுபோய், மாடு தவித்துப்

பெருமூச்சு விடுகிறது. இது தண்ணீர் வைத் தேனென்று சொல்லுகிறது!" என்று சொன் னன். மோகனுள் பயத்தினுற் கம்பிய ஈனக் குரலுடன், தான் தண்ணீர் காட்டியதாகத் திரும்பத் திரும்பச் சொன்னுள். மாட்டுக்காரன், "ஏ குட்டி! சும்மா பேசாதே! மாட்டுக்குத் தண்ணீர் வை போ!" என்று உறுக்கினன். மோகனுள் நடுங்கிக்கொண்டு நடையிற் போய்ப் பதுங்கிக்கொண்டாள்.

இடையில் வேறு யாருடனே பேசிவிட்டுத் திரும்பிய கறுப்பாயி, "நியாயந்தானே நீர் சொல்வது. தண்ணீருக்குக் காசு வாங்கிக் கொண்டு, மாட்டுக்குத் தண்ணீர் காட்டாமற் போனுல் யார்தாம் சும்மா இருப்பார்கள்? தண் ணீர் வைக்காவிட்டால் மாடென்னத்துக்காகும்? அடீ குட்டிப் பிசாசே! நல்ல பேர் வைத்தீர் ஐயா நீர்! ஏ குட்டிப்பிசாசே!" என்று கூப் பிட்டாள். மோகனுள் வரவில்லை. உடனே அருகே தொங்கிக்கொண்டிருந்த சாட்டை யைக் கையிலெடுத்துக்கொண்டு, "எங்கே ஐயா போய்விட்டது அது இதற்குள்ளாக?" என்று கேட்டுக்கொண்டே மோகனுளின் வழக்கமான இடமாகிய பின்புற நடையண்டைபோய் எட் டிப்பார்த்து, அங்கே ஒரு மூலையில் பதுங்கி நடுங்கிக்கொண்டு நின்ற மோகனுளை விழிதெறிக் கப் பார்த்து, "அடீ! கழுதை! கூப்பிட்டால் ஏன் சும்மா நிற்கிறுய்? போய் அந்த மாட்டுக்கு உடனே தண்ணீர் காட்டு!" என்று உறுக்கினுள்.

"தண்ணீர் ஆயிப்போச்சு அம்மா" என்று தீனக் குரலுடன் சொன்னுள் மோகனுள்.

"ஆயிப்போயிற்றென்றுல் சுனைக்குப் போய்க் கொண்டுவா!" என்றுள் கறுப்பாயி.

"அம்மா! கும்மிருட்டாயிருக்கு தம்மா! பய மாயிருக்குதம்மா!" என்று சொல்லிக் கெஞ்சி னுள் மோகனுள்.

"பிசாசுக்கு இருட்டு ஏது? பகலெல்லாம் சும்மா திரிந்தால், இரவில் போகவேண்டுந்தான். அதற்கு யாரென்ன செய்வார்கள்? பகலிலேயே வேண்டிய தண்ணீரைக் கொண்டுவந்து நிரப்பி வைக்கிறதற்கென்ன? நேரமாயிற்று. மாட்டுக் குத் தாகமாயிருக்கும். போ சீக்கிரம்!" என்று கூறி, மோகனுளைப் பிடித் திழுத்துக்கொண்டு போய்க் கூடத்துக்கு வெளியே தள்ளினுள் கருணையற்ற கறுப்பாயி.

மோகனுள் வேறு கதியில்லாமல் ஒரு பெரிய தோண்டியைத் தூக்கித் தலைமேல் வைத்துக் கொண்டு புறப்பட்டாள். தெருவில் இருபுறங் களிலுமுள்ள கடைகளிலுள்ள தீபங்கள் மிக்க ஒளிவீசி, காரிருள் நிறைந்த இரவைப் பட்டப் பகலாக்கின. கடைகளிலுள்ள பொம்மை களின் அழகு அவ்வெளிச்சத்தில் பன்மடங்கு அதிகரித்தது. வெளிச்சத்தினுல் மோகனுள் சிறிது பயந்தெளிந்து, நாலடி எடுத்துவைக்கு முன், கறுப்பாயி கடைவாசலில் நின்றுகொண்டு அவளைக் கூப்பிட்டாள். தனது நடத்தையில் அவள் என்ன தவறுதலைக் கண்டு சிக்ஷை செய்யக் கூப்பிடுகிறுளோவென்று பயந்து கொண்டு மோகனுள் திரும்பிச் சென்றுள். மோகனுள் சமீபத்தில் வந்ததும், கறுப்பாயி, "ஏ கழுதை! இதோ இந்தப் பத்து வெள்ளிக் காசைத் தொலைக்காமல் கொண்டுபோய், சுனையி லிருந்து திரும்பி வரும்பொழுது முத்துக்கறுப் பன் கடையிலிருந்து வாழைப்பழம் வாங்கிக் கொண்டுவா! தெரியுமா? பத்திரம்" என்றுள்.

என்ன சிக்ஷை கிடைக்குமோவென்று பயந்துகொண்டு சென்ற மோகனுள் சிக்ஷை கிடைக்காததனுல் சந்தோஷங்கொண்டு அந்தக் காசை வாங்கி இடுப்பிற் சொருகிக்கொண்டு, அப்படியே வாங்கி வருவதாகச் சொல்லிவிட்டுச் சுனைக்குத் திரும்பவும் புறப்பட்டுச் சென்றுள். பத்தடிதூரம் சென்றதும், ஒரு கடையில் இரண்டடி உயரமுள்ள ஒரு பெரிய பொம்மை அவள் மனத்தைக் கவர்ந்து அவளை நிறுத்திற்று. அது மரத்தினுற் செய்யப்பட்டு, அழகிய வர் ணங்கள் கொடுக்கப்பட்டு, பளபளவென்று மின் னிக்கொண் டிருந்தது. அது ஒரு இராணியைப் போல் அநேக ஆபரணங்கள் அணிந்து கொண் டும், பட்டாடை யுடுத்திக்கொண்டு மிருந்தது. பகல் முழுவதும் அவ்வூர்ச் சிறுவர் சிறுமிகள் அனைவரும் அக்கடையைச் சூழ்ந்து நின்று, அந்தப் பொம்மையைப் பார்த்துப் பார்த்து ஆனந்தித்துக் கொண்டிருந்தனர். மோகனுளும் பகலில் அவள் பலமுறை சுனைக்குப்போய்த் திரும்பிய பொழுது, நீர் நிரம்பிய தோண்டி தலையிலிருந்து இருந்தவதையும் இலக்ஷியஞ் செய்யாது, அக்கடையின் எதிரே நின்று அப் பொம்மையின் வனப்பைக் கண்டு பன்முறை ஆச்சரியப்பட்டாள். பகலில் பலமுறை பார்த் துப், அதைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை அவள் மனத்திற் சிறிதும் குறையவில்லை. தான்

செய்யப் புறப்பட்ட காரியத்தையும், கறுப்பாயியின் கொடிய குணத்தையும், மழைபோற் பனி பெய்வதையும் முற்றிலும் மறந்து, தன் ஆவி முழுவதையும் அப்பொம்மைக்குத் தத்தஞ் செய்துவிட்டு நின்றாள் குழந்தை மோகனாள்.

அப்பொழுது ஏதோ வேலையாய்த் தன் கடையின் வாசலுக்கு வந்த கறுப்பாயி, மோகனாள் அங்கு நிற்பதைக் கண்ணுற்று, "ஏண்டீ போக்கிரிச் சிறுக்கி! தண்ணீர் கொண்டுவா வென்றால், தெருவில் வேடிக்கையா பார்த்துக்கொண்டு நிற்கிறாய்? இதோ உன்னைத் தொலைத்து விடுகிறேன் பார்!" என்று கோபாவேசத்துடன் கூவினாள். அவள் கடூர மொழிகள் காதிற்பட்டதும், மோகனாள் திடுக்கிட்டு அவ்விடத்தை விட்டுப் புறப்பட்டு, வெகு வேகமாய்த் தெருவோடு சென்றாள்.

காளியம்மன் கோயில் அவ்வூரின் ஒரு கோடியில் இருந்தது. சுடலைமாடனது சோற்றுக் கடையிலிருந்து அக்கோயில் வரைக்குந்தான் புதிதாகக் கடைகள் வைக்கப்பட் டிருந்தன. கோயிலுக்கப்பால் இருள் நிறைந்திருந்தது; ஜனப் புழக்கமுமில்லை. கோவிலுக்கும் சுனைக்கும் நூறுகஜ தூர மிருக்கும். அத்தூர முழுவதும் ஒரு தீபங்கூடக் கிடையாது. அச்சுனைக்கு அப்பால் கடம்பவனந்தான். அச்சுனைக்குப் போய்ச் சேர, பல புஞ்சைக் காடுகளின் குறுக்கே ஒற்றையடிப் பாதையில் போகவேண்டும்.

கடம்ப வனத்தில் நரிகள் ஊளையிடும் சத்தம் மிகவும் சமீபத்தில் கேட்டது. ஒவ்வொரு புதரும், ஒவ்வொரு மரமும், கோரமான பூதத்தின் வடிவத்தை யெடுத்துக்கொண்டு அவளைத் துரத்தின. அப்பயங்கரமான அந்தகாரத்திற் சென்று, காட்டு மிருகங்களினாலும், பேய் பிசாசுகளினாலும் கொல்லப்படுவதைவிட கறுப்பாயி கையினால் சாட்டையடி படுவது மேலெனவெண்ணி, மோகனாள் ஊரை நோக்கித் திரும்பினாள். சுனையில் தண்ணீரில்லை என்று சொல்லித் தப்பித்துக்கொள்ளலாமென்று தீர்மானித்தாள். ஆனால் பத்தடி எடுத்துவைக்குமுன், சாட்டையைக் கையிற் சுழற்றும் கறுப்பாயியின் கோர வுருவம் அவள் அகக் கண்ணுக்கு முன்னே தோன்றி அவளை யோசிக்கச் செய்தது. என்ன செய்வதென்று தோன்றாமல் சிறிதுநேரம் தியங்கினாள். பிறகு சுனைக்குச் செல்வதே சரியென்று தீர்மானித்து, சுனையின் புறமாகத்திரும்பி, ஒருபுறமும் திரும்பிப் பார்க்காமல் ஒரே ஓட்டமாய் ஓடி, அந்த நூறுகஜ தூரத்தையும் எப்படியோ வழிதவறாமல் கடந்து, சுனையை யடைந்து, தான் வழக்கமாய்ப் பிடித்துக்கொண்டு இறங்கும் மரத்தின் கிளையைப் பிடித்துக்கொண்டு இறங்கிக் குனிந்து தோண்டியை நீரில் வேகமாய்ப் பாய்ச்சி அதை நிரப்பிக்கொண்டு, பயத்தினால் அதிகரித்த பலத்தைக்கொண்டு தோண்டியை எளிதில் தூக்கித் தலைமேல் வைத்துக்கொண்டு கரையேறினாள்.

கரை யேறினவுடன் அதுவரையில் அவளுக்கிருந்த தைரியமும் பலமும் எங்கேயோ பறந்துபோய்விட்டன. ஏனெனில், அதுவரை வேகமாய் ஓடியதனால் ஒன்றையும் கவனிக்காதபடி தன் புலன்களைக் கட்டுப்படுத்திய மோகனாள், தன் தலையிலிருந்த தோண்டியின் பளுவினால் வேகமாய்ச் செல்ல முடியாமல், மெல்ல அடிபெயர்த்து வைக்கவேண்டி ஏற்பட்டு, தன்னைச் சூழ்ந்திருந்த அந்தகாரத்தையும், நரிகள் ஊளையிடும் சத்தத்தையும், எங்கும் வழியை மறைத்து நிற்கும் கரிய உருவங்களையும், ஊதற் காற்றில் இலைகள் அசைவதனா லுண்டாகும் பயங்கரமான சலசலப்பையும் அவள் கவனிக்கும்படி நேர்ந்தது. அவைகளைக் கவனித்ததும், அவள் கால்கள் சோர்ந்து கைகள் அயர்வுற்றன. தோண்டியைக் கீழே இறக்கி வைத்துவிட்டுக் கையைப் பிசைந்துகொண்டு நின்றாள். அவ்வந்தகாரம் அவளை வருத்திற்று. எங்கே பார்த்தாலும் அவளுக்குப் பயமாயிருந்தது. ஆகாயத்தில் வியாழன் சிவந்த ஒளி வீசிக்கொண் டிருந்தது. அது அஸ்தமிக்கும் சமயமானதினாலும், அதை மூடு பனி மூடிக்கொண் டிருந்ததினாலும், அது மிகவும் சிவப்பா யிருந்தது. மோகனாள் கொள்ளிவாய்ப் பிசாசுக் கதைகள் பல கேட்டிருந்தாளாகையினால், அது ஒரு பெரிய கொள்ளிவாய்ப் பிசாசு என்று அவள் புத்திக்குத் தோன்றிற்று. தனக்கு என்ன தீங்கு விளையு மென்பதை யோசிக்கத் திறமற்றவளே யெனினும், குழந்தை மோகனாள் தனக்குக் கெடுதி சம்பவிப்பது நிச்சயமெனத் தீர்மானித்தாள்; ஒன்றும் தோன்றாமற் சிறிது நேரம் மயங்கி நின்றாள். பிறகு மதுரை மீனாக்ஷி என்றால் பேய்கள் விலகும் என்று சொல்லக் கேட்டிருந்தது அவள் ஞாபகத்துக்கு வரவே, அவள் "மதுரை மீனாக்ஷி!"

"மதுரை மீனாக்ஷி!" என்று பலமுறை வாய் விட்டுச் சொன்னாள். தன் குரல் தன் காதுக்கு எட்டியதனாலும், மதுரை மீனாக்ஷி பெயரைச் சொன்னால் பேய்கள் விலகு மென்பதில் அவளுக்குப் பூரண நம்பிக்கை யிருந்ததனாலும், அவள் மயக்கம் சற்றுத் தெளிந்து அவள் தன்னைச் சுற்றி ஒரு முறை கவனித்துப் பார்த்தாள். அவ் அந்தகாரத்தை விட்டு எப்படியேனும் ஓடிப் போகவேண்டும் என்ற எண்ணம் அவள் மனத்தி லுதித்தது. உடனே அவள் ஓட ஆயத்தமானாள். அப்பொழுது காலண்டையி லிருந்த தோண்டி அவள் காலிற்பட்டு, தானிருப்பதை அவளுக்கு ஞாபகமூட்டிற்று. அதைக் கொண்டு போகாமற் போனால் உயிர் பிழைப்ப தரிதென் பதை யுணர்ந்து, மோகனாள் அதைத் தூக்கித் தலையில் வைத்துக்கொள்ள முயன்றாள். கைகள் அயர்ந்துபோ யிருந்தபடியால், அவளால் அவ் வாறு செய்ய முடியவில்லை. ஆகையினால் அவள் அதை இடுப்பில் வைத்துக்கொண்டு நடக்க ஆரம்பித்தாள். தோண்டி பளுவா யிருந்ததனாலும், அவள் இடுப்பில் கனமான ஆடையிருந்து அதைத் தாங்காததனாலும், தோண்டி அடிக்கடி நழுவிற்று; அப்படி ஒவ்வொரு முறை நழுவிய போதும், மோகனாள் சிறிது நேரம் அதை கீழே வைத்து இளைப்பாறி விட்டு, பிறகு அதை எடுத்து இடுப்பில் வைத்துக்கொண்டாள். அடிக்கடி அவள், "தாயே! மீனாக்ஷி! தூக்கமுடிய வில்லையே!" என்று சொல்லிக் கொண்டே போனாள். இவ்வாறு அவள், சுனைக்கும் ஊர்க் கோடிக்கு முள்ள தூரத்திற் பாதி கடந்தபின், மோகனாள் தன் இடுப்பிலிருந்த தோண்டியின் பளு குறைவதைக் கவனித்து நிமிர்ந்து பார்த்தாள். பெரிய கைகளையுடைய யாரோ வொரு மனிதன் தோண்டியைத் தூக்குவதைக் கண்டாள். மோகனாள் ஏனோ கூவவில்லை. அம்மனிதனைக் கண்டதும், அவள் மனத்தில் சிறிதும் பயம் ஏற்படாமல் அவனிடத்தில் ஒருவிதமான நம்பிக்கை உதித்தது. இது புல்லறிவுடைய மானிடர்களுக்கு ஈசன் அளித்த இயற்கை யறிவு போலும்! அவன் செயல்கள் யாவும் அற்புதமாகவே யிருக்கின்றன. பிறந்து பத்து நாட்களாகாத குழந்தையும், தன்னைப் பிறர் அணைத்துக் கொள்வதை யுணர்ந்து தன்னைத்தானே தேற்றிக்கொண்டு அழுகையை நிறுத்திவிடுகிறது! இதைக் காட்டிலும் அற்புதமான செயல் வேறு ஏதேனு முண்டோ? எங்கும் வியாபித்து நின்று, உயிர்க்குயிராகி, உயிர்த் தொகைக்கு உற்ற துணையாகி, உயிர்த்தொகையும் உயிர்த் தொகையைப் படைத்துக் காத்தழிப்பவனும் தானேயாகி, பலவித அற்புதச் செயல்களால் மானிடர் மனத்தை யுருக்கி அவர்களைத் தடுத்தாட் கொள்ளும் சர்வேசுவரனை - ஜகந்நாதனை - சுவாமி நாதனை - நாம் மெய்யன்புடன் வணங்குவோம்!

நான்காவது அத்தியாயம்

அவ்வேழை மந்திரவாதியோ?

மூந்திய அத்தியாயத்திற் கூறிய சம்பவங்கள் நிகழ்ந்த வன்றைய தினம் சாயங்காலம், அஸ்தமிக்க ஒரு நாழிகையிருக்கும்போது ஒரு மனிதன், மதுரைமா நகரத்தில் நிர்த்தன விநாயகர் கோவில் தெருவிலிருந்து தெற்கு ஆவணி மூலத் தெருவுக்குள் நுழைந்தான். அவன் கிழிந்ததா யிருந்தாலும் பரிசுத்தமானதாயுள்ள உடையை அணிந்துகொண் டிருந்தான். அவனைப் பார்த்தால் எவரும் அவன் மரியாதையாய்க் காலங்கழித்து வந்த பிச்சைக்காரன் என்றுதான் அபிப்பிராயப்படுவார்கள். அவன் தன் இடது கையில் ஒரு சிறு துணியிற் கட்டிய மூட்டையொன்றை வைத்துக்கொண்டிருந்தான். அவன் வலது கையில் ஏதோ காட்டு மரத்திலிருந்து வெட்டி வேலை செய்யப்பெற்ற பெரிய வெள்ளைத்தடியொன் றிருந்தது. அந்த வீதியில் அச்சமயத்தில் அதிகக் கூட்டமில்லையேயாயினும், அம்மனிதன் ஒருபுறமாக ஒதுங்கி யொதுங்கி நடந்துகொண் டிருந்தான்.

அக்காலத்தில் மதுரையில் ஆண்டுகொண் டிருந்த வீரபாண்டியன், தினந்தோறும் சாயங்காலம் இருபத்தைந்து நாழிகைக்கு மெய்க்காப்பாளர்களுடன் மதுரையிலிருந்து குதிரையின் மேற் சவாரி புறப்பட்டு விஜயமங்கலத்துக்குப் போகும் சாலையோடு இருபது மைல் போய்விட்டுத் திரும்புவது வழக்கம். அவ்வழக்கம் மதுரையிலும் சுற்று வட்டாரத்திலு முள்ளவர்களுக்குத் தெரியுமாதலால், அவர்கள் சாலையில் நடக்கும்பொழுது அரசன் வருகிறானென்று கவனித்துக்கொண்டே போய், அவன் வரும் சத்தம் கேட்டதும், சாலையின் ஓரத்தில் ஒதுங்கி நிற்பது வழக்கம். மேலே சொன்ன பிச்சைக்காரனுக்கு அது தெரியாதுபோலும்! ஏனெனில், அரசன் தெற்கு ஆவணிமூல வீதியில்

நுழைந்தபொழுது, அப்பிச்சைக்காரன் திடுக்கிட்டுப் பயந்து, திடீரென்று ஒரு சந்துக்குள் நுழைந்து வேகமாய் நடந்தான். அவன் அவ்வாறு பயந்து சென்றதைக் கவனித்த மெய்க்காப்பாளர் தலைவன், அவன்மீது சந்தேகங்கொண்டு, தெருவில் நின்ற காவலாளனொருவனை யழைத்து அம்மனிதனைப் பிடித்து வரும்படி கட்டளையிட்டான். உடனே அக்காவலாளன் விரைவாயோடி அப் பிச்சைக்காரன் நுழைந்த சந்துக்குள் நுழைந்து அவனைத் துரத்திக்கொண் டோடினான். ஆனால் அப்பிச்சைக்காரன் சற்று முன்னே ஓட ஆரம்பித்து விட்டதனாலும், கொடிச்சந்துகளை யெல்லாம் நன்றாய் அறிந்தவனாதலாலும், வெகு சீக்கிரத்தில் காவலாளன் கண்ணிற்படாமல் மறைந்து போய்விட்டான்.

அஸ்தமிக்க அரை நாழிகைக்கு அப்பிச்சைக்காரன் தெற்கு வாசல் சங்க வாயிலில் அமராவதி நகரத்துக்குப் புறப்படத் தயாராய் நின்றுகொண்டிருந்த அஞ்சல் வண்டியையணுகி வண்டிக்காரனை நோக்கி, "ஐயா! கலியாணபுரத்துக்குப் போவதற்கு இடங்கிடைக்குமா?" என்று கேட்டான். வண்டிக்காரன், "பெட்டியில் ஒரு ஆளுக்கு இடமிருக்கிறது" என்றான். அவ்வேழை "அப்படியானால் நான் வருகிறேன்" என்றான். வண்டிக்காரன் அவன் உடையையும், மூட்டையின் பரிமாணத்தையும் பார்த்துச் சந்தேகமுற்று, "துட்டெடு!" என்றான். அவ்வேழை வாய்திறவாமல் உள்ள கூலியைக் கொடுத்தான். பிறகு அவன் வண்டியின் முன்னேயுள்ள பெட்டியில் ஏறிக்கொண்டான்; வண்டியும் புறப்பட்டது.

போகும் வழியில் வண்டிக்காரன் அவ்வேழையுடன் வம்பளக்க முயன்றான். ஆனால் அவ்வேழை ஒவ்வொரு வார்த்தை பதில் சொல்லுவதுடன் நிறுத்திக் கொண்டான். பொழுது புகுந்து எங்கும் அந்தகாரம் நிறைந்தது. குளிர்ந்த காற்று சிறிற்று. வண்டிக்காரன் ஒரு துப்பட்டியை யெடுத்துப் போர்த்துக் கொண்டான். ஆனால் அவ்வேழை குளிரினாற் சிறிதும் கஷ்டமடைந்ததாகத் தெரியவேயில்லை. அவன் வாய்திறவாமல் ஏதோ யோசனையி லாழ்ந்திருந்தான். மதுரையிலிருந்து ஒன்பது மைல் தூரத்திலுள்ள மாரன்பட்டியிலுள்ள அஞ்சல் மண்டபத்தில் மாடுகளை மாற்றுவதற்காக வண்டி நின்றது. உடனே அவ்வேழை, "ஐயா! நான் இங்கேயே இறங்கிவிடுகிறேன்" என்று சொல்லிவிட்டு, தன் மூட்டையையும் தடியையு மெடுத்துக்கொண்டு வண்டியை விட்டுக் கீழே யிறங்கினான். க்ஷண நேரத்தில் எங்கேயோ போய்விட்டான். அஞ்சல் மண்டபத்தினருகேயுள்ள சோற்றுக் கடைக்குள் நுழையவில்லை யென்பது மட்டும் நிச்சயம்.

அவ்விஷயத்தைக் கவனித்த வண்டிக்காரன் வீசநாழிகைக் கெல்லாம் வண்டி புறப்பட்டுச் சாலையோடு சென்றபோது அம்மனிதனைச் சாலையிலும் காணாமல் ஆச்சரியமுற்று, "அம்மனிதன் இந்தப் பக்கத்து மனிதனல்ல வென்பது நிச்சயம். ஏனெனில், நான் அவனை இதற்கு முன் பார்த்ததேயில்லை; பார்த்தால் காசைக் கண்டறியாத ஏழைபோலிருக்கிறான்; ஆனால் பணத்தை அவன் இலக்ஷியஞ் செய்பவனல்ல வென்பது நிச்சயம்; ஏனெனில், முதல் அஞ்சலிலுள்ள மாரன்பட்டிக்கு வருவதற்கு, இரண்டாவது அஞ்சலிலுள்ள கலியாணபுரத்துக்குப் போவதற்குள்ள கூலியை அலக்ஷியமாய்க் கொடுத்தான். இப்பொழுதுதான் கீழே யிறங்கினான்; அதற்குள்ளாக எங்கேயோ மறைந்துவிட்டான். அவன் மந்திரவாதியோ என்னவோ, பூமிக்குள் தான் மறைந்திருக்கவேண்டும்? வேறு விதமாய் மறைவதற்கு வழியில்லை. இந்நேரம் என் பக்கத்தில் என்னைத் தொட்டுக்கொண்டு உட்கார்ந்திருந்தானே! அதனால் எனக்கு என்ன கெடுதி விளையுமோ! சுவாமிதான் காப்பாற்றவேண்டும்" என்று அச்சத்துடன் கூறினான்.

அம்மனிதன் மந்திரவாதியுமல்ல, பூமிக்குள் நுழைந்து மறையவு மில்லை. அவன் அச்சாலையின் வழியே சிறிது தூரம் விரைவாய் நடந்து சென்று, ஒரு சந்தில் நுழைந்து அவ்வூருக்கு மேற்புறத்தில் விஜயமங்கலத்துக்குப் போகும் ஒரு கிளைவழியை யடைந்து, அச் சுற்று வட்டார முழுவதையும் நன்றாய் அறிந்தவன்போல் சிறிதும் தியக்க மின்றி வேகமாய் நடந்தான். விஜயமங்கலத்துக்குச் சமீபத்திற் போனதும், அவன் ஊருக்குப் போகாமல் காட்டை நோக்கி நடந்தான். காட்டுக்குள் நுழைந்தபின், அவன் ஒவ்வொரு மரத்தையும் உற்றுப் பார்த்துக் கொண்டே நடந்தான்.

அவ்வாறு நடந்து சென்றவன், தான் வந்த வழி சரிதானா வென்று சந்தேகித்தவன் போல

ஒரு க்ஷணநேரம் தயங்கிநின்று, பிறகு மெல்ல நடந்து பெரிய வெள்ளைக் கற்கள் குவித்திருந்த ஒரு திறப்பை யடைந்து, அக் கற் குவியலை யணுகி அதை நன்றாய்ப் பரீட்சித்துப் பார்த்தான். பிறகு அக் கற்குவியலுக்குப் பத்தடி தூரத்திலுள்ள பெரிய மருதமர மொன்றை யணுகி, அதன் அடிப்புறத்தைத் தடவிப் பார்த்துத் தான் தேடிய மரம் அதுதானென்று நிச்சயித்து, பிறகு அம்மரத்துக்கு இருபதடி தூரத்திலுள்ள நுணுமரத்தினண்டை சென்று, அம்மரத்தின் நடுவிலுள்ள கவையை எட்டித் தடவிப் பார்த்துத் திருப்தி யடைந்த பின், அம்மரத்துக்கும் கற்குவியலுக்குமிடையே யுள்ள இடத்தில் புதிதாக மண்போர்க்கப்பட்டதாவென்று பரீக்ஷித்துப் பார்த்தான். பிறகு அவன் தான் நின்ற விடத்தைக் கவனித்துத் தான் வெளியே செல்ல வழி யெதுவென்று நிதானித்துக்கொண்டு மரங்களி னூடே பத்திரமாய் நடந்து விஜயமங்கலத்தை நோக்கிச் சென்றான்.

போகும்போது அவன் தனக்கு முன்னே ஒரு சிறு உருவம் அடிக்கொருதரம் நின்று நின்று குனிந்து நிமிர்ந்து மெல்ல நடப்பதைக் கண்டு ஆச்சரியமுற்று, அதென்ன வென்று பார்ப்பதற்காக விரைந்து நடந்து சென்று பார்த்ததில், ஒரு சிறு பெண் நீர் நிரம்பிய பெரிய தோண்டி யொன்றைத் தூக்கமுடியாமல் அடிக்கொருதரம் கீழேவைத்துத் தூக்கிச் செல்வதைக் கண்டு பரிதபித்து, அதை அவள் கையிலிருந்து வாங்கிக் கொண்டான். அச் சிறுமிதான் இரவில் கறுப்பாயியின் சவுக்குக்குப் பயந்து சுனைக்குச் சென்ற நமது மோகனாள். (தொடரும்.)

சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

CHILDREN'S & LADIES' PAGES

'அன்பிற்கு முண்டோ அடைக்குந்தாழ்' அல்லது "குற்றமறிந்த கோவிந்தன்"

[ஆசிரியர். தே. வீரராகவ அய்யங்கார் எழுதியது.]

வெகு காலத்திற்கு முன்பு, நல்லோர்கள் கூட்டுறவு முற்றும் அற்ற மலைநாட்டுக் கிராமங்களில் ஒன்றாய கண்டகபதி என்னும் ஒரு சிற்றூரில் கோவிந்தன் என்பான் ஒருவன் வசித்து வந்தான். அவன் பிறந்து வளர்ந்த குடும்பம் வறுமை வாய்ப்பட்டதாகையால், இவனும் தரித்திர வாழ்க்கையையே நடத்தும்படி ஏற்பட்டது. ஏழைக் குடும்பத்திற் பிறந்திருந்தா லென்னே? உடல்நலிய வருந்தி உழைப்பின் சிறப்படையலாமன்றோ? 'உழைப்பில் வாரா உறுதியு முளவோ' என்றார் நம்மடிகள். கோவிந்தன் முற்றும் சோம்பேறி. காலத்தின் அருமையைச் சிறிதும் அறியான்; உழைப்பின் சிறப்பைத் தேறான். அவனுக்கு உண்பதே உழைப்பு; உறங்குவதே மோக்ஷம். உடல் வலியால் வருந்தி வேலை செய்து அதனால் வரும் ஊதியத்தைக்கொண்டு பிழைக்காது, பொய் சொல்லியும், திருடியும் ஜீவனம் செய்துவந்தான். தான் உலகில் வாழ்ந்த 80 வருடங்களில் ஒருமுறையாவது அவன் ஒரு சிறு நற்செயலும் செய்ததே கிடையாது. கடவுளின் தூய நாமத்தை ஒரு மாத்திரை அளவும் கருதியதும் கிடையாது. இவ்வாறு இருந்துவரும் நாளில், வயோதிகப் பருவம் வந்து இவனைச் சூழ்ந்துகொண்டது. மூப்பு மூடிக்கொள்ளவும் உடல் வலி குறையத் தலைப்பட்டது. வலிகுன்றவும் பொருள் தேடுவதற்குத் திறனில்லாது போயிற்று. போதிய ஆகார மின்மையாலும், மூப்பினாலும், வியாதிமுதிரவும் படுக்கையிலேயே கிடக்கும்படி நேரிட்டுவிட்டது. இப்பொழுதாவது உடலின் நிலையற்ற தன்மையையும், உலகின் மாயையும், கடவுளின் சக்தியையும் அறிந்து கடவுளை வழிபடத் தொடங்கினானில்லை. இறுதியாக புலன்களெல்லாம் பொறி கலங்கி தத்தம் வழிகளிற் செல்லத் தலைப்பட்டுவிட்டன. கண் பஞ்சடையவும், காலன் வரும் நேரமும் கடுகி வந்துவிட்டது. இச்சமயத்தில் ஏதோ அவன் முற்பிறப்பிற் செய்த நல்வினைப் பயனால் தான் செய்த குற்றங்களை அறிந்து, அதற்காக மனமுளைந்து கண்ணீர்விட்டு கடவுளைநோக்கி, "என் ஐயனே, கருணையங் கடவுளே! அருளுருவே!

நாயேன் அறியாது செய்த பிழைகளை யெல்லாம் பொறுத்து நின் திருவடியில் என்னைச் சேர்த்துக் கொள்வது நின் பாரம். என்னைப்போற் குற்றம் புரிந்தாரிற் பெரியவர் யாருமிலர். மன்னிப்பதில் உன்னைவிடப் பெரியார் ஒருவருமிலர். மகா காதகர்களிடம் மறக்கருணை செய்து அவர்களை ஆட்கொண்ட கருணாகரனல்லவோ நீ? எனக்கு நின் தாளே சரண்" என்று சொல்லி முடிப்பதற்குள் அவன் உயிர் உடலை விட்டு நீங்கியது.

சாகுந்தருவாயில் இவன் மனம் கடவுளை நாடினபடியாலும், ஆண்டவன் அருளில் நம்பிக்கை வைக்கத் தலைப்பட்டபடியாலும் இவன் ஆன்மா, மோக்ஷ உலகைக் கிட்டியது. இவன் ஆன்மா முக்தி உலகை யடைந்த காலத்தில் முக்தி உலகின் வாயிற் கதவானது அடைபட்டிருந்தது. கதவு அடைபட் டிருக்கவே, யாத்தனு சரீரத்துடனிருக்கும் கோவிந்தன் கதவைத் திறந்து, தன்னைக் கடவுளின் திருமுன் கொண்டு சேர்க்கும்படி அறை கூவிக் கதவைத் தட்டினான். தட்டவும், உள்ளிருந்து ஒரு சப்தம், "இம்முக்தி உலகின் வாயில் வந்து கதவைத் தட்டும் மனிதனின் இயற்கை எத்தகையது? இவன் பூவுலகில் வாழ்ந்த நாட்களில், இவ்வுலகிற்கு வரவேண்டியதற்காகச் செய்ய வேண்டிய நற்செயல்கள் யாது செய்திருக்கின்றான்?" என்று கேட்டது.

அதற்குக் கோவிந்தன் தான் பிறந்தது முதல் இறக்கும் வரையிலும் செய்த குற்றங்களை யெல்லாம் யெடுத்துச் சொல்லி, தான் ஒரு நற்செயலும் புரியவில்லை யென்பதையும் ஒப்புக்கொண்டான்.

இதைக் கேட்டதும் உள்ளிருந்து வரும் சப்தமானது, "பாபிகளுக்கு மோக்ஷ உலகில் இடம் கிடையாது. ஆகையால் இவ்விடத்தை விட்டு விரைவில் அகலுவாயாக" என்று சொல்லிற்று.

உடனே கோவிந்தன், "ஐயா! பெரியோரே! தங்களது குரலைமட்டும் யான் கேட்கின்றேனே யல்லாது, தங்களது இன்முகத்தைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றிலேன். தங்கள் திருப்பெயர் யாதோ? அறிகிலேன்" என்றான்.

அதற்கு விடையாக அச்சப்தம், "உலகில் ஞானத்தைப் பரப்பிய ஞானவொளி யென்பவன் யானுவேன்" என்றது.

இதைக் கேட்டு மனமுளைந்த கோவிந்தன், "ஐயா! மானிடர்களது குற்றமுள்ள இயற்கையையும், கடவுளின் எல்லையற்ற கருணையையும் அறிந்து அடியேன்மேல் கருணை வைப்பீராக. தாங்கள் பரந்தாமனது பரம பக்தர் அல்லவா? அவரது உபதேசங்கள் யாவும், தாங்கள் நன்கறிந்தவைகளல்லவா? மகா பாதகர்களையெல்லாம் ஆண்டவன் மன்னிக்கவில்லையா? தாங்கள் பூவுலகில் வதிந்த காலத்திற் புரிந்த குற்றங்களை யெல்லாம் அவர் மன்னிக்க வில்லையா? தங்களைப் போல்தான் யானும் குற்றங்கள் புரிந்தேன். இப்பொழுது அவைகளுக்காக வருந்துகிறேன். தாங்கள் என்னை உள்ளே விட மறுப்பது தகாது" என்றான். இதைக்கேட்டதும், மோக்ஷ உலகின் உள்ளிருந்து வரும் சப்தமானது ஒன்றும் பேசாது சும்மா விருந்துவிட்டது.

சிறிதுநேரம் கோவிந்தன் தாழ் திறந்தபிறகு, தன்னை உள்ளே விடும்படி மறுபடியும் கதவைத் தட்டினான். கதவு தட்டும் ஓசை கேட்கப்படவும், இரண்டாவது சப்தமானது உள்ளிருந்து, "இம் முக்தி உலகின் வாயிலில் வந்து கதவைத் தட்டும் மனிதனின் இயற்கை எத்தகையது? இவன் பூவுலகில் வாய்ந்த நாட்களில் இவ்வுலகிற்கு வரக்கூடிய செயல்கள் யாது செய்திருக்கின்றான்?" என்று வினவியது.

இதைக்கேட்ட கோவிந்தன், தான் குற்றங்களை மிகவும் புரிந்தவனென்றும், தன் வாழ்நாளில் நல்லது ஒன்றுகூடச் செய்ததில்லை யென்றும் சொன்னான்.

இதைக்கேட்ட உள்ளிருந்து வரும் சப்தமானது, "பாபியான உனக்கு இவ்விடத்தில் இடம் கிடையாது. பதிலுரையாது இவ்விடத்தை விட்டு அகலுவாயாக" என்றது.

ஆனால் பாபியான கோவிந்தன், "ஐயே! தங்களது மொழிகளின் ஓசையைக் கேட்கின்றேனேயன்றி, தங்களது முகத்தைத் தரிசிக்கவில்லை. தங்களது திருப்பெயரையும் அடியேன் அறிகிலேன்" என்றான்.

அதற்கு உள்ளிருந்து வரும் சப்தம், "உலகில் வாழும் அரசர்களுக்குள் சிறந்து விளங்கி தர்மத்தை நிலைநாட்டிய தர்மவியாதன் என்னும் அரசன் யானுவேன்" என்று விடை பகர்ந்தது.

அதைச் செவிமடுத்த கோவிந்தன், "தர்மவியாத அரசே! மனிதர்களது குறைகளையும், கடவுளது எல்லையற்ற கருணையையும் நன்கறிந்த

தாங்கள், எளியேன்பேரில் இரக்கம் கொள்வீராக. கடவுள் மற்ற மானுடர்களை விடத் தங்களிடத்தில் அன்புகாட்டி இப்பதவியிற் கொண்டு சேர்த்திருக்கின்றார். உலகில் வாழ்ந்த காலத்தில், தாங்களும் எவ்வளவோ தீமைகள் புரிந்தீர்கள். வழிபோர்களிடமிருந்த பொருள்களையெல்லாம் வாரிக்கொண்டீர்கள். அநேகரைக் கொன்று இருக்கின்றீர்கள். ஆனால் கடவுளின் திருமுன்னில், "எனது பாவங்களை ஒப்புக்கொண்டு, அதற்காக நான் வருந்துகிறேன்" என்று உறுதிமொழி பகர்ந்தீர்கள். கடவுள் தங்களது பாவங்களை மன்னித்துத் தங்களை ஏற்றுக் கொண்டார். அஃதே போன்று யானும் வருந்துகின்றேன். என்னை உள்ளே விட மறுத்தல் தங்களுக்குத் தகாது" என்றான்.

இதைக் கேட்டதும், தர்மவியாதன் குரல் ஒன்றும் பேசாது சும்மா இருந்துவிட்டது.

சிறிது நேரம் கழித்ததும், மறுபடியும் கோவிந்தன் தன்னை மோக்ஷ உலகில் விடுமாறு கதவைத் தட்டினான். தோன்றாத் துணையிருக்கும் கடவுள், கோவிந்தனுக்கும் முக்தி உலகவாசிகளுக்கும் நடந்த சம்பாஷணையைக் கேட்டுக்கொண்டிருந்து, கோவிந்தன் இறுதியாகக் கதவைத் தட்டும்பொழுது வந்து, முக்தி உலகின் கதவைத் திறந்து அங்கிருந்தோர் அனைவரும் வியக்கும்படியாக கோவிந்தனைக் கட்டித் தழுவிக் கொண்டு, அவனைத் தன் பக்கத்தில் அமர்த்திக் கொண்டு அண்டையி லிருந்தோரை நோக்கி,

"பாதியா யழுகிய கால் கையரேனும்
  பழிதொழிலும் இழிகுலமும் படைத்தா ரேனும்
ஆதியா யரவணையா யென்பா ராகில்
  அவரன்றே யாம்வணங்கு மடிக ளாவார்
சாதியால் ஒழுக்கத்தான் மிக்கோ ரேனுஞ்
  சதுர்மறையால் வேள்வியால் தக்கோரேனும்
போதினன் முகன்பணியப் பள்ளி கொள்வான்
  பொன்னரங்கப் போற்றாதார் புலையர் தாமே

என்று சொல்லி கோவிந்தன் எவ்வளவு பாபியாயினும், எப்பொழுது தான் செய்த குற்றங்களை ஒப்புக்கொண்டு அதற்காக வருந்தித் தன்னை அடைந்துவிட்டானோ, அவன் தூயோனே என்று சொல்லி எல்லோரது ஐயத்தையும் போக்கினார். குற்றத்தை அறிந்து ஒப்புக்கோள்வதாலும், பகவன் நாம உச்சாரணத்தாலும் ஆகாதது ஒன்றுண்டோ?

பிரபஞ்ச வர்த்தமானம்

NEWS AND NOTES

ஸர். டி. முத்துஸாமி ஐயரின் 100-வருஷக் கொண்டாட்டம்.—இது மிக்க விமரிசையாய், சென்னை ஹைகோர்ட் கட்டிடத்தில், ஸர். வி. வி. குமாரசாமி சாஸ்திரியா ரவர்கள் தலைமையில் செவ்வனே நடந்தேறியது. இக்கொண்டாட்ட ஏற்பாடுகளுக்குக் காரணஸ்தர் ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாசய்யங்கார் ஆவர். பிரபலஸ்தர் பலரும், அநேகமாய் எல்லா ஹைகோர்ட் ஜட்ஜ்களும் விஜயஞ் செய்திருந்தனர். ஸர். அல்லாடி கிருஷ்ணசாமி ஐயரவர்கள் வந்திருந்தவர்களை வரவேற்று அருமையானதொரு பிரசங்கம் செய்தார். தலைவர் பிரசங்கமும் மிகவும் அழகாயிருந்தது. ஸர். வி. ராமேசம் பந்துலு, திவான் பஹதூர் ஸ்ரீமான் வி. ஆர். திருவேங்கடாசாரியார், ஸ்ரீமான் வி. வி. ஸ்ரீநிவாசய்யங்கார் ஆகிய பலர், ஸர். முத்துசாமி ஐயரின் உயர்ந்த குணங்களை எடுத்துப்பேசினர். ஸர். முத்துசாமி ஐயரின் பேரப்பிள்ளையான ஸ்ரீமான் டி.எஸ். ராமசுவாமி ஐயரவர்கள் (இப்போது நமது நகரசபைத் தலைவர்) காலஞ்சென்ற பெரியாரின் ஞாபகார்த்தமாக ஒரு பெரு நிதி உதவி, அதைத் தகுந்த விதத்தில் விநியோகிக்கும்படி கொடுக்கவிருப்பதை ஸர். அல்லாடி கிருஷ்ணஸாமி ஐயர் அறிவித்தது இங்குக் குறிப்பிடத் தகுந்தது. அடுத்த இதழில், இப் பெரியாரின் திவ்ய சரித்திரத்தை, அவரது உருவப் படத்துடன் பிரசுரிப்பதுடன், 100-வது வருஷக்கொண்டாட்ட காலத்து நமது தலைவர்களின் பேருரைகளின் சுருக்கத்தையும் வெளியிடுவோம்.

* * *

சுத்தமான பசுவின் பால்.—இந்நாட்டில் தாய்ப்பால் இல்லாத குழந்தைகளுக்கு, டப்பிப் பாலையே உபயோகப் படுத்துகிறார்கள். அதன் மூலம் அநேகம் குழந்தைகள் இறக்கின்றன. டப்பிப் பாலில் 'விடமின்ஸ்' என்ற போஷணைக் கருவிகள் இல்லாததால், குழந்தைகள் பார்வைக்குப் புஷ்டியாய் இருந்தாலும், அங்க வளர்ச்சி ஏற்படுகிறதில்லை. டின் பால் உபயோகத்தால் குழந்தைகளின் பற்கள் சீக்கிரம் கெட்டுவிடுகின்றதாம். அநேக பிரபல டாக்டர்கள் இதே அபிப்பிராயத்தை வெளியிடுகின்றனர். ஆகையால் சுத்தமான பசுவின் பாலையே குழந்தைகளுக்கு உபயோகிக்க வேண்டும். இதுவே எவ்விதத்திலும் உத்தமமானது.



கும்பகோணம் ஸ்ரீ சாரங்கபாணி கோயிலும் குளமும்